# திருவிசைப்பா ஒளிநெறி



# திருவிசைப்பா
# ஒளிநெறி



கழக வெளியீடு

கழக வெளியீடு ௧௪௬௧



உ

திருச்சிற்றம்பலம்

# திருவிசைப்பா ஒளிநெறி



ராவ்பகதூர் தணிகைமணி

டாக்டர் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

(முதல் எட்டுத் திருமுறைகளின் ஒளிநெறி ஆசிரியர்)

எழுதியது.



திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,

1/140, பிரகாசம் சாலை, சென்னை - 1.

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1

1972

வடக்குப்பட்டு சுப்பிரமணிய பிள்ளை செங்கல்வராய பிள்ளை (1883)

1972 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 November 1972



# THIRUVISAIPPA OLINERI

Appar Achakam, Madras-1. (-/5)

# பதிப்புரை

[illegible]ன்னுடைய சிவபெருமான்மீது ஆரா அன்பினால் உளங் [illegible] பாடிய பாடல்கள் தேவார முதலிய பன்னிரு [illegible]ளாகும். ஆளுடைய பிள்ளை, ஆளுடைய அரசு, ஆளுடைய [illegible] பாடியருளிய தேவாரப் பதிகங்கள் ஏழு திருமுறைக [illegible]. ஆளுடைய அடிகள் அருளிய திருவாசகமும், திருக்கோவை [illegible] திருமுறையாகவும் வகுக்கப்பெற்றன.

[illegible]ளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர் முதலிய [illegible] அருளிச்செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு [illegible]தாந் திருமுறையாகும்.

'[illegible] ஒளிநெறி' என்னுந் தலைப்பில் திருஞான சம்பந்தர் [illegible]ங்கட்கு கசுOO பக்கங்களில் மூன்று பகுதிகளும், [illegible] தேவாரப் பதிகங்கட்கு கஎO பக்கங்களில் இரண்டு [illegible] சுந்தரர் தேவாரப் பதிகங்கட்கு எசO பக்கங்களில் [illegible], [illegible] திருவாசகத்துக்கு சுசசு பக்கங்களில் [illegible], திருக்கோவையார்க்கு சசச பக்கங்களில் ஒன்றும் ஆக [illegible]கள் திருமுருகன் திருவருட்செல்வராந் தவத்திரு [illegible] வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்களால் எழுதப் [illegible] வாயிலாக வெளியிடப்பெற்றுள்ளன. இவையனைத் [illegible] நூலாக ஒளிநெறிக் கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

[illegible] ஒளிநெறி முடியத் தணிகைமணியவர்கள் தம் கைப் [illegible] என்பதும், திருக்கோவையார் ஒளிநெறியும், திரு [illegible] ஒளிநெறியும் சொல்லி எழுதப்பெற்றவை என்பதும் [illegible].

[illegible] 86[illegible], மேல் வயதாகி நோய்ப்பட்ட நிலைக்கிடையே [illegible] ஒளிநெறியும், கட்டுரையும் எழுதப்பட்டன. [illegible] தணிகை எம்பெருமான் திருவருள் இப்போது திரு [illegible] ஒளிநெறியும் கட்டுரையும் எழுதும்படி வைத்துள்ளது.

அவர் திருவருளால் முடிவுபெற வேண்டும்'' என்று திருக்கோவையார் ஒளிநெறி முகவுரையில் எழுதியபடி தணிகைமணி ஐயா அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி யருளினன் என்பதற்கறிகுறியே இந்நூல்.

இந்நூல் அச்சிடப் பெறுகையில் வழக்கம்போல் மெய்ப்பினைத் திருத்துதற்குத் தாம் உயிரோடிருப்பதில் நம்பிக்கையிழந்த நிலையில் சொல்லி எழுதச் செய்த கையெழுத்துப் படியைத் தமது கண்ணொளி மங்கிய நிலையிலும் ஒருமுறைக்கிருமுறை ஊன்றிப் பார்த்துத் திருத்திக் கழக ஆட்சியாளரிடம் 1971 சூன் திங்களில் ஒப்புவித்து இதனை விரைந்து அச்சிட்டு வெளிப்படுத்தும் பொறுப்பு நுங்களுடையதே என்று சொன்னார்கள். அதற்கு ஆட்சியாளர் 'ஐயா இன்னும் பத்தாந் திருமுறை இருக்கிறதே. அதற்கு ஒளிநெறி எழுதி முடிக்குங்காறும் தணிகைப் பெருமான் தங்கள் வாழ்நாளை நீட்டித் தருள்வான்' என்று சொல்லியதைக் கேட்டுப் புன்முறுவல் காட்டினர்.

ஒன்பதாந் திருமுறை முடிய அவர்கள் செய்த அருட்பணி போதும் என்று 25—8—1971இல் சிவபெருமான் தணிகைமணி ஐயா அவர்களின் ஆருயிரைத் தன் திருவடி நிழலில் அமர்த்தியருளினன்.

ஐயா அவர்கள் ஒன்பதாந் திருமுறைக்கு எழுதிய ஒளிநெறிக் கட்டுரை அச்சிடப்பெறுகின்றது.

இத்தகு அருட்பெருஞ் செய்தற்கரிய சிவத்தொண்டினைச் செய்த அருளாளர்க்கு நாம் செய்யுங் கைம்மாறு வெளியிடப்பெற்றுள்ள ஒளிநெறி, ஒளிநெறிக் கட்டுரை நூல்களை வாங்கிப் போற்றுவதே யாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ
திருத்தணிகேசர் துணை

# திருவிசைப்பா ஒளிநெறி

## முகவுரை

**மாளிகைத் தேவன் முதன்மதுர வாக்கினர்தந்**
**நாளிணைவைப் பரமெந் தலை.**

—சைவசமய நெறி, பாயிரம் 13

திருக்கோவையார் ஒளிநெறி முகவுரையிற் கூறியபடி வயது முதிர்ந்த காலத்திற் பிழையின்றி ஒருநூல் எழுதுவது எளிதான காரியமன்று. ஆயினும் இறைவன் திருவருளை நம்பி 6—4—1969 தேதியில் இத்திருவிசைப்பா ஒளிநெறியையும் கட்டுரையையும் எழுதத் துணிந்தேன். ஒருவகையாக அவர் துணையினால் எழுதி முடித்தேன்.

செம்பொன்மணி யம்பலத்து நிருத்த னூர்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தந் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனூர் கருவூர்த் தேவர்
நம்பிகாடவர் கோன்நற் கண்டரா தித்தர்
நல்குயர் வேணாட்டடிகள் திருவாலி யமுதர்
அம்புவிபோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகவிவ ரொன்பதின்மர் தாமுறைகண் டடைவே.

கீழ்வரும் பாடலால் திருவிசைப்பாப் பாடியவர் ஒன்பதின்மர் ஆவார்கள்; ஆயினும் திருவிசைப்பாச் செய்தவர்கள் பெயர்.

''சீரார்மா ளிகைத்தேவர் கருவூர்த் தேவர்
நிகழ்நம்பி கண்டரா தித்தத் தேவர்,

பாரான்வே ஞட்டடிகள் திருவாலி யமுதர்
பரவுபுரு டோத்தமர்பண் புனசேதி ராயர்
ஏராரும் இளம்பெருமான் அடிகள் சேந்தர்
எண்ணில்அதி ராவடிக ளிவர்க ளோடும்
பாராளுங் கல்லாடர் பட்டினத்துப் பிள்ளை
பரவுதிரு விசைப்பாவைப் பாடி னாரே''

எனச் சைவ சமயநெறி பக்கம் 7 இல் கண்டிருப்பதால் பட்டினத்தாரும் திருவிசைப்பாப் பாடினதாகத் தெரிகின்றது. பின்வரும் இரண்டு பாடல்கள் அவர் பாடினதாகத் திருவெண்காட்டுப் புராணத்தில் இருக்கக் கண்டேன்.

1. உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே உரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவநா ளெல்லாம்
விண்ட தாமரைமேல் அன்னம் வீற்றிருக்கும்
விழவறா வீதி வெண்காடா
அண்டரே காண அம்பலத்தாடும்
ஐயனே! உய்யுமா றருளே.

2. கோடியல் மனத்தால் வாக்கினுஞ் செயலால்
கொடியஐம் புலன்களால் அடியேன்
தேடிய பாவம் நரகமும் கொள்ளா
செய்தவம் புரியினும் தீரா,
வீடிய பிரமர் சிரமெலாம் கவர்ந்த
விழவறு வீதிவெண் காடா
ஆடிய பாதா! அம்பலத்தாடும்
ஐயனே! உய்யுமா றருளே.

பட்டினத்தாரே யன்றி இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், கல்லாடர் ஆகிய இம் மூவரும் கூடத் திருவிசைப்பா பாடினதாக மேற்சொன்ன பாடல் கூறுகின்றது. இவர்கள் பாடிய பாடல்கள் பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள.

பதினொராந் திருமுறையில் சேர்க்கப்படாமல் இவர்கள் பாடிய இசைப்பா வேறு இருந்தனவோ இல்லையோ தெரிய வில்லை.

இறைவன் திருவருளால் பட்டினத்தார் பாடிய இரண்டு இசைப்பாப் பாடல்களேனும் கிடைத்தனவே என்று மகிழ்ச்சி யுறுகின்றேன்.

வழக்கம்போல இந்த ஒளிநெறியையும் அச்சிட்டு வெளியிட விழைந்த கழக ஆட்சியாளர்க்கும் அவர் உறுதுணையாயிருந் தோர்க்கும் எனது பெருநன்றி உரித்தாகும்.

வ. சு. செ.
9—6—71.

## திருஇசைப்பா ஒளிநெறி

# உள்ளுறை

பக்கம்

# க. சிவபிராற் பகுதி

---

## உ. (தில்லை முதலாம்) தலப்பகுதி

பக்கம்

## ௩. ஆ[illegible]பொருட் பகுதி

## ௩. (1) பாடினோர் பகுதி



---

## ௪. (2) திருவிசைப்பாப் பாடிய ஒன்பது ஆசிரியர்களைப் பற்றிய சிறப்புக் குறிப்பு



— —

## ரு. இலக்கணப் பகுதி

## ௯. பிறபொருட் பகுதி

உ

# திருஇசைப்பா ஒளிநெறி

## முற்சேர்க்கை 1

—:o:—

### ஒப்புமைப் பகுதி

1-1 சித்தத்துள் தித்திக்கும் தேனே!

**தேனாய் இன்னமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்**
**—திருவாசகம் 38-10**

1-1 உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே!

**உணர்ந்தார்க்கு உணர்வு அரியோன்—திருக்கோவையார்**

1-2 அயனொடு மால் அறியாமைப் படரொளி பரப்பிப் பரந்து நின்றாயை.

**கண்ணன்......மலரானொடுங்கூடி......அறியாமை பெழுந்த தோர் அழல்—சம்பந்தர் 2-5-9**

1-2 சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கு தூய நற் சோதியுட் சோதி

**சோதியாய் நிறைந்தான் சுடர்ச் சோதியுட் சோதியான் சம்பந்தர் 2-6-7**

1-6 வேறணி புவன போகமே.

**வேறு—புதுமை**
**வேறணிந்த கோலமுடை வேடர்போலும் - அப்பர் 6-53-3**
**வேறு—சுந்தரர் 7-28-8**
**புங்கமான போகமே—திருவாசகம் 5-71**

1-9 எச்சன்வன் தலையும்....விண்டு உருள ஒண் திருப்புருவம் நெறித்தருளிய உருத்திரனே.

**எச்சன் தலை உருண்டான்—அப்பர் 6-26-3, 6-52**

1-10 புரம் வெந்தவிய வைதிகத் தேரேறிய ஏறு சேவகனே.

முப்புரம் அம்பொன்றினுல்......கரக்கமுன் வைதிகத்தேர் மிசைநின்றன் இன்னம் பரான்றன இணையடியே—அப்பர் 4-100-5

2-10 பேர்கள் ஆயிரம் நூறுருயிரம்.

**பூவனூர்ப்புனிதன் திருநாமந்தான் நாவில் நூறு நூருயிரம் நண்ணினுர்—அப்பர்** 5-65-1

3-1 கொற்றச் சிலை கொண்டு பன்றிப் பின் சென்று நின்ற மறவா.

**வேடனுய் விசயன் தன் வியப்பைக் காண்பான் வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின் பின் கூடினுர்—அப்பர்** 6-83-5

3:1-12 (1) மகேந்திரமலை மேல் உறையும் குறவா!;

(2) மகேந்திர வெற்பா!

(3,4) மகேந்திர மாமலை மேலிருந்த தேனே; மருந்தே.

(5) மகேந்திரத்(து) அந்தரப்புட்(கு) அரசுக்கரசே!

(6) மகேந்திரச்சாரல்....வேடர் கடிநாயுடன் கைவளைந்தாய்

(7) மகேந்திர நாத!

(8) மகேந்திரத்தில் வளர் நாயகா!

(9) மகேந்திரமாமலை மேல் சுரவா!

(10) மகேந்திரப்பொன் மலையின் மலைமகளுக்கருளுங் குரு நீ.

(11) மகேந்திரம்சூழ மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற்குற்றுய்!

(12) மகேந்திரத்து உன் அடியார் பிழை பொறுப்பாய்.

(1) சோதி மகேந்திர நாதன் வந்து தேவர் தொழும் பதம் வைத்த ஈசன்- —திருவாசகம் 43-9

(2) **மகேந்திர மாமலை மகேந்திர வெற்பின் அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்** 2-100-101

(3) **மன்னு மாமலை மகேந்திரமதனிற், சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்** 2-9-10

(4) **மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும், மற்றவை தம்மை மகேந்திரத்திருந்துற்ற ஐம்முகங்களாற் பணித்தருளியும்** 2-18-20

(5) வேடுருவாகி மகேந்திரத்து, மிகுகுறை வானவர் வந்து
தன்னைத்தேட இருந்த சிவபெருமான்—திருவாசகம் 43-4

4-1 தில்லை வாணன்....அடியார்கள் வன்மைக் குணங்களைக் கூற ....பிணங்களைக் காணு கண்வாய் பேசா(து) அப்பேய்க ளோடே.

3-11 பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன்.

அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்—அப்பர் 6-95-6

3-12 அவனிச் சிவலோகம்

அப் பாண்டிநாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த அப்பார்
சடையப்பன்—திருவாசகம் 8-11

ஈசனுக்கு அன்பில்லார்......பேசுவதென் அறிவிலாப் பிணங்
களை நாம் இணங்கில், பிறப்பினிலும், இறப்பினிலும்
பிணங்கிடுவர் விடுநீ —சிவஞானசித்தியார் 3-20

4-1 இணங்கிலா ஈசன்.

இணங்கிலி—திருவாசகம் 22-4

4-2 எட்டுருவிரவி.

இரு நிலனாய்த், தீயாகி; நீருமாகி, இயமானனாய், எறியுங்
காற்றுமாகி, அருநிலைய திங்களாய் ஞாயிறாகி, ஆகாச
மாய், அட்டமூர்த்தியாகி—அப்பர் 6-94-1

4-2 பிட்டரைக் காணுகண் வாய் பேசாது.

பிட்டர் சொல்லை விட்டுளோமே—சம்பந்தர் 3-40-10

4-2 பிழம்பு பேசும் பிட்டர்

கசிவொன்றில்லாப் பிட்டர்—சம்பந்தர் 3-91-10

4-3 கழுக்களாய பிரட்டர்

கடுக்கள் தின் கழுக்கள்—சம்பந்தர் 3-91-10
கையிலுண்ணும் கழுக்கள்—சம்பந்தர் 3-104-10
திரட்டிரைக் கவளம் திணிக்கும் சமண்—பிரட்டரை—
அப்பர் 5-58-7

4-4 சிதம்பரைச் சித்தை யூத்தைப் பிணுக்கரை.

சித்தையைச் சிதம்பு தன்னை—அப்பர் 4-75-7

4-5 திசைக்குமிக் குலவு சீர்த்தித் தில்லை.

திக்கெலாம் புகழ் உறும் திருநெல்வேலி—சம்பந்தர் 3-92-7

**எத்திக்கும் உற்ற புகழ் வெற்றித் திருத்தணி—திருப்புகழ்** 306

4-8 எக்கரைக்குண்ட மிண்ட எத்தரை.

**எக்கராம் அமண் கையர்—சம்பந்தர்** 3-39-11

4-8 குண்ட மிண்ட எத்தர்.

**வெஞ்சொல் மிண்டர்—சம்பந்தர்** 3-49-10

4-9 அச்சங்கொண்டு அமரர் ஓட

**சிந்தித் திசை திசையே தேவர்களை ஒட்டுகந்த—திருவாசகம்** 3-15

4-10 விண்ணவர் மகுட கோடி மிடைந்தொளிர் மணிகள் வீசும்....அம்பலவன்.

(1) **விண்ணவர் மகுட கோடி மிடைந்த சேவடியர் போலும் —அப்பர்** 4-72-1

(2) **புரந்தரன் மாலயன் பூசலிட்டோல முட்டின்னம் புகலரி தாய் இரந்து இரந்து அழைப்ப—பல்லாண்டு** 5

4-10 பெண்ணரைக் காணுகண், வாய் பேசா(து) அப்பேய்க ளோடே.

**நீணிலா அணியினானை நினைந்து நைந்துருகி......நின்றேத்த மாட்டா "ஆணலா தவரைக் கண்டால் அம்ம? நாம் அஞ்சு மாறே"—திருவாசகம்** 35-10

4-10 தெண்ணரைத் தெருளா உள்ளத் திருளரைத்....திட்டை முட்டைப் பெண்ணரை.

**பெண்ணகத் தெழிற் சாக்கியப் பேயமண் தெண்ணர் —சம்பந்தர்** 3-47-3

4-11 செம்பொன் அம்பலவற்(கு) ஆளாம் உறைப்புடை மெய்யடி யார் கீழ்க்கீழ் உறைப்பர் சேவடி நீறு(பு) ஆடார் இறப் பொடு பிறப்பினுக்கே இனியராய் மீண்டும் மீண்டும் பிறப்பர்.

**திருவீழி மிழலையான் திருவடி நிழற்கீழ்ப் புக்கு நிற்பவர் தம் பொன்னடிக் கமலப்பொடி யணிந்து) அடிமை பூண்டேன்** 5-6

5-1 புயல் வணற்(கு) அருளிப் பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த மேக நாயகன்.

(1) **மேக நல்லூர்தியர்—அப்பர்** 4-16-2

வியன் கொண்டல் மேற்செல் விகிர்தர் போலும்—அப்பர் 6-16-4

(2) பாதிரிப் புலியூரின் மேகவாகனர் அடிபணிபவரெனப் பாதிரிப் புலியூர்க் கலம்பகம். —கலம்பகம் 59

கருமுகிலாய்ச் சுமப்பவனே—வாட் போக்கிக் கலம்பகம் மேனிக் கொப்பு முகிலுடை முகிலாய்—வீரவனப் புராணம், சோழன் மகப். 11

அரும்பதவுரை.

(3) பாரொடு விரிஞ்சன் தன்னைப் படைத்திடப் பன்னுன் மாயன், காரென வந்து முக்கட் கடவுளைப் பரித்ததே போல்—கந்தபுராணம் சூரன் வதை 502

(4) நாரணன் தாமரை யாளி யாதி, உலகேழையும் ஈன் றிடும் ஆசையின் உம்பர்கோனைப். பலநாள் முகிலின் உருக்கொண்டு பரித்தல் செய்தான் "மாலோய்!...... சுரராண்டினில் ஆயிர ஆண்டு......இம்மேக உருக் கொடு தாங்கினை எம்மை வேண்டும்......வரம் நல்குதும் ஓது"—காஞ்சிப்புராணம்—புண்ணிய கோடி 3-4

5-2 கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை.

கற்றுளவான் கனியாய கண்ணுதலை—சுந்தரர் 7-51-9

பெருமானை விருப்பால் விழுங்கி விட்டேனே!—அப்பர் 4-15-8

கற்றவர் உண்ணும் கனியே—அப்பர் 6-32-1

5-3 செற்றவர் புரங்கள் செற்ற.

செற்றார் புரஞ் செற்ற—அப்பர் 4-103-2

5-4 பொன்னடிக்(கு) அடிமை புக்கு இனிப்போக விடுவேனோ? பூண்டு கொண்டேனே.

இறைதாள் பூண்டேன்......இனிப்புறம் போக லொட் டேனே—திருவாசகம் 34-7

என் சிந்தையுள் பிரியுமா றெங்ஙனே பிழைத்தேயும் போக லொட்டேன்—அப்பர் 4-28-7

சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே —திருவாசகம். 37

உன்னை விடுவேன் அல்லேன்......கடவுளானே —அப்பர் 6-95-4

அடைக்கினும் போகேன்—அப்பர் 4-81-8

5-6-10 திருவீழிமிழலையான் திருவடி நிழற்கீழ்ப் புக்கு நிற்பவர் தம் பொன்னடிக் கமலப் பொடியணிந்(து) அடிமை பூண்டேனே.

**4-11 பார்க்க**

**5-10 பார்க்க**

5-6 எண் திக்கெலாங்குலவும் புகழ்த்திருவீழிமிழலையான்.

**4-5 பார்க்க**

**திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழிமிழலையான்** 5-10

5-7 தான் தோன்றி நம்பி.

**தானே வளர்ந்து தானே இருந்தவன் வேணி எந்தை —திருப்புகழ்** 12-20

5-8 மிழலை சூழ் பொழிலைப் போயிருந்தேயும் போற்றுவார் கழல்கள் போற்றுவார் புரந்தராதிகளே.

**செந்திலில் அதிபதி என வரு பொருதிறல் முருகனை அருள் பட மொழிபவர் ஆராய்ந்து வணங்குபவர் தேவேந்திர சங்கமே—தேவேந்திர சங்க வகுப்பு.**

5-8 ஆயிரங் கமலம் ஞாயிறுயிரம் முக்கண் முககர சரணத்தோன்.

**கண்ணுமாயிர முடையார் கையுமோராயிர முடையார் —சம்பந்தர்** 2-94-2

**ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ்சேவடி யானும் ஆயிரம் தோளுடை யானும்—அப்பர்** 4-4-8

5-9 எண்ணில் பல் கோடி சேவடி முடிகள்.
எண்ணில் பல் கோடி திண்டோள்கள்.

**5-8 பார்க்க**

5-9. எண்ணில் பல் கோடி சேவடி; முடிகள்.
எணணில் பல் கோடி; திண்டோள்கள்.
எண்ணில் பல் கோடி; திருவுரு, நாமம்,
ஏர்கொள் முக்கண், முகம், இயல்பும்,
எண்ணில் பல் கோடி; எல்லைக்(கு), அப்பாலாய்.
நின்(று) ஐந்நாற்(று) அந்தணர் ஏத்தும்.
எண்ணில் பல் கோடி குணத்தர் ஏர் வீழி.
இவர் நம்மை ஆளுடையாரே.

**எங்கணும் பணிவதனங்கள், எங்கணும் விழிகள், எங்கணுந் திருக்கேள்விகள், எங்கணுங் கரங்கள், எங்கணுந் திருக்கழலடி, எங்கணும் வடிவம், எங்கணுஞ் செறிந்தருள் செயும் அறுமுகத் திறைக்கே**
—கந்தபுராணம். 3-12-133

5-10—5-6 பார்க்க

5-10 இந்திரன் எச்சன்.... இவர் மிசை செகுத்தோன்

**வானவர் தோளிறுத்த மைந்தன்—அப்பர்** 6-50-8

5-10 புரம்கரி கருடன் மறலிவேள் இவர் மிசை செகுத்தோன்

**புள்ளரசைக் கொன்னுயிர் பின் கொடுத்தார் போலும்**
—அப்பர் 6-53-8

**கருடனும் காமனும் பட்டன—சம்பந்தர்** 2-119-6

[கருடன் என்னும் தலைப்புப் பார்க்க]

5-10 இந்திரன்....மிகை செகுத்தோன்

**தக்கன் தன் வேள்வியினில் இந்திரனைத் தோள் நெரித்திட்டு**
—திருவாசகம் 8-15

**வானவர் கோன் தோளிறுத்த மைந்தன்—அப்பர்** 6-50-8

5-12 பாடலங்காரப் பரிசில் கா(சு) அருளிப் பழுத்த செந்தமிழ் மலர்சூடி, நீடலங்காரத்(து) எம்பெரு மக்கள் நெஞ்சினுள் நிறைந்து நின்றனை.

**திருமிழலை, இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சை யால் காசு நித்தல் நல்கினீர்—சுந்தரர்** 88-8

6-3,4 தருணேந்து சேகரனே யெனும்.

**தருணேந்து சேகரன் காண்—அப்பர்** 6-30-6

6-6 வேந்தன் வளைத்தது மேரு வில்,
அரவு நாண், வெங்கணை செங்கண் மால்,
போந்த மதிலணி முப்புரம்.
பொடியாட வேதப்புரவித்தேர்......
......அயன் சாரதி

**கல்லால் நிழற் கீழாய். இடர் காவாயென வானோர். எல்லா மொரு தேராய், அயன் மறை பூட்டு நின்றுய்ப்ப, வல்வாயெரி, காற்றீர்க்கரி கோல், வாசுகி நாண்கல், வில்லால் எயில், எய்தானிடம் வீழிம் மிழலையே**
—சம்பந்தர் 1-11-6

6-6 திருவாவடு துறையான் செய்கை யாரறிகிற் பாரே?

**பல்லவனீச் சரத்(து) அரசு பேணி நின்றார் இவர் தன்மை அறிவார் யார்? —சம்பந்தர் 3-112-1**

6-7 கற்போல் மனம் கனிவித்த எங்கருணாலயா!

**கற்போலும் நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால் நிற்பானைப் போல—திருவாசகம் 15.4**

**கல்லை மென்கனியாக்கும் விச்சை கொண்டென்னை நின் கழற்கு அன்பனாக்கினாய்!—திருவாசகம் 5.94**

**"கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினை கடிந்த வேதியனை—திருவாசகம் 8**

6-11 சேலுங் கயலுந் திளைக்கும்

**29.6 பார்க்க.**

7-3 கோழி வெல்கொடியோன் காவல் நற்சேனை யென்னக் காப்பவன்.

**சேவலங் கொடியோன் காப்ப ஏமவைகல் எய்த்திற்றால் உலகே—குறுந்தொகை 1—காப்பு**

7-8 திசை மிகு கீர்த்தி திருவிடைக் கழி

**திக்கெலாம் புகழ்வுறும் திருநெல்வேலி—சம்பந்தர் 3-92-7**

7-8 தொகை மிகு நாமத்தவன்

**எண்ணில் பல்கோடி......நாமம்—திருவிசைப்பா 5.9**
**ஆயிரம் திருநாமம் பாடி—திருவாசகம் 11-1**

7-9 பன்னிரு நயனத்(து) அறுமுகத்(து) அமுது

**பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்—அப்பர் 6-18-4**

7-10 குருண்ட பூங்குஞ்சிப் பிறைச் சடைமுடிக்......கொழுந்து

**குருண்ட வார் குழற் சடையுடைக் குழகன்—சம்பந்தர் 2-105-11**

8-2 இவ்வரும் பிறவிப் பௌவ நீர் நீந்தும்
ஏழையேற்(கு) என்னுடன் பிறந்த ஐவரும் பகையே.

**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்"** —திருக்குறள். 10

8-3 தாயின்நேர் இரங்குந் தலைவவோ!

"பால் நினைந்தூட்டுந் தாயினுஞ்
சாலப் பரிந்து"—திருவாசகம் 37-9

9–1 பார்க்க.

8-3 வளரிளஞ் சோலை மாந்தளிர் செந்தீயின் நேர் அரும்பும்.

சீதப்புனலுண் டெரியைக் காலும் சூதப் பொழில்
—சுந்தரர் 7–94-6

(2) மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர்—திருமுரு
காற்றுப்படை 144

(3) மாஞ்சினை புதைய எரிகால் இளந்தளிர் ஈனும்
—ஐங்குறுநூறு 349

8-5 என்பெலாம் உருகும் அன்பர்

என்பு நைந்துருகி நெக்கு நெக்கேங்கி, அன்பெனும் ஆறு
கரையது புரள—திருவாசகம் 4-80, 81

9-1 என்னைக் கற்பினிற் பெற்றெடுத்(து) எனக்கே முலைகள்
தந்(து) அருளுந் தாயினும் நல்ல முக்கணன்.

8-3 பார்க்க.

9-3 கரியரே இடந்தான் செய்யரே ஒருபால், ஒருடம்பினராம்
இருவர்.

மாலையிடப் பாகத்தே மருவக் கொண்டார்—அப்பர் 6-96-3

மாதிடம் மகிழ்வர் போலும்—அப்பர் 4-72-2

[திருமாலும் பார்வதியும் சிவபிரானுடைய இடது பாகத்
தில் விளங்குவர். அவ்விருவரும் கரிய நிறத்தினர், சிவ
பிரான் செந்நிறத்தினர். "செம்மேனி எம்மான்"
—அப்பர் 4-10; 4-16-1

9-4 (1) பழையராந் தொண்டர்க்(கு) எளியரே
மிண்டர்க்(கு) அரியரே.

மிண்டு மனத்தவர் போமின்கள்; மெய்யடியார்கள் விரைந்து
வம்மின்;—திருப்பல்லாண்டு 2-29-2

(2) பழைய தம் அடியார் துதிசெய்—சம்பந்தர் 2-52-5

10-4 நெக்கு நைந்(து) உளங்கரைந்(து) உருகும்.

நெக்கு நெக்கு உள்ளுருகி உருகி—திருவாசகம் 27-8

10-7 சங்கமும் சகடையின் முழக்கும்

[சகண்டை] சகடையோ டார்த்த வன்றே—கம்பராமாயணம்
—பிரமாத்திர 5

10-8 மழலை யாழ் வீணை

' இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்—திருவாசகம் 20-4
இதனின்றும் யாழ்வேறு, வீணைவேறு என்பதை அறியலாம்

10-9 பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்(து)
என் பணிமலர்க் கண்ணுள் நின்றகலான்

வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற சித்தாய்
— சுந்தரர் 7-21-1

நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும் பொற்றிருவடி என் குடி
முழுதாளப் புகுந்தன் போந்தன் இல்லை—திருவிசைப்பா 16-2

வந்தாய் என் மனத்தே வந்து நீ புகுந்த பின்னை எந்தாய்
போயறியாய் - பெரியதிருமொழி 8-9-5

பொய்யா தென்னுமிருட் புகுந்தா யின்னம் போந்தறியாய்
—சுந்தரர் 7-28-5

10-9 (1) கேதகை நிழலைக் குருகென மருவிக் கெண்டைகள்
வெருவுகீழ்க் கோட்டூர்

மடல் விண்ட முடத்தாழை மலர் நிழலைக் குருகென்று,
தடமண்டு துறைக் கெண்டை தாமரையின் பூ மறைய
—சம்பந்தர் 2-48-4

(2) அருகு கைதை மலர கெண்டை குருகென்றஞ்சும்
—பெரியதிருமொழி 5-2-9

(3) வழிந்த தேன் மடற் கேதகை மலர்நிழல் குருகென்
றெழுந்த தாமரைப் போது புக்கொளிப்பன கெண்டை
— திருவிளை—திருநாட்டு 40

11-3 கன்னெகா உள்ளம்

நெஞ்சக் கனகல்—கந்தர் அநுபூதி—காப்பு
கன்னவில் மனத்(து)—திருவிசைப்பா 14-7

11-8 என்னையுன் பாத பங்கயம் பணிவித்(து),
என்பெலாம் உருக நீ எளி வந்(து),
உன்னை யென்பால் வைத்(து)...,
நிறைந்த ஒண் சுடரே!

அவனருளாலே அவன் தாள் வணங்கி—திருவாசகம் 1

11-8 கன்னலும், பாலும், தேனும், ஆரமுதும்
கனியுமாம் இனியை யாயினையே.

**கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்......இனியன் தன்னடைந்தார்க் கிடை மருதனே—அப்பர்** 5-14-10

**திங்கரும் பனையர்—சம்பந்தர்** 1-77-2

**தேனுமாய் அமுதுமாய்—சம்பந்தர்** 1-76-5

11-9 அம்பரா! அனலா! அனிலமே! புவிநீ!
அம்புவே! இந்துவே! இரவி!
உம்பரால் ஒன்றும் அறிவொணா அணுவாய்!
ஒழிவற நிறைந்த ஒண் சுடரே!

**"இருநிலனாய்த் தீயாகி, நீருமாகி, இயமானனாய், எறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய், ஞாயிறாகி ஆகாசமா, யட்டமூர்த்தியாகி"—அப்பர்** 6-94-1

**நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள்விசும்பு, நிலாப் பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்—திருவாசகம்** 15-5

11-9 எந்தையு தாயுமாயினையே

**அம்மையே அப்பா—திருவாசகம்** 37-3
**ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாய்—அப்பர்** 4-94-1

12-1 நீரோங்கி வளர்கமலம்

**நீரளவே ஆகுமாம் நீராம்பல்—மூதுரை**

12-4 கோவணவன்

**துன்னம் பெய் கோவணம்—திருவாசகம்** 12-2
**கீளார் கோவணம்—சுந்தரர்** 7-24-2

12-5 ஆவா! என்(று) அருள் புரியாய்

**உடையவனே! எனை ஆவ என்றருளாயே—திருவாசகம்** 44-6

12-7 தன் சோதி யெழுமேனித் தபனியப் பூஞ்
சாயக் காட்டாய்

**பொன்னார் மேனியனே—சுந்தரர்** 7-24-1

12-9 விருடி இவள் உன்னைப் பொதுநீப்பான்
விரைந் தின்னம் தேருள்

**பொது நீக்கித் தனை நினைய வல்லோர்க் கென்னும் பெருந் துணை—அப்பர்** **6-1-5**

**பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூர் அரன் —திருக்கோவையார்** **14-6**

13-2 என் கண்ணினின்று அகலான்

**கண்ணின் அகத்தான்—திருவாசகம்** **34-4**

**(2) காளத்தியான் அவன் என் கண்ணுளானே—அப்பர்** **6-8**

13-4 (1) நின் தொண்டர் முகம் மலர்ந்து, இருகண் நீர் அரும்பக் கைகள் மொட்டிக்கும்

**கரமலர் மொட்டித் திருதயம் மலர—திருவாசகம்** **4-84**

(2) சைவம் விட்டிட்ட சடைகளும்

**சைவத்த செவ்வுருவன்—சுந்தரர்** **82-7**

13-5 கருதுவார் கருதும் உருவமாம்

**எவ்வுருவும் தன் உருவம்—திருவாசகம்** **18-2**

**ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்—அப்பர்**

13-6 (1) அண்டமோ ரணுவாம் பெருமை கொண்(டு) அணுவோர் அண்டமாம் சிறுமை கொண்டு

**அண்டங்க ளெல்லாம் அணுவாக, அணுக்க ளெல்லாம், அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினும்—திருவிளையாடற்புராணம்—பாயிரம்** **6**

**(2) (அண்டம்) சிறியவாகப் பெரியோன்—திருவாசகம்** **3-6**

13-7 நிசரர் இருவரோ(டு) ஒருவர் காதலிற் பட்ட கருணையாய்!

**மூவெயில் செற்ற ஞான்(று) உய்ந்த**
**மூவரில் இருவர் நின் திருக்கோயிலின்**
**வாய்தல் காவலாள ரென் றேவிய**
**பின்னை ஒருவன் நீகரி காடரங்காக,**
**மானை நோக்கியோர் மாகடம் மகிழ**
**மணிமுழா முழக்க அருள் செய்த**
**தேவதேவ நின் திருவடி யடைந்தேன்**
**செழும் பொழில் திருப்புன் கூருளானே**

**—சுந்தரர் 7-55-8**

13-8 அறிவினுக்(கு) அறியப் புகுந்ததோர்
யோகினில் பொலிந்து நுண்ணியை

**அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே!**
**—திருப்புகழ்**

13-8 கண்ணினுள் மணியிற் கலந்தனை

**கண்ணே கண்ணிற் கருமணியே !— அப்பர் 6-47-1**

13-10 கொங்கை கொண்டு அனுங்குங் கொடியிடை
காணில் கொடியள் என்(று) அவிர்சடை
முடிமேல் கங்கை கொண்டிருந்த கடவுளே !

**வங்க மலிகடல் நாகைக் காரோணத்தெம் வானவனே.**
**எங்கள் பெருமானோர் விண்ணப்பம் உண்டது கேட்டருளீர்.**
**கங்கை சடையுள் கரந்தாய் அக்கள்ளத்தை மெள்ள உமை**
**நங்கை அறியிற் பொல்லாது கண்டாய் எங்கள் நாயகனே!**
**—அப்பர் 4·103·8**

13-11 (1) மங்கையோடிருந்தே யோகு செய்வானை

**மங்கையைக் கெழுவின யோகினர்—அப்பர் 4-10-5**

**(2) தேரிழையைக் கலந்திருந்தே புலன்கள் ஐந்தும் வென்றானை—அப்பர் 6-50-3**

**(3) ஒருத்தி பால் பொருத்தி வைத்துடம்பு விட்டு யோகியாய் இருத்தி நீ—சம்பந்தர் 2-98-4**

**(4) நல்ல போகத்தன் யோகத்தையே புரிந்தானே**
**—சம்பந்தர் 3-125-7**

14-5 அருள் செய்வாய் அருள் செயா தொழிவாய்

**நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே—திருவாசகம் 33-7**

14-6 அன்பு தா என்னுன் சேவடி பார்த்திருந்(து) அலச

**இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்—**
**பெரியபுராணம் - காரைக்கால் அம்மையார் 60**

14-6 செம்மனக் கிழவோ ரன்புதா வென்றுன் சேவடி
பார்த்திருந் தலச, எம்மனங் குடிகொண்டு
இருப்பதற் கியானோர் என்னுடை அடிமை தான்யாதே

**பதைத்துருகுமவர் நிற்க என்னை ஆண்டாய்—திருவாசகம் 5-2**

(2) உலவாக் காலந் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக் காண்பான், பலமா முனிவர் நனிவாடப் பாவி யேனைப் பணி கொண்டாய் —திருவாசகம் 5·54

(3) முனிவர் குழாம், பன்னூறு கோடி இமையோர்கள் தாம் நிற்பத் தன் நீறெனக் கருளி........மன்னுமணி — திருவாசகம் 16·3

14-6 எம் மனம் குடி கொண்டிருப்பதற்கு யான் யார்

மன்னுவதென் நெஞ்சில்—திருவாசகம் 17·6

14-7 கன்னவில் மனத்து

11-3 பார்க்க.

14-8 வெண் கோவணங் கொண்டு

வெண் கோவணங் கொண்டு—சம்பந்தர் 1·32·3

14-10 வெண் கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும் குழகன்.

வெண் கோவணங் கொண்டு ஒரு வெண்டல் ஏந்தி —சம்பந்தர் 1·32·3

14-10 பாவணத் தமிழ்கள் பத்தும் வல்லார்கள்

ஆரூரன் சொன்ன பாவணத் தமிழ் பத்தும் வல்லார் —சுந்தரர் 7·5·10

15-2 சாந்தமும் திருநீறு

(1) சாந்தமென நீறணிந்தான்—அப்பர் 6·83·10

(2) சாந்தாக நீறணிந்தான்—சம்பந்தர் 2·41·6

விலையிலி சாந்தமென்று வெறிநீறு பூசி—அப்பர் 4·8·9

(3) கடலைப் பொடி நீறன்றிச் சாந்தம் மற்றில்லையோ —சுந்தரர் 7·44·2

15-6,7 ஒழிவற நிறைந்த ஒண்சுடரே

ஒழிவற நிறைந்த யோகமே—திருவாசகம் 37·1

ஒழிவற நிறைந்த ஒருவ —திருவாசகம் 4·215

11-8, 9 பார்க்க.

15-9 முன்னவர்

முலைத்தானே யெல்லார்க்கும் முன்னே தோன்றி—அப்பர் 6·19·1

16-2 பொற்றிருவடி என்குடி முழுதாளப் புகுந்தன் போந்தன இல்லை.

(1) வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற சிந்தாய் —சுந்தரர் 7-21-1

(2) வந்தாய் என் மனத்தே வந்து நீ புகுந்த பின்னை எந்தாய் போயறியாய்— பெரிய திருமொழி 8-9-5

(3) போகாதென் உள்ளத் திருந்தாய் போற்றி—அப்பர் 6-56-5

(4) பொய்யா தென்னுயிருட் புகுந்தாயின்னம் போந்தறியாய் — சுந்தரர் 7-28-5

(5) உடலும் எனதுயிரும் புகுந்து ஒழியாவண்ணம் நிறைந்தான்—திருவாசகம் 34-6

16-2 நெற்றியின்கண் என் கண்ணி னின்றகலா.

என் கண்ணில் நின்றகலா வேடம் காட்டி—அப்பர் 6-58-9

16-8 என் நெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த

புன்புலால் யாக்கை புரைபுரை கனியின் பொன்னெடுங் கோயிலாப் புகுந்து - திருவாசகம் 37-10

16-9 வஞ்சகர் நெஞ்சகத்(து) ஒளிப்பார்

கரவாடும் வன்நெஞ்சக் கரியானை — அப்பர் 4-7-1

16-11 பொன் நெடுங் குன்று (கயிலை)

பொன் நொடித்தான் மலை—சுந்தரர் 7-100-10

17-1 இந்திரலோகம் முழுவதும் பணிகேட் டிணையடி தொழுதெழத் தாம்போய்......அகந்தொறும் பலிதிரி அடிகள்.

தனமுனே தனக் கின்மையோ தமராயினர் அண்டம் ஆளத் தான் வனனில் வாழ்க்கை கொண்டாடிப் பாடி யிவ்வைய மாப்பலி தேர்ந்ததே—சம்பந்தர் 3-38-1

17-2 அடிகள் தந்திரி வீணை கீதமும் பாட

(1) எம் இறை நல்வீணை வாசிக்குமே— அப்பர் 4-112-7

(2) விட முண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி —சம்பந்தர் 2-85-1

(3) வித்தக வீணை யொடும்...... அத்தன் — சுந்தரர் 7-85-6

(செவ்வானம்)

17-6 அந்தி போன்று ஒளிர் திருமேனி

**செவ்வானத் தொளி யன்ன மேனியான்—அப்பர்**
**செக்கர் போலும் திருமேனி—திருவாசகம்** 27-8
**அந்தி வானமும் மேனியோ சொலும்—சுந்தரர்** 7-36-4

17-7 பசுங்கலன் விசும்பின் இன்துளி படநனைந்(து) உருகி

**பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல் —குறுந்தொகை** 29
**"ஈர்மட் செய்கை நீர்படு பசுங்கலம் பெருமழைப் பெயற் கேற் றாங்கு—நற்றிணை** 308-9-10
**பசுமட், கலத்துணீர் பெய்திரீஇயற்று —திருக்குறள்** 660

17-8 விழுமியோன் முன்பு பின்(பு) என்கோ நொய்ய வாறென்ன வந்து வீற்றிருந்த.......வானவர்கோன்

**எனது இடத்தும், ஒருவலத்தும், இருபுறத்தும், அருகு அடுத்து இரவு பகல் துணையதாகும் வேலே வேல் வகுப்பு**

19-2 உன் அடியார் அமருலகம் ஆள, நீ ஆளாதே.......கூத்தாடினையே

**தனமுனே தனக் கின்மையோ தமராயினர் அண்டம் ஆளத்தான் வனனில் வாழ்க்கை கொண்டாடிப் பாடி யிவ்வைய மாப்பலி தேர்ந்ததே—சம்பந்தர்** 3-38-1

19-3 செல்வம் நிறைந்த சிற்றம்பலம்

**செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம்—சம்பந்தர்** 1-80-5

19-4 *எம் பந்த வல்வினை நோய் தீர்த்திட்(டு)

**எம் பந்த வல்வினை நோய் தீர்த்திட்(டு)—அப்பர்** 6-30-1

19-5 மூவாயிரவரொடும் அனையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே.

**மூவாயிரவர்க்கு மூர்த்தி என்னப் பட்டானை—சுந்தரர்** 7-90-7

19-10 பற்று நிலை பற்றவரே

**பற்றுக பற்றற்றான் பற்றினை—திருக்குறள்** 350

---

* **இதனால் காடநம்பி அப்பர் தேவாரம் படித்திருக்க வேண்டும் எனத் தெரிகின்றது.**

20-1 என்னு ரமுதை எங்கள் கோவை என்று கொல் எய்துவதே?

* என்னுயிர்க் கின்னமுதை யென்றுகொ லெய்துவதே! —சுந்தரர் 7·83—3

20-5 கங்கை நங்கை காதலனே! அருளென்(று) ஒளிமால் முன்னே வரங்கிடக்க.

புரங்கடந் தான்அடி காண்பான் புவிவிண்டு புக்கறியா(து)
இரங்கிடுஎந் தாய்என்(று) இரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
கரங்கள்தந் தானென்று காட்டமற் றுங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந் தான்தில்லை யம்பல முன்றிலம் மாயவனே
—திருக்கோவையார் 86

20-6 பாரோர் முழுதும் வந்திறைஞ்ச......ஆட்டுகந்தான்

புவனி ஏத்த ஆட வல்லீர் —சுந்தரர் 7-6-7

20-6 பதஞ்சலிக்(கு) ஆட்டு கந்தான்

பதஞ்சலிக்கருளிய பரம நாடக —திருவாசகம் 2-138

20-7 இலங்கை வேந்தன் இருபது தோளும். இறமலை தாலெடுத்த மற்றவற்கு வாளொடு நாள் கொடுத்தான்.

(1) மலை எடுத்த இராவணனை —சுந்தரர் 7-90-7
(2) இலங்கையர் கோன்.........இருபது திண்டோளும் இற்றலற ஒற்றைவிரல்.........ஊன்ற —சுந்தரர் 7-16-7
(3) கோல வாளொடு நாளது கொடுத்த செறிவு—சுந்தரர் 7-55-9

20-7 சிலையால் புர மூன்(று) எய்தவில்லி.

(1) சிலையால் முப்புரங்கள் பொடியாகச் சிதைத்தவனே —சுந்தரர் 7-27-3
(2) திண் சிலையால் எரித்தாய் புரம் மாறுபட்டே —திருவாசகம் 6-10

20-7 கலையார் மறி பொற்கையினானை.

(1) கரந்தானே கலைமான் மறியும்.........தங்கும்—சுந்தரர் 7-77-2

---

*சுந்தரர் தேவாரம் 83, 84 பதிகங்களைக் கண்டராதித்தர் படித்து அநுபவித்துள்ளார் என்பது பெறப்படும்.

(2) கலைசேர் கையினனே —சுந்தரர் 7-27-3

20-8 எம்மிறையை என்று சொல் எய்துவித.

எம்மிறையை என்று சொல் எய்துவித்த—சுந்தரர் 83-8

20-8 நெடியானொடு நான் முகனும், வானவரும்.
நெருங்கி, முடியான் முடிகள் மோதி உக்க,
முழுமணியின் திரளை, அடியார் அலகினால்
திரட்டும், அணி தில்லை அம்பலம்.

(1) புரந்தரன் மாலயன் பூசலிட்(டு) ஓலமிட்(டு) இன்னம் புலரிதாய், இரந்திரந்(து) அழைப்ப—(திருப்பல்லாண்டு) 29-5

(2) நாராயணனொடு நான் முகன் அங்கி இரவியும் இந்திரனும்.........தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து 29-12

20-9 கடியார் கொன்றை மாலையான்.

"கண்ணி கார் நறுங் கொன்றை; காமர் வண்ண மார்பில் தாரும் கொன்றை—புறநானூறு, கடவுள் வாழ்த்து.

21-1 நம்பான்

குற்றாலம்.........நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள் —சம்பந்தர் 1-99-1

21-1 துச்சான செய்திடினும்.

துச்சேனன் —சுந்தரர் 7-15-2

21-5 நின்று நினைந்(து) இருந்து கிடந்(து) எழுந்து தொழும்

(1) நின்றும், இருந்தும், கிடந்தும், நினைமின்கள், என்றும் சிவன் தாள் இணை—வருத்தமற உய்யும் வழி

(2) நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை —அபிராமி அந்தாதி [illegible]-30-7

(3) நின்றும் இருந்துங் கிடந்தும் எழுந்தும் நக்கும் அழுதுந் தொழுதும் வாழ்த்தி —திருவாசகம் 27-8

21-7 மனிதரொடு வானவர்க்கும் கண்ணாவாய்.

கண்ணவனாய் உலகெல்லாம் காக்கின்றானை —அப்பர் 6-44-4

கண்ணாய ஏழுலகுக்கு உயிராய —பெரியதிருமொழி 1-9-10

21-10 ஓவாதே அழைக்கின்றான் என்றருளின் நன்று மிக.

மலைமேற்றும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால், இவனென்னைப் பன்னாள் அழைப்பொழியா னென்(று) எதிர்ப்படுமே —அப்பர் 4-112-9

22-1 அழலாடுவான்

அழலாடுநை —அப்பர் 6-99-2

22-1 சூழ்ந்த பாய் புலித்தோல்

[புலித்தோல் மேலாடை]

புலி சூழ்ந்த புலியதள் —சுந்தரர் 7-39-5

22-5 செந்தழல் புரைமேனி

செந்தழல் புரைதிருமேனி —திருவாசகம் 20-8

22-11 தூவி நீரொடு பூவவை தொழுது.

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் —அப்பர் 4-1-6

23-3 சிலந்தியை 'அரசாள்க' என்(று) அருள் செய்த தேவ தேவீசனே!

(1) சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற்பந்தர் செய்து, உலந்தவன் இறந்த போதே கோச் செங்கணானுமாகக் கலந்தநீர்க் காவிரி சூழ் சோணாட்டுச் சோழர் தங்கள் குலத்தனிற் பிறந்திட்டார் குறுக்கை வீரட்டனாரே —அப்பர் 4-49-4

(2) திருவானைக் காவிலோர் சிலந்திக் கந்நாட் கோச்சோழர் குலத்தரசு கொடுத்தார் போலுங் குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே —அப்பர் 6-75-8

24-2 உமையாள் காண விகிர்தன் ஆடுமே

கொடி இடை உமையவள் காண ஆடிய அழகா—சுந்தரர் 7-69-2

திருந்திழை காணச் சிற்சபை பொலியத் திருநடம் புரியும், அற்புதக் கூத்த! —சிதம்பர மும்மணிக்கோவை.

24-4 சந்தும்...உந்தி இழியும் நிவவின் கரைமேல் மதில் இல்லை ...தெய்வப்பதி

சந்தும் உந்தி நிவாவலங் கொள் தெய்வப் புனல் சூழ்ந்தழகாயதில்லை —பெரியதிருமொழி

24-4 நந்தி முழவங் கொட்ட நட்டம் நாதனாடுமே.

முழவத்தில் கொட்டுகர மிட்டவொலி தட்டும் வகை நந்திக் கிட்டமிக நட்டமவை யிட்டவர் —சம்பந்தர் 2-32-3

24-6 அரவம் ஆட அனல் கையேந்தி அழகன் ஆடுமே

**அந்தி நிருத்தம் அனல் கையேந்தி அழகன் ஆடுமே —காரைக்கால் அம்மையார் 2-7**

24-8 பவள மேனிப் பரமன்

**பவள மேனியர்திகழும் நீற்றினர் —சம்பந்தர் 3-112-3**

24-10 செடியந் தவத்தோர்

**செடி தவம் செய்வார் சென்றுழிச் செல்லேன் —சுந்தரர்.**

24-11 பானேர் பாடல் பத்தும் பாடப் பாவ நாசமே.

**பாடல் பத்தும் பாடி ஆடப் பாவ நாசமே —காரைக்கால் அம்மையார் 2—11**

25-5 என்னுள்ளே உயிர்ப்பாகி நின்ற மறைவனே

**என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக் கென்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே —அப்பர் 5-21-1**

25-5 தில்லை மாநகர்ச் சிற்றம்பலம் நிறையணியாம் இறையை நினைத்தேன் இனிப் போக்குவேனே.

**கற்பகமே யானுன்னை விடுவே னல்லேன் கனகமா மணி நிறத்தெங் கடவுளானே —அப்பர் 6-95-4**

25-6 நினைத்தேன், இனிப் போக்குவனே ?

நிமலத்திரனை நினைப்பார் மனத்தினுளே யிருந்த மணியை

**25-5 பார்க்க**

26-4 காதினில் மாத்திரை

**"செம்பொன் மாத்திரை" செரீ இய காதினர்·(பெருங்கதை)**

26-8 எடுத்த பொற்பாதம்

**(1) "தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம், ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே" —அப்பர் 4-81-10**

**(2) இனித்தமுடைய எடுத்த பொற் பாதமுங் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே —அப்பர் 4-81-4**

26-10;11 ஆசையை அளவறுத்தார் இங்காரே ?

**ஆசைக்கோர் அளவில்லை —தாயுமானவர்**

27-6 தாயிவரே எல்லார்க்குந் தந்தையுமாம் என்பாரால்

இம்மூவுலகுக்கு அன்னையும், அத்தனும் ஆவாய் அழல் வணா நீயலையோ —அப்பர் 4-112-8

27-8 என்னை வலிவாரார் என்ற இலங்கையர் கோன்

மாவலியனென்று பொத்திவாய் தீமை செய்த பொருவலி அரக்கர் கோன் —அப்பர் 4-54-7

27-8 இலங்கையர் கோன் மன்னும் முடிகள் நெரித்த மணவாளர்

முடிவாயொடு தோள் நெரியக் கெடுத்திருந்தாய் —அப்பர் 4-87-10

28-8 அறவனே! அன்று பன்றிப் பினேகிய மறவனே! எனை வாதை செய்யேலெனும்

(1) மறவனை அன்று பன்றிப் பின் சென்ற மாயனை —சுந்தரர் 7-68-7

(2) மறவனை அன்று பன்றிப்பின் போவது மாயம் கண்டீர் —சுந்தரர் 7-18-6

28-8 அறவனே!

நால்வர்க்கு ஆலின் கீழ் உரைத்த அறவனை —சுந்தரர் 7-68-7

## ஒப்புமை

29-1 பின்னைப் பிறவி யறுக்க நெறி தந்த பித்தன்

"பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்" —சுந்தரர் 7-48-1

"மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே, கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே" —திருவாசகம் 1

29 பல்லாண்டு கூறுதுமே......

"பல்லாண்டிசை கூறும் பக்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக் கண்டு கொண்டேன் திருவாரூர் அம்மானே" —அப்பர் 4-20-10

29-2 அண்டங் கடந்த பொருள்

அண்டத்தப் பால் நின்ற பேரொளி —அப்பர் 6-1-10

29-2 பண்டும் உள்ள பொருள்

முன்னவன் காண் —அப்பர் 6-48-8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளே —திருவாசகம் 7-9

29-2 என்றும் உள்ள பொருள்

என்றும் உள்ளார் இடைமருது மேவிடங் கொண்டாரே —அப்பர் 6-17-7

29-3 (1) அட்ட மூர்த்தி

இருநிலனாய்த் தீயாகி, நீருமாகி, இயமானனாய், எறியுங் காற்றுமாகி, அருநிலைய திங்களாய், ஞாயிறுமாகி, ஆகாசமாய், அட்டமூர்த்தி —அப்பர் 6-94-1

(2) மண்ணொடு நீர் அனல் காலோ டாகாயம் மதி இரவி எண்ணில் வரும் இயமானன்.........ஆம் பெருமாளை —சம்பந்தர் 2-48-3

29-3 சிட்டன்

சிட்டனே சிவலோகனே ! —திருவாசகம் 30-2

29-4 சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே

சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம் —அப்பர் 6-98-5

29-4 பல்லாண்டென்னும் பதங் கடந்தான்

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி! —அப்பர் 6-55-9

29-5 கரந்தும் கரவாத கற்பகன்

கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால் விரவாடும் பெருமானை —அப்பர் 4-7-1

29-6 சேலுங் கயலுந் திளைக்கும்

29-8 மாலும் அயனும் அறியாநெறி

மாலறியா நான்முகனும் காணா மலையினை —திருவாசகம் 7-5

29-8 பாலும் அமுதமும் ஒத்து நின்றான்

பாலும் அமுதமுந் தேனுடனும் பராபரமாய் —திருவாசகம் 13-11

29-9 பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்

பாலகனுக் கன்று பாற்கடல் ஈந்திட்ட கோலச் சடையின் —திருவாசகம் 14-17

29-9 மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்

நீற்றினை நிறையப் பூசி நித்தல் ஆயிரம் பூக்கொண்டு
ஏற்றுழி ஒரு நாளொன்று குறையக் கண் நிறைய விட்ட
ஆற்றலுக் காழி நல்கி —அப்பர் 4-64-8

29-10 தாதையைத் தாளற வீசிய சண்டி

மாணி சிவகருமஞ் சிதைத்தானை......தாளிரண்டுஞ் சேதிப்ப
—திருவாசகம் 15-7

பாதகத்துக்குப் பரிசு வைத்தான்

பாதகமே சோறு பற்றினவாதோ ணோக்கம் —திருவாசகம் 15-7

அரனடிக்கு அன்பு செய்யும் பாவம் அறமதாகும்......பாலன்
செய்த பாதகம் நன்மை யாய்த்தே —சிவஞானசித்தியார் 119

29-12 பாடியும் ஆடியும்

ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ —அப்பர் 5-5-4

29-13 எந்தை யெந்தாய் சுற்றமுற்று

எந்தை யெந்தாய் சுற்றம் மற்று மெல்லாம் —திருவாசகம் 13-2

எம்பிரான், எந்தை, என்னுடைச் சுற்றம் எனக்கு அரசு
—பெரியதிருமொழி 1-1-6

எந்தை, தாய்தந்தை, எம்பெருமானுமே —அப்பர் 5-35-6

29-13 பந்தம் பிரியப் பரிந்தவனே

என்னுடைய பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட
பாண்டிப் பிரான் —திருவாசகம் 13-2

குறிப்பு : இவ் ஒப்புமைப் பகுதியினின்றும், திரு இசைப்பா ஆசிரியர்கள் தேவாரம், மூத்த திருப்பதிகம், திருவாசகம் ஆகிய நூல்களை நன்கு படித்தவர்கள் என்பது தெளிவாக ஏற்படும். இவர்கள் காலம் 10,11-ஆம் நூற்றாண்டு.

# 1A. ஒப்புமைப் பகுதியில் எடுத்து ஆளப்பட்ட நூல்கள்

# 1B. ஒப்புமைப் பகுதியில் காட்டிய முக்கிய செய்தி அகராதி

## 1. சிவபிரான்

## 2. பிற

# முற்சேர்க்கை-2

## ஆசிரியரும் அவர் பாடிய தலமும் பிறவும்

| ஆசிரியர் | பதிக எண் | பாடியதலம் | பதிக முதல் | பாடிய பதிகம் (மொத்தம்) |
|---|---|---|---|---|
| 1. திருமாளிகைத்தேவர் | 1 | கோயில் (அம்பலம்) | 1. ஒளிவளர் | 4 |
| | 2 | கோயில் (பெரும்பற்றப் புலியூர்) (சிற்றம்பலம்) | 2. உயர்கொடி | |
| | 3 | கோயில் (தில்லை அம்பலம் | 3. *உறவாகிய | |
| | 4 | கோயில் (தில்லை அம்பலம்) | 4. இணங்கிலா | |
| 2. சேந்தனார் | 5 | திருவீழிமிழலை (1) | 1. ஏகநாயகன் | 4 |
| | 6 | திருவாவடு துறை (2) | 2. *பொய்யாத | |
| | 7 | திருவிடைக்கழி (3) | 3. *மாலுலா | |
| | 29 | கோயில் (தில்லை (திருப்பல்லாண்டு) | 4. மன்னுக தில்லை | |
| 3. கருவூர்த் தேவர் | 8 | கோயில் (பெரும்பற்றப் புலியூர்) (திருச்சிற்றம் பலம்) | 1. கணம் விளி | 10 |
| | 9 | திருக்களந்தை யாதித்தேச் சரம் | 2. கலைகள் | |
| | 10 | கீழ்க்கோட்டூர் மணிஅம்பலம் | 3. *தளிரொளி | |
| | 11 | திருமுகத்தலை | 4. புவன | |
| | 12 | கோடைத் திரைலோக்கிய சுந்தரம் | *5. நீரோங்கி | |

| | | | | |
|---|---|---|---|---|
| | 13 | கங்கை கொண்ட சோளேச்சரம் | 6. அன்ன மாய் | |
| | 14 | திருப்பூவணம் | 7. திருவருள் | |
| | 15 | திருச்சாட்டியக் குடி (ஏழ் இருக்கை) | 8. பெரியவா | |
| | 16 | தஞ்சை யிராச ராஜேச்சரம் | 9. உலகெலாம் | |
| | | | 16·6 அருளுமா றருளி என்னும் பாட்டு அகப்பொருட் பாட்டு | |
| | 17 | திரு இடை மருதூர் | 10. வெய்யசெஞ் | |
| 4. பூந்துருத்தி நம்பி காட நம்பி | 18 | திருவாரூர் | கைக்குவான் | 2 |
| | 19 | கோயில் (அம்பலம்) | முத்து வயிர மணி | |
| 5. கண்டராதித்தர் | 20 | கோயில் (தில்லை அம்பலம்) | மின்னார் உருவம் | 1 |
| 6. வேணாட்டடிகள் | 21 | கோயில் (தில்லை) | துச்சான | 1 |
| 7. திருவாலி அமுதனார் | 22 | கோயில் (தில்லை அம்பலம்) | 1. மையல் மாது | 4 |
| | 23 | கோயில் (தில்லை) | 2. *பவளமால் | |
| | 24 | கோயில் (தில்லை) | 3. அல்லாய் | |
| | 25 | கோயில் (தில்லை) | 4. *கோலமலர் | |
| 8. புருடோத்தம நம்பி | 26 | கோயில் (தில்லை அம்பலம்) | 1. *வாரணி | 2 |
| | 27 | கோயில் (தில்லைச்சிற்றம்பலம்) | 2. *வானவர்கள் | |
| 9. சேதிராயர் | 28 | கோயில் (தில்லை) | 1. *சேலுலாம் | 1 |

* ஆக, திருவிசைப்பா—திருப்பல்லாண்டு பாடிய ஆசிரியர் ஒன்பதின்மர் இவர்கள் பாடிய பதிகம் 29; அகப்பொருள் பதிகம் 10; அகப்பொருள் பாட்டு 1. (16-6)

# முற்சேர்க்கை-3

## ஆசிரியரும் அவர் பாடிய பதிக விசேடம் பிறவும்

### ஆசிரியர் - திருமாளிகைத் தேவர் பதிகம் 1-4 கோயில்

| ஆசிரியர் | பதிக எண் பாடல் எண் | எந்தத் தலத்திற்கு உரியதும் பதிக முதலும் கோயில் | பண் (ராகம்) பஞ்சமம் ஆகிரி | இயற்றமிழ் இலக்கணம் ஏழுசீர் விருத்தம் (விளம்-மா) | பதிக விசேடங்களும், பாடல் விசேடங்களும் கருத்து உரையும் |
|---|---|---|---|---|---|
| | | | | | 1. இப்பதிகத்தில் விளிகள் நிறைந்துள்ளன. 57 விளிகள் உள்ளன. |
| 1. திருமாளிகைத் தேவர். | 1/11 | ஒளிவளர் | | விளம்-மா | 2. ஒவ்வொரு பாட்டிலும் அம்பலம் கூறப்பட்டு உள்ளது.<br>3. இறைவன் ஊட்டினால் தான் நாம் உண்ண முடியும் என்பதைக் காட்டும் ஒவ்வொரு பாட்டும் விளம்புமா, விளம்பே, பணியுமா பணியே என்பனபோலமுடிகின்றன.<br>4. ஈற்றுப் பாடல் அவை அடக்கம் கூறுகின்றது. |
| | 2/11 | கோயில் உயர்கொடி | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்-மா விளம்-மா விளம்- விளம்-மா) | [பதிகம் 22போல்] 1. இப் பதிகம் பாதாதிகேச வர்ணனையைக் கொண்டு உள்ளது.<br>2. ஒவ்வொரு பாட்டிலும் சிற்றம்பலக்கூத்த என வருகின்றது.<br>3. ஈற்றுப்பாடல் அவை அடக்கம் கூறுகின்றது. |

3/12 கோயில் பஞ்சமம். ஏழு சீர் [illegible] (ஆசிரி) எட்டு சீர் கலந்தன [illegible]ளது இசைத் தமிழுக்கே உரியது இப்பதிகம்.

1. ஒவ்வொரு பாட்டும் தனக்குள்ளே ஒரு குளத்தினைக் [illegible] என்று [illegible] கின்றது:
2. ஒவ்வொரு பாடலிலும் [illegible] கூறப்பட்டுள்ளது.
3. இப்பதிகம் அகப்பொருள் பதிகம். தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் கூற்றாகத் தாய் கூறுவதாக அமைந்து உள்ளது.

1. அநேகம் பாடல்களில் விசயன் பொருட்டு வேடனாய் இறைவன் பன்றிப் பின் சென்று அம்பு எய்த வரலாறு குறிக்கப்பட்டுள்ளது.
2. மூவாயிரம் அந்தணர்களின் சிறப்பை வெகு அருமையாகப் பல பாடல்கள் தெரிவிக்கின்றன.

4/11 கோயில் காந்தாரம் ஆறு சீர் இணங்கிலா (நவரோச விருத்தம் விளம்-மா-மா; விளம்-மா-மா.

சிவனிடத்தும் சிவனடியாரிடத்தும் திருநீற்றிலும்; அன்பு இல்லாதவர்களை வைகின்றார் நிரம்ப.

1. தில்லை வாணன் மனைகூடியார்கள் வன்மைக் குணங்களைக் கூற வீறிற் கோதைவாய்பிறந் பிண்டப் பிணங்கள் 4·1
1A. பேய்கள் 4·1
2 துட்டர் 4·2
3. தூர்த்த வார்த்தைத் தொழும்பரைப் பிழம்பு பேசும் பிட்டர் 4·3
4. அரட்டர் 4·3
5 அரட்டுப் பேசும் அழுக்கர் 4·3
6. கழுக்களாய பிரட்டர் 4·3
7. அம்பலத்தாடிக்கல்லாச் சிறுக்கர் 4·4
8. செத்தற் கொத்தைச் சிதம்பர் 4·4
9. சித்தை வைத்தப் பிணுக்கர் 4·4

10. நீறது ஆடும் நமர்களை நணுகா நாய்கள் 4-5
11. அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதர் 4-5
12. பேத வாதப் பிசுக்கர் 4-5
13. சேடர் சேவடிகள் சூடத் திருவிலா உருவினர் 4 6
14. சாடர் 4-6
15. சாட்கை மோடச் சழக்கர் 4-6
16. பிழக்கப் பிட்கப் பேடர் 4-6
16A. அம்பலத்து அமிர்தே! என்னும் சேடர் சேவடிகள் சூடத் திருவிலா உருவினர் 4-6
17. தில்லைச் செல்வன்பாற் செல்லும் செல்வில் அருக்கர் 4-7
18. அள்ளல் வாய கள்ளர் 4-7
19. அவியாப் பாவப் பெருக்கர் 4-7
20. அம்பலவர் என்னும் சுருதியைக் கருத மாட்டா எக்கர் 4 8
21. குண்ட மிண்ட எத்தர் 4-8
22. புத்தராதிப் பொக்கர் 4-8
23. அம்பலவற் கல்லாக்கச்சர் 4-9
24. கல்லாப் பொல்லாக் கயவர் 4 9
25. பசு நூல் கற்கும் பிச்சர் 4-9
26. அம்பலவன் கொற்ற அரசனுக்கு ஆசை இல்லாத் தெண்ணர் 4 10
27. தெருளா உள்ளத்து இருளர் 4-10
28. திட்ட முட்டப் பெண்ணர் 4-10
29. சிறப்புடையடியார் தில்லைச்செம்பொன் அம்பலவற்(கு) ஆளாம் உறைப்புடையடியார் கீழ்க்கீழ் உறைப்பர் சேவடி

நீ´ற) ஆடார் இறப்பொடு பிறப்பதற்கே
இனியராய் மீண்டும் மீண்டும் பிறப்பரைக்
காணாகண் வாய்பேசா(து) அப்பேய்களோடே 4-11

''பின்னும் அவர்களைக் காணா கண், வாய்பேசாது, அப்பேய்களோடு'' என ஒவ்வொரு பாடலும் கூறுகின்றது.

## 2. ஆசிரியர் - சேந்தனூர்

(பதிகம் 5—7)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | சேந்தனார் | 5/12 | திருவிழிமிழலை ஏக நாயகனை | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்-மா விளம்-மா, விளம்-விளம்-மா) | (1) இப்பதிகம் முழுமையும் சிவனிடத்தும், சிவன் அடியார்களிடத்தும் சேந்தனூர்க்கு உள்ள திடவிய பக்தியைத் தெரிவிக்கிறது.<br>(2) 1-ஆம்பாட்டு திருமால் சிவபிரானுக்கு மேக வாகனமாய் இருந்ததைத் தெரிவிக்கிறது.<br>(3) 4-ஆம் பாட்டில் குறித்துள்ள கமலம் மூன்று-அனாகதம்; விசுத்தி; ஆக்ஞை என்பன.<br>(4) 7-ஆம் பாட்டில் அரிசில் ஆற்றங்கரையில் உள்ளது இத்தலம் என்பது.<br>(5) 9-ஆம் பாட்டில் திருவீழி மிழலையில் 500 அந்தணர்கள் குடிகொண்டிருந்தனர் என்பதும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | (6) | 10-ஆம் பாட்டில் சிவபிரானுல் தண்டிக்கப் பட்டவர் இவர், இவர் என்பதும், |
| | | | | (7) | 12-ஆம் பாட்டில் சம்பந்தர், அப்பா இவர்களின் பாடல்களுக்குப் பெருமான் பரிசு அளித்ததும் கூறப்பட்டுள, |
| 6/11 | திருஆவடு துறை பொய்யாத | பஞ்சமம் ஆகிரி | ஆறுசீர் பெரும் பாலும்; | (1) | இது அகப் பொருள் பதிகம். தலைவன் பால் அன்பு கொண்ட தலைவியின் துயரங்கண்டு செவிலித்தாய் இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. |
| | | | காய்-விளம் | (2) | இப்பதிகம் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. |
| | | | விளம் காய்-விளம் விளம்-இவை கலப்பாய் 3-ஆம் பதிகம் போல இசைப் பாட்டுக்கே உரியது | (3) | 1-ஆம் பாட்டில் ஆயிரம் பூசுரர் (அந்தணர், திருப்பணி செய்யுங் கோயில் திருவாவடுதுறைக் கோயில் என்பதும், அக்கோயில் உள்ள ஊர் சாந்தை என்றும் (சாந்தை என்பது சாத்தனூர்) கூறப்பட்டுள்ளன. |
| | | | | (4) | 3-ஆம் பாட்டில் இறைவனை "மணவாள நம்பி என்றும்; 3, 4-ஆம் பாடல்களில் தருணேந்து சேகரன் என்றும், 4-ஆம் பாட்டில் சாந்தை காவிரியின் தென்கரையில் உள்ளது என்றும்; |

5-ஆம் பாட்டில் தங்கள் செல்வன் [illegible] ஐந்தெழுத்தை
டம், 'பஞ்சாட்சரத்தை'ப் [illegible] என்று
7-ஆம் பாட்டில் தாமோதரனை உடைய என் மக
கற்போல் உள்ள தன் மனத்தைக் கவர்ந்த குரு
லயா! என்முன் வந்திடாய் என அழைத்தும், நீ
பேசாதிருப்பது அழகா? அழகாகாது என்றும்
8-ஆம் பாட்டில் உண்மை வண்ணத்தையும் [illegible]
வெள்ளத்தையும், பொன்னித் தீர்த்தத்தையும்
கோடிக்கணக்கான முனிவர்களையும், மூர்த்தியையும்
(இறைவன்) திருஉருவங்களையும் ஆவடு துறையில்
அடைந்து அனுபவித்தாள் இவள் அதனால் பெருமை
கொண்டுள்ளார் என்றும்;
விளிநிறைந்த 9-ஆம் பாட்டில் தேனே! அமுதே! மெய்
யடியார் கருத்தை முடித்திடும் குன்றமே! என்
மகளின் மேகலையையும், வளையையும், கொள்ளை
கொள்ளுதல் நியாயமாகுமா? என்றும்;
10-ஆம் பாட்டில் என் மகள் காவிரிக் கரையிலுள்ள
ஆவடுதுறையை அடைந்து நவலோக நாயகன் பால்
சார்ந்தவளாய்த் திருமாலும், பிரமனும் அறியாத
நெறியில் தன்னையும் சேர்த்து விட்டார் இறைவன்
என்று சொல்லி ஏங்கி ஏங்கித் தனது அடக்கமும்,
எல்லை கடந்து அழைக்கின்றாள் என்றும்;
11-ஆம் பாட்டில் என் ஆருயிர்ப் போகமாம் புரகால
காம புராந்தகன் ஆனந்தம் தந்து பாலிப்பான்
என்று கூறித் திருவாவடுதுறை இறைவனொடு
விளையாடுவதற்கே முந்துவாள் என்மகள் என்றும்
அவள் அந்த வழி நின்று விலகாமையை அறிந்
தோம் என்றும் விளக்கப்பட்டுள்ளன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | 7/11 | திரு விடைக் கழி மாலுலா | பஞ்சமம் ஆகிரி | எழுசீர் விருத்தம் (விளம்·மா விளம்·மா விளம்· விளம்· மா.) | 1. ஆசிரியர் சேந்தனர் தலைவியின் தாய்மொழியாக இயற்றிய அகத்துறைப் பாடல்களைக் கொண்டது இப்பதிகம்.<br>2. அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.<br>3. 1-ஆம் பாட்டில் தலைவன் தலைவியின் சங்குவளையைக் கவர்ந்தான் என்றும்<br>2-ஆம் பாட்டில் அவளுடைய எழிலைக் கவர்ந்தான் என்றும்,<br>3-ஆம் பாட்டில் அவளுடைய மேகலையைக் கவர்ந்தான் என்றும்.<br>4-ஆம் பாட்டில் தலைவிக்குத் தலைவன் இடர் விளைவிக்கின்றது நல்லதா என்றும்,<br>5-ஆம் பாட்டில் தலைவியின் துன்பத்தைத் தலைவன் குறிக்கொள்ளாது இருப்பது அழகா? என்றும்,<br>6-ஆம் பாட்டில் தலைவிக்குத் தலைவன் அருள் புரிவானே? என்றும்,<br>7-ஆம் பாட்டில் தலைவி தலைவனை அழகுக்கு அரசு இது என்று மயக்கம் கொள்ளும் விதம் இருந்தவாறு என்னே என்றும்,<br>8-ஆம் பாட்டில் தலைவன் அருள்புரியாமையினால் தலைவி மடல் ஏறத் தொடங்கினள் என்றும்,<br>9 ஆம் பாட்டில் தலைவி மடல் ஏறத் தொடங்குவதைக் கண்டும் தலைவன் தான் அணிந்துள்ள மாலையின் புற இதழைக்கூட வழங்காது இருக்கின்றான் என்றும்,<br>10-ஆம் பாட்டில் திருப்பிடவூரிலுள்ள என் மகளுக்கு அருள் புரியாதிருப்பானே (இருக்கமாட்டான்) என்றும் கூறி |

11-ஆம் பாட்டில் சேந்தனுடைய தங்கள் தாமரைப் பாதத் திருவிடைக்கழி குராப் நிழற்கீழ் நிற்கும் முருகவேளை ஏத்தின இப்பாடல்களைக் கேட்பவருடைய துன்பம் நீங்கும் என்றும் இப்பதிகத்தை ஆசிரியர் முடிக்கின்றார்.

4. 13-ஆம் பாட்டில் சுப்பிரமணியன் என்னும் பெயர் முதன்முதலாக தமிழ்நூல்களில் இங்குத்தான் ஆளப்பட்டது குறிக்கத் தக்கதாகும்.

5. 7 9 10ஆம் பாடல்களில் "தெரிந்த வைதிகர் வாழ் திருவிடைக் கழி" திடங்கொள் வைதிகர் வாழ் திருவிடைக் கழி தெருண்ட வைதிகர் வாழ் திருவிடைக்கழி என்று திருவிடைக்கழி வேதியர்கள் போற்றப்பட்டுள்ளனர்.

6. 8-ஆம் பாட்டில் "திசைமிகு கீர்த்தித் திருவிடைக் கழி' என்று திருவிடைக் கழி சிறப்பிக்கப் பட்டுள்ளது.

7. ஒவ்வொரு பாடலிலும் திருவிடைக்கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற" (குமர-வேலு) என வருகின்றது.

## 3. ஆசிரியர் - கருவூர்த்தேவர்

(பதிகம் 8—17)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| • 3. கருவூர்த் தேவர். | 8/11 | கோயில் கணம்விரி | புறநீர்மை (பூபாளம்) | ஏழுசீர் விருத்தம் (விளம் மா விளம்-மா விளம்-மா.) | 1. ஒவ்வொரு பாட்டும் 'பெரும்பற்றப் புலியூர்த் திருவளர் திருச்சிற்றம்பலமே என முடிவு பெறுகின்றது. 2. 1-ஆம் பாட்டில் சிவபிரான் அணியும் பாம்பின் வர்ணனை நோக்கத் தக்கது. |

3. 3 ஆம் பாட்டில் "தலைவவோ துணைவவோ" என்று புலம்பினால் இறைவன் இரங்கி நலம்புரிவார் எனப்பட்டுள்ளது.

4. 4-ஆம் பாட்டில் சிவன் நடம் செய்யும்போது வாசிக்கப்படும் வாத்தியங்கள் கூறப்பட்டுள்ளன. இருடியர் கணம் துதிப்பதும் நந்தி முழவம் வாசிப்பதும் சொல்லப்பட்டுள.

5. 5-ஆம் பாட்டில், அன்பர் கூட்டத்தில் தம்மையும் சேர்த்ததைக் கூறி ஆசிரியர் இறைவனுக்கு நன்றி கூறுகின்றனர்.

6. 7-ஆம் பாட்டில் மறையோர் ஓமகுண்டத்தில் தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப்புலியூர் எனக் குறித்துள்ளார்.

7. 8ஆம் பாட்டில் பெரும் பற்றப் புலியூரின் தீர்த்த விசேடம் கூறப்பட்டது.

8. 10 ஆம் பாட்டில் இறைவன் நடஞ்செய் சூழலில் எங்கும் பொன்மயப் பேரொளி வீசுவது சொல்லப் பட்டுள்ளது.

9. 11 - ஆம் பாட்டில், ஆசிரியர் பாடிய தீந்தமிழ் மாலையை இறைவன் கருணையுடன் ஏற்றுக் கொண்டது சொல்லப் பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| 9/10 | திருக் களந்தை யாதித் தேச்சரம் கலைகள் தம்பொருள் | புறநீர்மை (பூபாளம்) | ஏழுசீர் விருத்தம் (விளம்·மா விளம் மா விளம்- விளம்· மா.) | 1. 1-ஆம் பாட்டில் ஆதித் தேச்சரம் என்னும் திருக் கோயிலில் மறையவர் வேதம் சொல்லுதல் அலை கடல் முழங்குவதற்கு ஒப்பு என்று கூறப்பட் டுள்ளது.<br>2. 2-ஆம் பாடலில்; அந்தணர் அழுக்கு ஒப்புதல் கூறப் பட்டுள்ளது.<br>3·9 பாடல்களில் சிவபிரான் இன்ன தன்மையர் என்பது விளக்கமுற அடையாளங்கள் கூறப் பட்டுள.<br>4. 10 ஆம் பாடலில், கருவூரர் பாடிய தமிழ் மாலையை ஓதவல்லவர் அஞ்ஞானத்தைப் போக்கிய மனமுடையவராவர் என்பது தெரிவிக்கப்பட் டுள்ளது. |
| 10/11 | திருக் கீழ்க் கோட்டூர் மணி அம்பலம் தனிரோளி | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்·மா விளம் மா விளம்- விளம்- மா.) | 1. இது அகப்பொருள் பதிகம்.<br>தான் காதல் கொண்ட தலைவன் தன் மனத் தில் கலந்து ஒன்று பட்டான் என்று தலைவி தோழி யிடம் கூறுவது.<br>2. மணி அம்பலத்தில் பெருமான் நடம் புரிவது பாட்டு 3, 5, 6, தவிர மற்றப் பாடல்களில் கூறப் பட்டுள்ளது.<br>3. 3ஆம் பாட்டு வண்டுவிடு தூது.<br>4. 4-ஆம் பாட்டு, அங்கமாலைப் பாட்டு. உடல் சிவனது திருநீற்றை விரும்பும், செவி அவன் அறிவு நூல் கேட்கும், வாய் அவன் பேர் விளம்பும் கண்கள் அவனது விமானத்தை நோக்க, மூக்கு அவனை நினைத்துப் பெருமூச்சு விடும். |

5, 6, பாடல்களில் தலைவன் மணி அம்பலவனைக் காண மயங்கிய தலைவி அவன்மேல் ஆசை நீங்கவில்லை என்று தோழியிடம் கூறுகின்றாள்,

7-ஆம் பாட்டில், வில்வச் சடைமுடி, வெண்ணீறு, சங்கம் சகடை வாத்திய முழக்கு குழைச்செவி, சடைக்கற்றை விடை ஆகிய இவைதாம் தலைவர் மணி அம்பலவருடைய செல்வப் பொருள் போன்றுள.

8-ஆம் பாட்டில் சிலம்பு, சதங்கை, தமருகம், திருவடி, திருநீறு, இன்னகை, கங்கை கோங்(கு), இதழி, (கொன்றை) இளம்பிறை, குழை, இளமான், இவை தமை அம்பலத்தில் ஆடுகின்ற பெருமான் என் (தலைவியின்) மனத்தில் வைத்துள்ளான் என்கிறாள் தலைவி.

9 ஆம் பாடலில், தமது பாதுகை, சிலம்பு இவை தன் மனத்தில்புகத் தன்கண்ணுள் நீங்காது நின்றார் பெருமான் என்கிறாள் தலைவி.

10-ஆம் பாடலில் சிவபெருமானுடைய அந்திச் செவ் வானம் போன்ற உருவத்தையும், பிறைசேர் செஞ் சடையையும் வெண்ணீற்றையும், என் மனத்தில் நினைத்துப் பார்த்தால் என் மனமே காணேம் யான் என்ன செய்வேன்? மணி அம்பலத்தில் நின்றாடும் இறைவனே என் மனக் கருத்தை அறிவர் என்று கூறுகின்றாள் தலைவி,

11-ஆம் பாடல், இம் மாலையை ஓதுவாரை இலக்குமி எதிர்கொண்டு சிறப்பிப்பள் என்ற பயன் கூறும்,

| | | | | |
|---|---|---|---|---|
| 11 10 | பூந்தத்தை புவன நாயகன் | பஞ்சமம் (ஆகிரி) | அறுசீர் விருத்தம் (விளம்-மா விளம்-மா விளம்-விளம்-மா.) | 1 முதல் 10 இத்தலத்தில் இறைவன் பெயர் புவன காபரணன் என்பது: பாடல்களில் விளக்கப்பட்டுள்ளது. தமது அகத்திலும், பூந்தத்தை என்னும் தலத்திலும் இறைவன் கன்னல், பால், தேன், அமுது, கனி போல இன்பராய் கல் நெஞ்ச உள்ள தன்னை ஆண்டு அமர்ந்துள்ளார் என்றும், ஐம்புலன்களால் தனக்கு விளைந்த வேதனைகளை ஒழித்துத் தம் பிழைகளைப் பொறுத்துப் பாசத்தை அகற்றித் தனக்குத் தாயும் தந்தையுமாகி விளங்குகின்றார் என்றும் தாம் அருளிய தீந்தமிழ் மாலையை ஒழுக்கத்துடன் பாடும் அடியார்கள் சிவபதம் அடைவர் என்றும் ஆசிரியர் சொல்லியுள்ளார்.<br>6-ஆம் பாட்டில், மண் ஈரமாய் இருக்கும்பொழுது, நீர் பட்டால் கரைந்து போகும், ஆனால் அதே மண்ணைச் சுட்டுப் பானை ஆக்கினால் அந் நீரை அம்மண் தாங்கும். அது போல வினையினால் இறைவனை நினையாது அழிகின்ற தன் மனம் இறைவன் அருள் என்னும் 'தீ' பட்டால் இறைவனை ஏற்று விளங்கும்.<br>என ஓர் அருமையான உவமை கூறப்பட்டுள்ளது. இதே கருத்தைப் 17-ஆம் பதிகத்தில் 7-ஆம் பாட்டிற் காணலாம். |
| 12/11 | திரைலோக்கிய சுந்தரம் நீரோங்கி | காந்தாரம் (நவரோசல்) | நான்கு சீர்கொண்டது கொச்சகக் கலிப்பா. | 1. இது ஒரு அகப்பொருள் பதிகம். முதல் இரண்டு பாடல் தலைவி கூற்று. 3 முதல் 10 வரை தோழி தலைவியைப் பற்றித் தலைவனிடம் கூறும் கூற்றாகும் ஒவ்வொரு பாடலும் "கோடைத்திரைலோக்கிய சுந்தரனே" என முடிகின்றது. |

2. பாட்டு 3 இது விளி நிறைந்த பாட்டு.

பாட்டு 8 (பாதிரம் போது) பாதிரிப் பூ சொரிகின்ற கோடை என உரை விளக்கப்பட்டுள்ளது.

பாட்டு 2. 5. 10 இவை இரக்கச்சுவைப் பாடல்கள்.

பாட்டு 11 "ஆரணத் தேன் பருகி...... தமிழ் மாலை சாற்றும், கருவூரன்' என வருவதால் கருவூர்த் தேவர் அந்தணர் என்பது பெறப்படும்.

பாட்டு 3 இப்பாட்டில் பளிங்கின் தன்மை கூறப்பட்டுள்ளது.

பாட்டு 4 'ந' கரத்திற்கு 'ஞ' கரம் இடைப்போலியாய் எதுகையில் வந்துள்ளது.

பாட்டு 5 கண்ணிரைக் "கோவாத மணிமுத்து" எனக் கூறியுள்ளார்.

பாட்டு 6 சிவன் நாமத்தைப் பயில்வதும், அவர் திறம் நினைந்து அழுவதுமே ஒருவர் பெறும் பேறு எனக் கூறியுள்ளார்.

பாட்டு 7 "சாய்க் காட்டாய்" என்னும் சொல் 'சாய்க்காடு' என்னும் தலத்தையும் (சாய் சாயலைக் காட்டாய் என்னும் பொருளையும் குறிக்கின்றது

பாட்டு 8 பிறையும் யாழ் இசையும் காமத்தை வளர்ப்பன என்பதைத் தெரிவிக்கின்றது.

பாட்டு 9 பொது நீக்கி ஆளும்படி செய்கின்ற விண்ணப்பம் உள்ளது.

பாட்டு 10 'மடந்தையர் தம் முழங்கொலியும்; வழங்கொலியும்' என வருவதில் சொல் அழகைக் காண்கின்றோம்.

. 18 11 கங்கை கொண்ட சோளேச்சரம் அன்னமாய்
[illegible] (ஆகிரி)
[illegible] விருத்தம் (விளம்-மா விளம் மா விளம்-விளம்-மா)

இப்பதிகம் பக்தி ரசம் நிரம்பியது
பாட்டு 1 ஒன்று முதல் நான்கு எண்ணிக்கை [illegible] 'ஒருவனும் இருவர்' 'மூக்கண்' 'நால்வேத [illegible] நடந்தோன் கன்னலே' எனப் [illegible]ள்ளார்.
பாட்டு 3 சிவனை ஓர் "அற்புதத் தெய்வம்" என்கின்றார் ஏனெனில் தம்மை உண்மை வழியில் துதிக்கும் தொண்டர்க்கு அவர் எல்லா இன்பப்பொருளும் ஆவார் ஆதலின்,
பாட்டு 4 (1) "முகமலர்ந்(து) இருகணீர் அரும்பக், கைகள் மொட்டிக்கும் என்பதில் மலர், அரும்பு, மொட்டு என வந்திருப்பது ஓர் அழகு 2. "சிவன் சடையைச் சைவம் விட்டிட்ட சடை' என்கிறார்.
பாட்டு 5 சிவபெருமான் "கருதுவார் கருதும்" உருவத்தினர் ஆவார்; எல்லாத் தெய்வமும் ஆவார்.
பாட்டு 6 1. கங்கை கொண்ட சோளேச்சரத்தானே! உன்னுடைய பெருமையைக் காணும்போது அண்டமும் அணுவாகத் தோன்றும் உன்னுடைய சிறுமையைக் காணும்போது அணுவும் அண்டமாகத் தோன்றும்.
2. நான் உண்ணும் உணவு உனக்கு ஆகும் வகையில், நீ எனது உள்ளத்தில் நிறைந்து எழுகின்ற சோதியாக விளங்குவாயாக!
பாட்டு 7 திரிபுராதிகள் மூவர்க்குப் பெருமான் அருள்புரிந்தமை கூறப்பட்டுள்ளது.
பாட்டு 8 பெண்கள்மேல் வைத்த ஆசையை நூறாயிரம் கூறிட்டு அதில் ஒரு கூறு பிரானிடத்தில் வைத்தால் பிரான் அமரர் உலகத்தை அளிப்பார் என்கின்றார்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பாட்டு 8, 10 பெருமான் தனது கைத்தலத்தைத் தமது சென்னிமேல் வைத்த அருளைத் தெரிவிக்கின்றார்.<br>பாட்டு 10 உமை அம்மை கண்டால் கோபம் கொள்வாள் என்று கங்கையைச் சடையில் ஒளித்து வைத்திருக்கின்றார் பெருமான் என்பதை நயம்படக் கூறுகின்றார்.<br>பாட்டு 11 கையில் ஓடு ஏந்திப் பலிக்குத் திரிகின்ற கருவூரன் எனத் தம்மைப்பற்றிக் கூறி உள்ளார். |
| ,, 14/8 | திருப் பூவணம் திருவருள் | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்-மா விளம்-மா விளம்- விளம்- மா.) | 1. இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலும் ஆவண வீதிப் பூவணங் கோயில் கொண்டாயே என முடிகின்றது.<br>இப்பதிகத்தில் 8 பாடல்களே உள்ளன.<br>2. பாட்டு 1 2 4 6 7 எண்ணுள்ள பாடல்களில் சிவபிரான் பிறர்மாட்டு அருமையும் தன்மாட்டு எளிமையும் காட்டித் தன்னை ஆண்டதை நினைத்து இறைவனுக்குக் கருவூரர் நன்றி செலுத்துகின்றார்.<br>பாட்டு 3 1. திருவிழாவில் சுவாமி வீதி வலம் வரும்போது அடியார்கள் பின்சென்று தேவாரப் பாடல்களை ஓதிவரும் வழக்கம் கூறப்பட்டுள்ளது.<br>2 பெருமான் கையில் உள்ள தமருகம் (உடுக்கையின்) ஒலி கடல் ஒலிக்கு ஒப்பிடப்பட்டுள்ளது.<br>பாட்டு 8 ஈற்றுப் பாட்டு தாம் பாடிய திருப்பூவணப் பதிகத்தைப் ''பாவணத் தமிழ்கள்'' என ஆசிரியர் கூறியுள்ளார்.<br>(சுந்தரர் கூறியதுபோல.) |

| | | | | |
|---|---|---|---|---|
| ,, 15/10 | திருச்சாட்டியக் குடி பெரியவா கருணை | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்-மா விளம்-மா விளம்- விளம்- மா.) | பாட்டு 1 · ஏழ் இருக்கை [illegible]<br>"ஏழ் இருக்கை" என்னும் சொற்றொடர் பாடல்களில் வருகின்றன.<br>பாட்டு 2<br>ஈசனுக்கு ஆரம்—பாம்பு.<br>பரிகலம்—கபாலம்<br>பட்டவர்த்தனம்—இடபம்.<br>மஞ்சன சாலே—அன்பர் கண்ணீர்.<br>தேவி—மலேமகள்.<br>சாந்தம்—திருநீறு.<br>கீதம்—நான்மறை<br>முடி—சடை.<br>எனக் கூறியுள்ளார்.<br>பாட்டு 3 ஈசனேத் தொழுது பின்செல்பவர்—அயன் [முதற்கூட்டம்.<br>தொடர்வன—நான்மறை.<br>உறைவிடம்—சுடுகாடு.<br>போர்வை—யானேத்தோல்.<br>ஊண்—ஏற்கும் பிட்சை.<br>கோவணம்—பாம்பு.<br>செபவடம்—பளிங்கு மாலே.<br>எனக் கூறியுள்ளார்.<br>பாட்டு 4 ஈசனுக்கு<br>பாடும் பாட்டு—நான்கு வேதங்கள்.<br>பாடும் கந்தர்வர்—தும்புருவும், நாரதரும்.<br>புகலிடம்—நடனசாலே.<br>தாளவொத்து—உடுக்கை.<br>கமலாசனம்—சாட்டியக் குடியார் இதயம்.<br>ஆகும் எனக் கூறியுள்ளார், |

பாட்டு 5 இரண்டு முகங்களும், மூன்று கால்களும்; ஏழு கைகளும் கொண்ட அக்னி தேவன் வடிவமாக உள்ள ஈசனுக்குத்
திருமகன்—முருகன்.
தேவி—உமையாள்.
மருமகன்—மதனன் (காமன்)
மருமகன் தாய்—திருமகள் (இலக்குமி).
மாமன்—இமவான்.
தோழன்—குபேரன் (தனபதி)
எனக் கூறியுள்ளார்.
பாட்டு 6 7 இவை விளி நிலை நந்த பாடல்கள்.
பாட்டு 8 "போற்றி போற்றி" என வரும் பாட்டு.
பாட்டு 9 அருளாய், அருளாய் என வரும் பாட்டு.
பாட்டு 10 திருவடி மலர்மேல் காட்டிய பொருள்களை என்பதில்

"பொருள்களை" என்னும் விளச்சீர் "பொருளை" என மாச்சீராக இருக்க வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | 16/11 | தஞ்சை இராசராசேச்சரம் உலகெலாம் | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்-மா விளம்-மா விளம் விளம்-மா) |

(1) "இஞ்சிசூழ் தஞ்சை இராசராசேச்சரத்து இவர்க்கே" என்பது ஒவ்வொரு (1 முதல் 10) பாட்டு ஈற்றிலும் வருகின்றது.

(2) பாட்டு 1 பின்னிரண்டு அடிகள் தஞ்சை இராசராசேச்சரக் கோயிலுக்கு அகழியும், மதிலும் அமைந்திருத்தலைச் சிறப்பித்துக் கூறுகின்றன. முன் இரண்டு அடிகள் இறைவனுடைய திருமேனிப் பேரழகைப் பற்றிக் கூறுகின்றன.

பாட்டு 2 இறைவன் திருவடி தம் மனத்தில் புகுந்தன. போந்தன இல்லை. ஆதலால் வேறு உறவு யாதானாலும் தமக்கு வேண்டுவதில்லை என்கின்றார் ஆசிரியர் கருவூரர்.

பாட்டு 3 இராசராசேச்சரம் பெருமான் குடை நிழலில் விடை மேல் உலாவருகின்ற கருத்து யாதோ என வினவுகின்றார் கருவூரர்.

பாட்டு 4 தஞ்சை இராசராசேச்சுரம் என்னும் பெரிய கோயிலிலுள்ள பெருவுடையார்க்கு மாளிகையிலுள்ள பெண்கள் யாழ் வாசிப்பர் என்கின்றார் ஆசிரியர்.

பாட்டு 5 தஞ்சை இராசராசேச்சுரர் யாராலும் அறிதற்கு அரிய பெருமையுடையவர் என்பதைத் தெரிவிக்கின்றார் கருவூரார்.

பாட்டு 6 இது அகப்பொருட் பாட்டு 'நற்றாய் தன்' மகள் பொருட்டு இரங்கல் துறையாக அமைந்துள்ளது. பெருமான், குயில்போன்ற தன் மகளை மையல் செய்வது அழகாகுமோ? என வினவுகின்றாள்.

பாட்டு 7 இப்பாட்டுப் பிறவிக்கு இனிய இளந்தளிரையும் இறத்தலுக்கு இலை உதிர்தலையும் உவமையாகக் கூறுகின்றது.

பாட்டு 8 பெருமான் தம் நெஞ்சில் வந்து வீற்றிருக்கும் எளிமையைக் கருவூரர் வியக்கின்றார்.

பாட்டு 9 கங்கை நீர் ததும்புவதால் சிவனது நெற்றியிலுள்ள திருநீறு அழிகின்றது என்றும், வஞ்சகர்க்கு மேகத்தால் மறையும், சூரியன் போல்வார் சிவனார் என்றும், தமது அடியார்க்கு இளவேனிற் காலத்துச்

சூரியன் போல் விளங்குவர் சிவனார் என்றும் அவர் தன்மை கூறப்பட்டுள்ளது.

பாட்டு 10 (1) தனியர்; (2) ஆயிரவர்; (3) எவ்வயத்திலர்; (4) கனியர்; (5) தீங்கரும்பர்; (6) வெண்புரி நூற்கட்டியர்; (7) ஆர் அமிர்தர்; (8) புனிதர்; (9) பொற்கழலர்; (10) சடாமகுடர்; (11) புண்ணியர்; (12) பொய்யிலா மெய்யர்க்கு இனியர்-என, சிவன் தன்மை பன்னிரண்டு விதத்தில் சிறு சொற்களாலும் சொற்றொடராலும் விளக்கப் பெற்ற அருமையைக் காண்க.

பாட்டு 11 (1) சரளம்; (2) மந்தாரம்; (3) சண்பகம்; (4) வகுளம்; (5) சந்தனம் ஆக ஐந்து மரங்களின் பெயர் அடைமொழியின்றிக் கூறப்பட்டுள்ளது. (2) "அருமருந்த அருந்தி அல்லல்தீர் கருவூர்" என்று தம்மைக் குறிப்பிடுகின்றார். இதனால் கருவூர்த் தேவர் பழவினையால் நோயினால் பிடிக்கப்பட்டு இருந்தவர் என்றும் அரிய பச்சிலை முதலிய மருந்துகளைத் தின்று நரை திரை மூப்பு, நோய் என்ற துன்பம் இல்லாமல் உடல் வன்மை பெற்றுச் சித்தி நிலையடைந்தவர் என்றும் வரலாறு கூறும்.

[திருவிசைப்பா தெளிவுரை திருப்பனந்தாள் பதிப்பு 20.12.1964 பக்கம் 218]

| | | |
|---|---|---|
| 17/10 வெய்ய செஞ் சோதி | பஞ்சமம் (ஆகிரி) | ஏழுசீர் விருத்தம் (விளம்-மா, விளம்-மா விளம் விளம்-மா) |

(1) [அண்ட வானவர்]

"மருவிடம் திருவிடை மருதே" என்பது பாடல் தோறும் கூறப்பட்டுள்ளது.

(2) பாட்டு 1 தாம் (கருவூரர்) காதலிக்கும் பெருமான் "மருவிடம் திருவிடைமருதே" என்கின்றார்.

சிவபிரான்

பாட்டு 2 (1) [illegible] கின்றார் ஒல்லும் [illegible] யும், கலப்ப அவர் (விற்றிருக்கும் இடம்) [illegible] திருவிடை மருதூர் ஆகும்.

(2) இந்திரலோகம் முழுவதும் தமக்குப் பணி செய்யக் காத்திருக்கத் தாம் போய் அகந்தோறும் பலிக்கு (பிச்சைக்கு)ப் பிரான் திரிவர் என்று கூறப் பட்டுள்ளது.

பாட்டு 3 நடுநல் யாமத்துத் தன் மனத்தின்கண் அணுகி நுணுகிச் சிவபிரானை தேவியுடன் தன்னுள் ளத்தில் கலந்தார் என்கின்றார் கருவூரார்.

பாட்டு 4 (1) தான் செய்கின்ற பணியை மகிழ்ந்து ஏற்கின்றார் உமை பாகத்தர், என்கின்றார் கருவூரார்.
(2) யானை உரி ஆடையுடன் அரையில் உள்ள (புலி உரி) ஆடையின் அருகே கட்டியுள்ள பாம்பு உமிழும் மணி ஒளி வீசச் சிவபிரான் வீற்றிருக்கும் இடம் திருவிடை மருதூர்.

பாட்டு 5 பல பிறவிகளில் சிறிது சிறிதாக ஞான நிலையை அடைதலை இங்குக் கூறியுள்ளார்

பாட்டு 6 (1) பைய்க்கணம் ஆடத் தன் மேனி மீதுள்ள பாம்பு ஆடத் தான் ஆடும், இவனுடைய ஆடலைக் கூறுகின்றனர் இப்பாட்டில்.
2. இருள் சூழ்ந்த நடுநல் யாமத்தில் அருள்புரிகின்ற புன்சிரிப்புடன் பெருமான் கருணை புரிவது கூறப்பட் டுள்ளது.

பாட்டு 7 பச்சை மட்கலம் நீர் பட்டால் நனைந்து உருகும் அம்மட்கலம் சுட்ட பின்பு நீரைத் தாங்கி நிற்கும். இறைவன் அருள் பெறுத நிலைக்குப் பச்சை

மட்கலமும், இறைவனின் அருள் பெற்ற பின்னுள்ள நிலைக்குச் சுட்ட மட்கலமும் உவமையாம். இதே கருத்தைப் 11 ஆம் பதிகம் (திருமுகத்தலை) 6-ஆம் பாட்டிலும் காணலாம்.

பாட்டு 8 (1) தம்மைச் செந்தீயில் சுட்ட செங்கல் போலச் செம்மைப் படுத்தித் தமது உள்ளத்தில் வந்து வீற்றிருக்கின்றார் பெருமான் என்கின்றார் ஆசிரியர்.

2. நூறு நூறாயிர கோடி அண்டங்களிலுள்ள தேவர்களுக்கு தேவனும் சிவபெருமான். வீற்றிருக்குந் தலம் திருவிடை மருதூர் என்கின்றார் ஆசிரியர்.

பாட்டு 9 கலங்கல் நீர் ஆன்மாவிற்கும், மண் ஆணவம், மாயை, கன்மம் என்னும் மலத்திற்கும், திருவருள் நீரைத் தெளிவிக்கும் பொருளுக்கும் உவமை கூறப்பட்டுள்ளது.

பாட்டு 10 (1) தாம் பாடிய கரும்பனைய தீந்தமிழ் மாலையை மருதயாழ் வாசிக்க இறைவன் எழுந்தருளுவார் என்று குறிக்கின்றார் ஆசிரியர்.

(2) மக்கள் தூங்குகின்ற நடுநல்யாமத்தில் கண்கள் செழுஞ்சுடர் ஒளியொடு கலந்து பொருள்களைப் பார்ப்பதுபோல இறைவனுடைய அறிவோடு கலந்து உணருந்தன்மையை அடைந்த கருவூர்த் தேவன் என்கின்றார் தம்மை.

## 4. ஆசிரியர் பூந்துருத்தி நம்பி காட நம்பி

### பதிகம் 18 - 19— திருவாரூர்

| | | | | |
|---|---|---|---|---|
| 18/2 | திருவாரூர் | பஞ்சமம் (ஆகிரி) | எழுசீர் விருத்தம் | இப்பதிகத்தில் இரண்டே பாடல்கள் உள்ளன (1) "ஆரூர் ஆதியாய் வீதிவிடங்கராய் நடம்குலா |

| | | | |
|---|---|---|---|
| புத்தருத்தி தம்பி காட தம்பி | [illegible] குவால் | [விளம்-மா விளம்-மா விளம் விளம்-மா] | [illegible] பாடல்[illegible] |
| | | | (1) பாட்டு 1 [illegible] யும் [illegible] |
| | | | [[illegible] அம்மையையும் தமக்கு [illegible] முருகப்பெருமானையும் பெற்ற [illegible]] விடங்கர் - ஒளியால் செதுக்கப்[illegible] மூர்த்தி; நடனம் அஜபா நடனம் [illegible] லால் இவர் "இருந்து ஆடும் பெருமான்" எனப் பெயர் பெறுவர். |
| | | | பாட்டு 2 "[illegible]" விளங்கும் தியா கேசருடைய 'திருவுரு' இருந்த தன்மையைத் தேவர் களை அழைத்துப் பார்க்கச் சொல்லுகின்றார் ஆசிரியர். |

## 19—கோயில்

| | | | |
|---|---|---|---|
| 19/10 | கோயில் (தில்லை) முத்து வயிர மணி | சாரளபண் பாணி இது தேவா ரத்தில் இல்லாத பண் ஆனந்த பைரவியில் சுத்தாங்க மாக ராகத் தோடுபாடப் படுகிறது | 4 சீர் கொண்டது கொச்சகக் கலிப்பா |

(1) பாட்டு 1 சிவபிரானுக்குத் தில்லை அம்பலமே நடனசபையாக ஆயிற்று.

(2) பாட்டு 2 கைம்புல்லர் கல்லைப்பர் என்னும் அடியார்கள் அமருலகம் ஆளப், பெருமான் அங் ஙனம் ஆளாமல் தில்லை மூவாயிரம் அந்தணர் களோடு குடி வாழ்க்கை கொண்டு உள்ளார் என் கின்றார் ஆசிரியர்.

பாட்டு 3 திருநாவுக்கரசருக்கு முத்தி வீட்டுக்கு வழி காட்டிய நீ தில்லைச் சிற்றம்பலத்தைக் கூத்தாடு அரங்காகக் கொண்டனை.

பாட்டு 4 சம்பந்தரைச் சிவன் ஆட்கொண்டது கூறப் பட்டுள்ளது.

பாட்டு 5 கலையா உடலோடு சேரமானும், ஆரூரரும் வெள்ளானையின் மீது சென்றதைப் பற்றியும் மூவாயிரவர்களோடு பெருமான் விளையாடுவதைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது.
பாட்டு 6 புண்ணியங்கள் நண்ணிய சீர்ச்சிவலோகம் தில்லைச் சிற்றம்பலமே என்பதை இப்பாடல் விளக்குகின்றது.
பாட்டு 7 மாளிகை மேல் மாதர்கள் துதி பாடத், தில்லைச் சிற்றம்பலத்தைப் பெருமான் இடமாகக் கொண்டுள்ளார்.
பாட்டு 8 மாதர் தொழுதேத்தும் பொன்னம்பலத்தை நாள்தோறும் நடனம் செய்யும் சபையாகக் கொண்டுள்ளார் பெருமான்.
பாட்டு 9 சிவனே ! மாலும் அயனும் ஏத்த உனக்குச் சிற்றம்பலமே நடன சாலையாக ஆயிற்று.
பாட்டு 10 சிற்றம்பலத்தான் ஆடல் அதிசயத்தை அறிந்து தாம் (ஆசிரியர் காடநம்பி) இத்தமிழ் மாலையைப் பாடினதாகக் கூறி அதைத் கருத்தறிந்து பாடவல்லவர் சிவன் திருவடியை அடைவார்கள். என்று கூறியுள்ளார்.

## 5. ஆசிரியர் - கண்டராதித்தர்

பதிகம் - 20—கோயில்

| | | | | |
|---|---|---|---|---|
| கண்டராதித்தர் | 20/10 | கோயில் பஞ்சமம் (தில்லை) (ஆகிரி) மின்னூர் உருவம் | 6 சீர் 4 மா; விளம்; கூவிளங்காய் | (1) பாட்டு 1 பல மாளிகைகளுக்கு நடுவில் பொற்குன்று போல் திகழ்வது தில்லைச் சிற்றம்பலம்.<br>பாட்டு 1 to 9 தில்லை அம்பலத்துப் பெருமானை நான் என்று சேர்வேன், என்று கூடுவேன் |

[illegible] ([illegible]) [illegible] [illegible] [illegible] [illegible] என்று [illegible] [illegible] [illegible].

பாட்டு 2 தில்லைவாழ் அந்தணருடைய சிறப்புச் செயல்களைக் கூறும் இப்பாட்டு.

முத்தீ, நான்மறை, ஐந்து வேள்வி; ஆறு அங்கம்; கோமேத யாகம்; ஆகுதி, [சிவாக்கினியை வளர்த்தல்] ஆகிய செயல்களுக்கு உரியவர் தில்லை வாழ் அந்தணர்.

பாட்டு 3 மூவாயிரவர் ஓதும் நான் மறையை அங்குள்ள வண்டுகள் தெத்தே என்று பாடும்.

பாட்டு 4 பெருமான் ஆனைஞ்சாடுதல் கூறப்பட்டுள்ளது.

பாட்டு 5 அருள்புரிக என்று தில்லை அம்பல முன்றிலில் திருமால் வரம் கிடத்தல் கூறப்பட்டுள்ளது.

பாட்டு 6 பதஞ்சலி முனிவர்க்குத் தில்லை அம்பலத்தில் ஆடல்தரிசனம் பெருமான் தந்தது கூறப்பட்டுள்ளது.

பாட்டு 7 மலையை எடுக்க முயன்ற இராவணனுடைய இருபது தோளும் இறச்செய்து பின்னர் அவனுக்குச் சிவன் வாளும், நாளும் கொடுத்தது கூறப்பட்டுள்ளது.

பாட்டு 8 பாண்டிய நாட்டையும், ஈழநாட்டையும், வெற்றி கொண்ட சோழனைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

பாட்டு 9 தில்லை அம்பலத்தில் திருமால், பிரமன் ஆகிய தேவர் கூட்டத்தின் முடிகள் நெருங்கி விழும்

மணிகளை அடியார் அலகினால் ஒதுக்கித் திரட்டுவது கூறப்பட்டுள்ளது.

பாட்டு **10** (1) கண்டராதித்தர் தம்மைக் 'கோழி வேந்தன் தஞ்சையர் கோன்' எனக் கூறியுள்ளார். (2) மோட்ச வீட்டைப் "பேராவுலகு" எனக் கூறியுள்ளார்.

குறிப்பு : இப்பதிகம் சுந்தரர் தேவாரம் 83, 84 பதிகங்களைப் பின்பற்றுவது என்பது "என்று கொல் காண்பதுவே "என்று கொல் எய்துவதே" என வருவதினின்று தெளிவாக ஏற்படுகின்றது.

## 6. ஆசிரியர் - வேணாட்டடிகள்

### பதிகம் - 21—கோயில்

| | | | | |
|---|---|---|---|---|
| வேணாட்டடிகள் | 21/10 | கோயில் புறநீர்மை [தில்லை] பூபாளம் ஆச்சாள | 4 சீர் கொச்சகக் கலிப்பா | (1) 1 to 9 "திருத்தில்லை நடம்பயிலும் நம்பானே" என ஒவ்வொரு பாட்டும் முடிகின்றது.<br>(2) பாட்டு 1 திக்கற்ற என்னை நீ விரும்புகின்றாயில்லை, பெருமானே !<br>பாட்டு 2 வழி அடிமை ஆகிய என்னை நீ விரும்புகின்றாயில்லை, பெருமானே !<br>பாட்டு 3 நான் ஆசைப்பட்டு அழைத்தாலும் பெருமானும், உமையம்மையும், என்னைக் கவனிக்கவில்லை, என்னுடன் பேசவில்லை என ஆசிரியர் வருந்துகின்றார்.<br>பாட்டு 4 நோய், பிணியால் நான் வருந்துவதைக் கண்டு இவன் வணங்குகின்ற பிரானே இவனைப் பொருட்படுத்தவில்லை என்று புறச்சமயத்தார் பரிகசிப்பார் என்கின்றார் ஆசிரியர்.<br>**பாட்டு 5 தில்லைப் பெருமானே ! உன்னை நினையாமல்** |

இருந்தாலும் அங்ஙனம் இருக்க விடமாட்டாய். எதிரிலும் வரவும் மாட்டாய் இது நல்லதா?

பாட்டு 1-6 இந்த ஆறு பாட்டில் 1, 2, 3, 5, 6 பாட்டுகளில் 5 பழமொழிகள் உள்ளன. அவைதாம்

பாட்டு 1 "கைச்சாலுஞ் சிறு கதலி இலை வேம்புங் கறிக் கொள்வார்"

பாட்டு 2 "தம்பானை சாய்ப்பற்றார்"

பாட்டு 3 "பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம்"

பாட்டு 5 "கன்றுபிரி கற்றாப்போல் கதறுவித்தி"

பாட்டு 6 "இடுவது புல் ஒரு எருதுக்(கு), ஒன்றினுக்கு வை இடுதல் நடு இதுவோ?

[வை - வைக்கோல்] இதனால் வேறுபாட்டினை ஒரு பழமொழி ஆசிரியர் எனவும் கூறலாம்.

பாட்டு 6 அகத்தியருக்குச் சிவபெருமான் பிரணவப் பொருளை உபதேசித்தது கூறப்பட்டுள்ளது

பாட்டு 7 "பெருமானே! மனிதர்க்கும், வானவர்க்கும் நீ கண் ஆவாய் ஆனால் நான் "அன்னேவா" என்று மனக்கசிவுடன் உன்னை அழைத்தாலும் நீ வருகின்றாயில்லை' என ஆசிரியர் வருந்துகின்றார்.

பாட்டு 8 நான் பொய்யொடு கூடாமல் விடுபெறுதற்கு எனக்கு வழி உதவி செய்ய வேண்டுகின்றேன். உன்னை நினைந்து மனம் உருகுவேன் அவ்வளவு தான் எனக்குத் தெரியும் நான் உன்னை அடையும்படி நீ அருள மாட்டாயா.

பாட்டு 9 இன்னும் பெருமானே! நான் உன்னைத் "தோளாரக் கையாரத் தொழுதாலும் என்னை நீ ஆளமாட்டாயா! உன் திருவடியைச் சேர்வது எந்த நாளோ?

பாட்டு 10 தொண்டன் ஓயாது அழைக்கின்றான் என்று அருளினால் மிகநன்றாம். சாகும்போதிலேனும் நீ காட்சி கொடுக்கத் தடை செய்ய முடியாது.

## 7. ஆசிரியர் - திருவாலியமுதனார்

பதிகம் - 4—22—25—கோயில் 1

| | | | | |
|---|---|---|---|---|
| திரு வாலி யமுதனார் | 22/11 | கோயில் [தில்லை] மையல் மாது | பஞ்சமம் (ஆகிரி) | கலவைப் பாட்டு |

(1) இப்பதிகம் பாதாதிகேசப் பதிகம் [பதிகம் 2 போல்].

(2 பாட்டு 1 அம்பலத்தானுடைய செய்ய பாதத்தைத் தியானித்தது ஆகும்.

பாட்டு 2 கூத்தனுடைய கழல், சிலம்பு, கிண்கிணி இவைகளைத் தியானித்ததாகும்.

பாட்டு 3 தில்லைக் கூத்தனுடைய திருத்தொடைகளைத் தியானித்ததாகும்.

பாட்டு 4 சிற்றம்பலவனுடைய திருக்கச்சினைத் தியானித்ததாகும் (கச்சு-இடைக்கட்டு)

பாட்டு 5 தில்லை அம்பலவன் திருமேனி, திருவயிறு, உந்திச்சுழி இவற்றைத் தியானித்ததாகும்.

பாட்டு 6 உதரபந்தனத்தை அரைப்பட்டிகையைத் தியானித்ததாகும்.

பாட்டு 7 நான்கு திருக்கைகளையும் திருத்தோள்களையும், திருமார்பையும் திருநீலகண்டத்தையும் தியானித்ததாகும்.

பாட்டு 8 சிற்றம்பலவருடைய முறுவலும் (புன்சிரிப்பு) திருக்காதும், காதினின் மாத்திரையையும், தோடும் ஆகிய இவற்றைத் தியானித்ததாகும். [மாத்திரை - ஒருவகைக் காதணி.]

பாட்டு 9 திருமுகத்தை நெற்றிக்கண்ணுடன் மற்ற இரண்டு கண்களுடன் தியானித்ததாகும்.
பாட்டு 10 அகத்தி மொட்டு மத்தை பிறைச் சந்திரன் ஆகியவற்றைக்கொண்ட பெருமானுடைய சென்னியைத் தியானித்ததாகும்.
பாட்டு 11 நீரும் பூவுந்தூவி, வணங்கித் துதிக்கும் கையினராய் அன்புடன் தேவர்கள் தொழத் தில்லைக் கூத்தனார் ஆடினது கூறப்பட்டுள்ளது.
இங்ஙனம் தில்லைக் கூத்தனைத் திருவாலி சொன்ன சொற்களை விரும்பித் துதிக்க வல்லவர்கள் விடையான் திருவடியை அடைவர் என்கின்றார் ஆசிரியர்.

## கோயில் 2.

| | | | |
|---|---|---|---|
| , 23/10 | கோயில் [தில்லை] பவளமால் | தட்டராகம் பந்துவராளி | 6 சீர் (கலப்பு) |

1. இப்பதிகம் அந்தாதித் தொடையது.
2. இது அகப்பொருட் பதிகம்; ஆசிரியர் பெருமானைக் காதலித்த பெண்ணாகக் கூறுவது இப்பதிகம்.

பாட்டு 1 'பெருமானுடைய திருமேனியும்; அவர் சடையிற் சூடுவனவும் தனது நெஞ்சை உருக்கின'' என்பது தலைவி கூற்று.
பாட்டு 2 நடன தரிசனத்தால் தன் காதல் மிகுதி பெற்றதைக் கூறியதாகும். அந்திப் பொழுதும்; சந்திரனும், கடல் ஒலியும், தனது நெஞ்சில் பாய்ந்து தனது நிறையை அழித்தது என்கின்றாள் தலைவி
பாட்டு 3 மார்க்கண்டேனுக்காக எமனை உதைத்த பாதங்களை தன் கொங்கையின்மீது ஒற்றும்படி

சிலந்தியை அரசனாகச் செய்த தேவதேவனை வேண்டுகின்றாள் தலைவி.

பாட்டு 4 கங்கையைச் சடையில் சேர்த்தும், உமைக்கு ஒருபாகம் ஈந்தும், உதவி செய்த நீ எனக்கு மட்டும் அருள் செய்யாதிருப்பது நியாயமா ?

பாட்டு 5 திருமாலும் பிரமனும் அடி முடி தேடிக் காணமுடியாத எம்பெருமான் பக்தி வலையில் படுவார் ஆதலால் அம்பலத்தானைக் காணத் தன் மனம் பதைபதைக்கின்றது என்கின்றாள் தலைவி.

பாட்டு 6 நான் மெய் வெளுத்தும், அகம் வளைந்தும், பாம்புக்கு அஞ்சி இருந்தபோதிலும் அம்பலத்தான் திருவடியைக் காணும் மனத்திண்மையுடைய தன்னைக் காய்ந்து வருத்துகின்றான் சந்திரன் என்று தலைவி தனது ஆற்றாமையைத் தெரிவிக்கின்றாள்.

பாட்டு 7 உடை புலித்தோல், அணிகலன் அரவம், உண்பது பலி ஐயம், ஊர்வது விடை இவ்வாறு எப்படி இருந்தபோதிலும் தன் நெஞ்சம் அம்பலத்தான் ஒருவனை அன்றி வேறு யாரையும் நினைத்தலை அறியாது என்கின்றாள் தலைவி.

பாட்டு 8 பெற்றோர் உற்றோர், நாணம் இவை எல்லாவற்றையும் கைவிட்டுப் பெருமானே உன்னையே அடைந்தேன், என்னை ஏன்று கொள் என வேண்டுகின்றாள் தலைவி.

பாட்டு 9 நடம்புரிகின்ற பெருமானை "படர்சடைப் பால்வண்ணனே! என்பன்," 'ஏனை மணிப்பூண் அணி மார்பனே என்பன்'. 'அருளாய் என்பன்' எனக்கருள் புரியாய் என்கின்றாள் தலைவி.

பாட்டு 10 தலைவியின் கூற்றாக [illegible] திருவாலி பாடிய பத்துப் பாடல்களைப் பாட வல்லவர் பரமன் திருவடி சேர்வர் என்கின்றார் ஆசிரியர்.

## கோயில் 3.

| | | | | |
|---|---|---|---|---|
| ,, 24/11 | கோயில் (தில்லை) அல்லாய். | இந்தளம் நாத நாமக் கிரியை | ஆறுசீர் கலப்பு. (5 மா காய்) | 1. பாட்டு 1 தில்லையிலுள்ள சிவனடியார்கள் பல்லாயிரக் கணக்கானவர்கள் பதஞ்சலி முனிவர்க்கு ஒப்பானார் பரவத் தில்லையில் தேவன் ஆடுகின்றார். |

2. பாட்டு 2 செந்தமிழும் தமிழும், இசையும் கலந்த சிற்றம்பலத்தில் உமை காணச் சிவன் நடம் ஆடுகின்றார்.

பாட்டு 3 "பொன் மலையுள் வயிரமலை போல" (பொன்னம்பலத்துள் திரு வெண்ணீறு பூசி) இறைவன் தமது வலக்கையினை வளைந்து நின்றாடு கின்றார்.

பாட்டு 4 நந்திதேவர் முழவு வாத்தியம் கொட்ட, கூத்தப்பிரான் தெய்வப்பதியுள் சிற்றம்பலத்தில் நடனம் ஆடுகின்றார்.

பாட்டு 5 ஓமாக்கினியை வளர்க்கும் வேதியர் நிறைந்த தில்லைச் சிற்றம்பலத்தில் தமது தூக்கிய பாதத்தில் (குஞ்சித பாதத்தில்) சிலம்பு ஒலிக்கப் பெருமான் ஆடுகின்றார்.

பாட்டு 6 குரவம் கோங்கம், புன்னை, கைதை இவை குவிந்திருக்கும் கடற்கரை உள்ள தில்லைச் சிற்றம்

பகைத்திடல் மறையோர் ஏத்த அரவம் ஆட, அனல் கை ஏந்தி அழகர் ஆடுகின்றார்.

பாட்டு 7 சித்தர், தேவர், இயக்கர், முனிவர் இவர்கள் 'அத்தா! அருளாய்' என்று துதிக்க அம்பலத்துள் சடைகள் தாழக் குழகன் நட்டம் ஆடுகின்றார்.

பாட்டு 8 'இராவணனை விரலால் அடர்த்தவரே அருள் புரிக' என்று சிற்றம்பலத்தில் மறையோர் வணங்கப் பவளமேனிப் பெருமான் ஆடுகின்றார்.

பாட்டு 9 சிற்றம்பலத்தில் திருமாலும், பிரமனும், இந்திரனும் 'அலமண்ட அருளாய்' என்று ஏத்தி வணங்கச் சடைகள் தாழப் பரமன் ஆடுகின்றார்.

பாட்டு 10 சமணர்களும், புத்தர்களும், கோடிக் கணக்கான குற்றஞ்செய்தவர்களும், அடைய முடியாத தில்லைச் சிற்றம்பலத்தில் நம்பி ஆரூரராம் சுந்தரர் பண்ணிசை பாடக் கோலக் குழகன் நடனம் ஆடுகின்றார்.

பாட்டு 11 நான்மறை ஓதும் அந்தணர் குலத்துத் திருவாலி சொன்ன பாடல்களைப் பாடப் பாவங்கள் அழியும் என்கின்றார் ஆசிரியர்.

[இதனால் திருவாலி அந்தணர் என்பது பெறப்படும்]

குறிப்பு:—இப்பதிகம் காரைக்கால் அம்மையார் பாடிய எட்டி இலவம் என்னும் பதிகத்தைப் பின்பற்றியதாம். ஆதலால் அப்பதிகம் போல இப்பதிகமும் பண் இந்தளம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

# 4. கோயில்

| | | | | |
|---|---|---|---|---|
| 25/10 | கோயில் (தில்லை) கோலமலர் | பஞ்சமம் (ஆகிரி) | இப்பாட்டு 'பொன்னார் மேனியனே' ...என வரும் சுந்தரர் தேவாரம் போன்ற இசைப் பாட்டு. | 1. இப்பதிகம் [illegible]. [illegible] தோழியிடம் [illegible] காதல் கொண்ட ஓர் இளம்பெண் [illegible]<br>பாட்டு 1 தில்லைச் சிற்றம்பலத்து எம்பெருமானை நான் என்று காண்பேன்!<br>பாட்டு 2 "ஆண் பெண் அருவுரு" என்று அறிதற் கரிய தில்லைச் சிற்றம்பலத்துப் பெருமானுடைய பாதங்களை நான் என்று காண்பது.<br>பாட்டு 3 சிற்றம்பலத்தில் ஆடுகின்ற ஒருவரை அறிதல் அரியவராகும்.<br>பாட்டு 4 திருச்சிற்றம்பலத்து இறைவர் தன்னை விரும்புகின்ற அடியார்க்கு அருள்புரிவார்.<br>பாட்டு 5, 6 திருச்சிற்றம்பலத்து இறைவனை நான் நினைத்தேன். இனி அவரைப் போக விட மாட்டேன்.<br>பாடு 7 தில்லை எம்பிரான் திருவடியை நான் எப்போது அடைவேனோ?<br>பாட்டு 8 தாய்மார்களே! பெருமானின் மலர்ப்பாதங்களை அன்புறத் தழுவி அவர் அணிந்துள்ள திருநீறு என் முலைகள்மீது படியும் பொருட்டு அவரை அடையும் படியான பேறு பெறுவேனோ?<br>பாட்டு 9 "தில்லை அந்தணர் தேசமிகு புகழோர்" என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளனர்; அத்தகையோர் வாழ்கின்ற தில்லை ஈசனை எவ்வுயிர்க்கும் இறைவன் என்று நான் துதிப்பேன்.<br>பாட்டு 10 சிற்றம்பலத்தைப் புகழ்ந்து மயிலை |

மறைவல ஆலி சொல்லை மகிழ்ந்தேத்துங்கள் ஏத்திலுல் சிவலோகம் எளிதிற் கிடைக்கும்.

## 8. ஆசிரியர் - புருடோத்தம நம்பி

பதிகம் - 26 - 27—கோயில்

| | | | | |
|---|---|---|---|---|
| புருடோத்தமநம்பி | 26/11 | கோயில் (தில்லை) வாரணி | பஞ்சமம் (ஆகிரி) | 8 சீர் விளம் விளம்-மா மா விளம்- விளம்- மா-மா |

(1) இப்பதிகம் அந்தாதித் தொடையது.
(2) தலைவி கூற்றாக அமைந்துள்ளது.

தலைவி கூற்று.

பாட்டு 1 செண்பக மாலையும், மாலைக் காலமும் என்னை மயக்குகின்றன, யார் எனக்கு அருள் புரிந்து அஞ்சாதே என்பவர்! என்னுயிர்க்கு ஆதரவு என் அன்பே!

பாட்டு 2 அம்பலத்தாடுபவரே! பாவியாகிய என் மனம் என்னை விட்டு விட்டுச் சிவன் பால் சென்றுள்ளது. என் வருத்தத்தை யார் அறிவார்?

பாட்டு 3 அம்பலத்தில் ஆடுவானே! பழிகாரர்களாம் தேவர்கள் உன்னை விடத்தை உண்ணச் செய்தார்கள். அதை நினைந்து என் மனம் அச்சமடைந்து நான் பிழைத்திரேன். ஆதலால் அத்தேவர் கூட்டங்களை அங்கேயே அழித்து விட்டு. என் பசலை நீங்க, எங்கள் வீதியூடே பூதகணங்கள் சூழ எழுந்தருளாய்.

பாட்டு 4 கங்கை சூடிய சடையினனே! குழையணி காதில் மாத்திரையும் கண்கள் மூன்றும் காதல் கனி வாயும் என் சிந்தையைக் கொள்ளை கொள்கின்றன. உயிர் அழுந்துகின்றது. நான் என்ன செய்வேன்?

பாட்டு 5 பெருமான் திருநடம் செய்த வார்த்தைகளைப் பற்றிப்பேசினும் என் பேதை நெஞ்சம் நையும். அவருடைய திருவடி மீதுள்ள ஆசையினால் பெண்களின் முன்பு என் பெண்மைக் குணங்களை நான் இழந்து விட்டேன்.

பாட்டு 6 தேவதேவே! சுடுகாட்டில் நீ ஆடிக்கொண்டிருந்தால், இவ்விடத்தில் உள்ள எங்களுடைய உயிரைக் காப்பது அரிதே ஆகும்.

பாட்டு 7 மார்க்கண்டேயர் உன்னைப் பூசித்து வணங்க இயமன் கீழே விழுமாறு உன் திருவடி உதைத்தது என்றால் உன்னைப்போல் உயிரைப் பாது காப்பவர் இனி வேறு யார் உளர்? உயிர்க்குயிரானவரே! மாதர்களுக்கு இனிக் காத்தால் அன்றி (க்காதலால் மாய்வதே அன்றி) உயிர் வாழ்தல் அரிதாகும்.

பாட்டு 8 சிற்றம்பலத்து இறைவனே! உன்னுடைய புலித்தோல் ஆடையையும், தூக்கிய திருவடியையும் கண்டு என் பெண்மையை இழந்தேன்; தாயினும் மிகநல்லவன் நீ என்று உன்னை அடைந்தேன். நீ என் தனிமையை நினைக்கின்றாய் இல்லை. இனி என்போன்ற மாதர்கள் வாழ்வது அரிது.

பாட்டு 9 திருச்சிற்றம் பலத்துள் புகுந்து உமது திருமுகத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து உமது சடையின் மேலுள்ள சந்திரனின் ஒளி என் மேல் பரவ, பிற பெண்களுக்கு முன்பாக நான் உனக்குரிய பல தொண்டுகளை நாடோறும் செய்து உன் திருவருளைப் பெற்றால் இந்த உலகில் இன்பத்தோடு வாழ்ந்திருக்கலாம்.

பாட்டு **10** இந்திரனும் அயனும், மாலும் அறிவு நிறைந்த பதஞ்சலி, வியாக்கிர பாதரும் கூத்தப் பிரானுகிய உன்னை இன்னும் துதிக்கின்ருர்கள். உமையாள் கணவனுகிய உன் அருளைப் பெறு வதற்கு நெஞ்சு வருந்துகின்றது. ஆசையை அளவறுத்தார் யார் உளர் ?

பாட்டு **11** திருச்சிற்றம்பலத்தில் நடம் புரியும் பெருமானைப் பெண்கள் நாள்தோறும் மாலைக் காலத்திற் கூடி எழுப்பும் பேரொலியைக் கண்டு கூறின வேதம் ஓதுகின்ற புருடோத்தமனது பாடல்களைக்கொண்டு இறைவனைத் துதிக்க வல்லவர் மலைமகள் கணவனும் சிவனை அடைந்து இன்புறுவார்கள்.

## (2) கோயில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,, | 27/11 | கோயில் (தில்லை) வானவர்கள் | பஞ்சமம் (ஆகிரி) | வெண்டளை பிறழாத கொச்சகக் கலிப்பா 4 சீர் | (1) இப்பதிகம் அகப்பொருள் பதிகம். தலைவி இரங்கலைக் கூறுவது.<br>(2 அந்தாதித் தொடையாய் அமைந்தது.<br>பாட்டு **1** தில்லைச் சிற்றம்பலவர் "நான் உறவுடையேன்' என்று கூருமல் நடம் புரிகின்ருர். ஒளி வளைகள் கொள்ளுகின்ருர். இச்செயல் வருத்தத்தைத் தருகின்றது<br>பாட்டு **2** பெருமானைக் கண்டதும் என் தோள் வளைகள் கழன்றன. அதை அறிந்தும் அவர் ஆடிவரும் போது என்னைத் தம்மருகே நிற்கவும் ஒட்டார்.<br>பாட்டு **3** தில்லைச் சிற்றம்பலவர் நடம்ஆட, அதைக் கண்ட என் வளையல்களைக் கழலச் செய்கின்ருரே.<br>பாட்டு **4** சிற்றம்பலவர் பிச்சை ஏற்க வந்து, "ஏடி போருக்கு வருவாய்;" என்று அழைப்பது போல் |

பருவத்தை நோக்கின்றார். அதனுல் எனக்குத் தீரா நோவைத் தருகின்றார். நீங்களே இதைப் பாருங்கள்.

பாட்டு 5 மன்மதன் [illegible] என்மேல் ஆணையைச் செலுத்துகின்றான். அதைக் கண்டும் பெருமான் எனக்கு அருள்புரியாது இருக்கின்றார். இதை நீங்களே பாருங்கள்.

பாட்டு 6 பெருமான் மகாதேவர் எல்லோர்க்கும் தாய் தந்தை ஆவார். அவர் வாய்மொழியாகிய வேதாகம சாத்திரங்களைக் கேட்டு அதன்படி ஒழுகுபவர் பெரியோர்.

பாட்டு 7 அந்தோ! எமது உதைத்து அழித்த சிற்றம்பலவர் என் கை வளையல்களைக் கவர்ந்து கொள்வாரோ? (கவர்ந்து கொண்டார் என்பது).

பாட்டு 8 சிற்றம்பலவர் என்னைக் கண்டறியாதவர் போன்று இப்போது நடிக்கின்றார்.

பாட்டு 9 தில்லைச் சிற்றம்பலவர் நடுப்பகலிலே வந்து வீட்டிற்குள் புகுந்து "பக்தர்களே! பலியிடுக," என்று கூறி எங்கும் பார்க்கின்றார், ஆனால் தம் கைகளை வீசி ஆடும்போது என்னைப் பார்க்கின்றார் இல்லை.

பாட்டு 10 பெருமான் நம்மைப் பார்க்காத காரணத்தினாலே நாமும் அவரைப் பார்க்கவில்லை என்று எண்ணி நம் ஊருக்கே வந்து, என் வளையல்களைக் கழலச்செய்துகொண்டு போவாரோ? தோழியரே கூறுங்கள்

பாட்டு 11 தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறியதாகச் சிவனைப் புருடோத்தம நம்பி பாடிய பாடல்

களைக் கற்று ஆடிப்பாடியவர்கள் சிவலோகத்தில் இன்பத்துடன் வாழ்வார்கள்.

## 9. ஆசிரியர் - சேதிராயர்

பதிகம் 28—கோயில்

| | | | | |
|---|---|---|---|---|
| சேதி ராயர் | 28/10 | கோயில் (தில்லை) பஞ்சமம் (ஆகிரி) சேலுலாம் | 4 சீர் முதல் மூன்றடி மா-விளம்-விளம்-விளம் 4வது அடி மாவிளம் கூவிளங் காய் (3 சீர்) | (1) இஃது அகப்பொருட் பதிகம்; நற்ருய் கூற்ருக அமைந்துள்ளது.<br>(2) அந்தாதித்தொடையாக அமைந்தது.<br>பாட்டு 1 சிவனிடத்தில் நெடுநாள் அருகில் இருந்தால் என்மகளுக்கு அவரிடத்தில் காதல் மயக்கம் ஏற்பட்டது.<br>பாட்டு 2 தில்லைப்பெருமானே! உம்மைக் கண்டால் என் மகளுடைய மயக்கம் தீரும்.<br>பாட்டு 3 "தில்லைப் பெருமானே! சிவனே"! என்று என் பெண் விம்மி அழுகின்ருள் அவளுக்கு அருள் செய்வீராக.<br>பாட்டு 4 "தில்லைப் பெருமானே! என்னை ஆட்கொள்வாய்" என்று உம்மையே நினைத்து அழுது உம்மைத் துதிக்கின்ருள். சோர்வுறுகின்ருள்.<br>பாட்டு 5 'தில்லைப் பெருமானே! நான் உய்யும்படி உன் கொன்றை மாலையைத் தந்தருள்வாய்" என்று என்மகள் கூறுகின்ருள்.<br>பாட்டு 6 என் பெண் தான் வளர்த்த கிளியைப் பார்த்துக் கிளியே "மாதோர் கூறன், கொன்றை மார்பன்" என்று நீ கூறினல், நான் உய்வேன் என்கின்ருள். தில்லைப்பெருமானே! நீர் அவளை வருத்துகின்றீர். |

பாட்டு 7 இளம் பெண் பிடிபோன்ற என் மகளைப் பெருமானே! என்ன செய்து விட்டீர். அவளுக்கு எப்போது தூக்கம் வரும்! படுக்கும் இரும்

பாட்டு 8 தில்லைப் பெருமானே! நீர் அறவழிச் நிற்பவராயிற்றே! அருச்சுனனைக் காக்கப் பன்றியைக் கொன்றவரே. என்னைத் துன்புறுத்தாதீர் என்று அரற்றுகிறாள். (என் மகள்)

பாட்டு 9 ''அன்று சூரியனுடைய பற்களை உடைத்தீர்: ஓர் யானையைக் கொன்றீர்; எமனை உதைத்து, அவன் உயிரைக் கொள்ளுதலைச் செய்தீர் என்கின்றாள் இப்பெண். உம்மிடங் கொண்ட காதல் காரணமாக இவள் ஒன்றுக்கும் உதவாமல் இருக்கின்றாள்.

பாட்டு 10 சேதியர் கோன் தில்லைப்பெருமானை விரும்பிப் புகழ்ந்த இப்பாடல்களைத் தூய நெறியில் நின்று உரைப்பவர் சிவலோகத்தில் இன்பம் எய்தி இருப்பார்கள்.

---

ஆக பதிகங்கள்—28
பாடல்கள்—288

---

## ஆசிரியர்—சேந்தனார்

### பதிகம் - 29—கோயில் (பதிகம் 7-ன் தொடர்ச்சி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேந்தனார். | 29/13 | கோயில் (தில்லை) மன்னுக. | பஞ்சமம் (ஆகிரி) | 6 சீர் அனேகமாய் வெண்டளை. | 1. இப்பதிகம் மெய்யடியார்களைச் சிவனுக்குப் பல்லாண்டு கூற அழைப்பது.<br>2. ஓடாது தடைப்பட்டு இருந்த தேரைத் தானே ஓடும்படி செய்த அற்புதப் பதிகம் இப்பல்லாண்டு. |

3. திருக்கோயில்களில் "பஞ்சபுராணம் பாடுக" என ஓதுவார் (1) தேவாரம்; (2) திருவாசகம் (3) திருவிசைப்பா; (4) திருப்பல்லாண்டு; (5) பெரியபுராணம் என்னும் ஐந்தில் 4 ஆவதாகப் பாடப்படுவது திருப்பல்லாண்டு.

பாட்டு 1 சேந்தனார் தில்லையை வாழ்த்தி மெய்யடியார்களை விரைந்து பித்தனும் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 2 மெய்யடியார்களை அழைத்துக் கொள்வது கொடுப்பது எல்லாம் சிவ சம்பந்தமாய்ச் செய்யுங்கள் எனக் கூறி அந்த ஆனந்தப் பொருளாம் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 3 தன்னைத் தம்பாற்படுத்திய பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 4 அற்ப ஆயுளையுடைய சிறுதேவர்களை வழிபடாமல் பல்லாண்டு என்னும் பதத்தைக் கடந்தவரான சிவனுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 5 இந்திரன், திருமால், பிரமன் ஆகிய தேவர்கள் ஓலமிட்டும் இன்னும் தரிசனம் கிடைக்கப் பெறாது இருந்து நிற்க என்னை யாண்ட பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 6 பிரமன், இந்திரன், திருமால் இவர்கள் கூட்டமாய்த் தரிசனம் வேண்டி நெருங்கி நிற்க என்னுயிர்க்கு அமிர்தம் போன்றவரும்; தேவர்களின்

என்னைத்திருத் தப்பாதுகாட்டிய பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 7 சிவனுடைய திரு அருளாகிய மேன்மையும், திருவருட்செல்வமும் விளங்க நான் யாரும் பெறாத அறிவைப் பெற்றேன். இவ்வுலகில் நான் பெற்ற பேற்றை வேறு யார் பெறவல்லார்? உலகிலுள்ளோர் இங்ஙனம் புகழும்படி செய்த பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 8 மாதர்களின் இளங்கொங்கையில் குங்குமம் விளங்குவது போலப் பெருமானுடைய திருமார்பில் திருநீறு விளங்கும் என்று சிவநேயப் புண்ணியர் போற்றி செய்வர். திருமால் ஆதியர் அறிதற் கரிதான கழலை எனக்குக் காட்டி என் மனத்தில் அமுதம்போல் ஊறும் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 9 பால் வேண்டி அழுத பாலகனுக்குப் பாற் கடலைய வரவழைத்துத் தந்த பிரான், மாலுக்குச் சக்கரம் அளித்த பிரான் தில்லைவாழ் அந்தணர்கள் வாழ்கின்ற சிற்றம்பலத்தை இடமாகக் கொண்டு நடனம் புரிகின்ற பிரானை பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 10 தந்தையின் தாளை வெட்டிய சண்டேசுரருக்கு விண்ணும் மண்ணும் வணங்கும் வண்ணம் அழகிய கோயிலும், (நிர்மாலியமான) அமுதும், இண்டை மாலையும், சண்டேசுரர் என்னும் பெயரும், தொண்டர்க்குத் தலைமையான பதவியையும், அவர் செய்த பாவச் செயலுக்கு பரிசாகத்

**3. திருக்கோயில்களில் "பஞ்சபுராணம் பாடுக"** என ஓதுவார் (1) தேவாரம்; (2) திருவாசகம் (3) திருவிசைப்பா; (4) திருப்பல்லாண்டு; (5) பெரியபுராணம் என்னும் ஐந்தில் 4 ஆவதாகப் பாடப் படுவது திருப்பல்லாண்டு.

பாட்டு 1 சேந்தனுர் தில்லையை வாழ்த்தி மெய்யடியார்களை விரைந்து பித்தனும் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 2 மெய்யடியார்களை அழைத்துக் கொள்வது கொடுப்பது எல்லாம் சிவ சம்பந்தமாய்ச் செய்யுங்கள் எனக் கூறி அந்த ஆனந்தப் பொருளாம் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 3 தன்னைத் தம்பாற்படுத்திய பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 4 அற்ப ஆயுளையுடைய சிறுதேவர்களை வழிபடாமல் பல்லாண்டு என்னும் பதத்தைக் கடந்தவராகிய சிவனுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 5 இந்திரன், திருமால், பிரமன் ஆகிய தேவர்கள் ஓலமிட்டு இன்னும் தரிசனம் கிடைக்கப் பெறாது இரந்து நிற்க என்னை யாண்ட பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 6 பிரமன், இந்திரன், திருமால் இவர்கள் கூட்டமாய்த் தரிசனம் வேண்டி நெருங்கி நிற்க என்னுயிர்க்கு அமிர்தம் போன்றவரும்; தேவர்களின்

[illegible] பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 7 சிவனுடைய திரு அருளால் மேன்மையும் திருவருட்செல்வமும் விளங்க நான் யாரும் பெறாத அறிவைப் பெற்றேன். இவ்வுலகில் நான் பெற்ற பேற்றை வேறு யார் பெறவல்லார்? உலகிலுள்ளோர் இங்ஙனம் புகழும்படி செய்த பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 8 மாதர்களின் இளங்கொங்கையில் குங்குமம் விளங்குவது போலப் பெருமானுடைய திருமார்பில் திருநீறு விளங்கும் என்று சிவநேயப் புண்ணியர் போற்றி செய்வர். திருமால் ஆதியர் அறிதற் கரிதான வழியை எனக்குக் காட்டி என் மனத்தில் அமுதம்போல ஊறும் பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 9 பால் வேண்டி அழுத பாலகனுக்குப் பாற் கடலையே வரவழைத்துத் தந்த பிரான், மாலுக்குச் சக்கரம் அளித்த பிரான் தில்லைவாழ் அந்தணர்கள் வாழ்கின்ற சிற்றம்பலத்தை இடமாகக் கொண்டு நடனம் புரிகின்ற பிரானை பெருமானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 10 தந்தையின் தாளை வெட்டிய சண்டேசுர ருக்கு விண்ணும் மண்ணும் வணங்கும் வண்ணம் அழகிய கோயிலும், (நிர்மாலியமான) அமுதும், இண்டை மாலையும், சண்டேசுரர் என்னும் பெயரும், தொண்டர்க்குத் தலைமையான பதவியை யும், அவர் செய்த பாவச் செயலுக்கு பரிசாகத்

தந்தருளிய சிவனுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 11 குழல், யாழ், கூத்து இவற்றின் ஒலியுடன் அடியார் ஏத்தும் ஒலி, திருவிழாவின் ஒலி இவை எலாம் விண்ணளவும் செல்லும்படியான திருவாரூரில் வீற்றிருக்கும் பெருமானுக்கு வழிவழி ஆளாய் ஆண்களும், பெண்களும் திருமணஞ் செய்து கொண்ட குடியிற் பிறந்த பழ அடியாருடன் கூடிப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்

பாட்டு 12 திரு ஆதிரை நாளில் நாராயணன் பிரமன் ஆகிய தேவர்கள் தேரோடும் வீதியில் கூட்டமாய்க் கூடி நின்ற நிலையிலிருக்கப் பெருமானுடைய புகழைப் பாடியும், ஆடியும் நாம் அவருக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

பாட்டு 13 தந்தை, தாய், சுற்றம், மற்றும் எல்லாம் எம்பிரான் என்று அடிநாய் போன்ற செப்புறை என்னும் ஊரினன் ஆன ஆனந்தச் சேந்தன் ஆகிய என் உள்ளத்தில் புகுந்து என் உயிர் போல் அருள் புரிந்த எம்பிரானுக்குப் பல்லாண்டு கூறுவோம் வாருங்கள் என அழைக்கும்.

---

திருவிசைப்பா பதிகம் = 28; செய்யுள் = 288
திருப்பல்லாண்டு பதிகம் = 1; செய்யுள் = 13

ஆக = 29 ஆக = 301

திருச்சிற்றம்பலம்.

# முற்சேர்க்கை 4

## திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மரும் அவரவர் எவ்வெத் தலத்திற்குப் பாடி உள்ளார் என்பதும்; பிற குறிப்புக்களும்.

| வரிசை எண் | ஆசிரியர் | பாடிய தலம் | பதிகங்களின் எண் |
|---|---|---|---|
| 1. | திருமாளிகைத் தேவர். | 1. கோயில்<br>2. கோயில்<br>3. கோயில்<br>4. கோயில் | 4<br>(1, 2, 3, 4) |
| 2. | சேந்தனார். | 1. திருவீழிமிழலை<br>2. திருவாவடுதுறை<br>3. திருவிடைக்கழி | 3<br>(5, 6, 7) |
| 3. | கருவூர்த் தேவர். | 1. கோயில்<br>2. திருக்களந்தை ஆதித்தேச்சரம்<br>3. திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்<br>4. திருமுகத்தலை<br>5. திரைலோக்கிய சுந்தரம்<br>6. கங்கைகொண்ட சோளேச்சரம்<br>7. திருப்பூவணம்<br>8. திருச்சாட்டியக்குடி<br>9. தஞ்சை இராச ராசேச்சரம்<br>10. திருவிடை மருதூர் | 10<br>(8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17) |
| 4. | பூந்துருத்தி நம்பி காடநம்பி. | 1. திருவாரூர்<br>2. கோயில் | 2<br>(18, 19,) |
| 5. | கண்டராதித்தர். | 1. கோயில் | 1<br>(20) |
| 6. | வேணாட்டடிகள் | 1. கோயில் | 1<br>21 |

| வரிசை எண் | ஆசிரியர் | பாடிய தலம் | பதிகங்களின் எண் |
|---|---|---|---|
| 7. | திருவாலி அமுதனார். | 1. கோயில் 2. கோயில் 3. கோயில் 4. கோயில் | 4 (22, 23, 24, 25) |
| 8. | புருடோத்தம நம்பி. | 1. கோயில் 2. கோயில் | 2 (26, 27) |
| 9: | சேதிராயர். | 1. கோயில் | 1 (28) |
| 2A. | [சேந்தனார்.] | 1. கோயில் [திருப்பல்லாண்டு] | 1 (29) |

ஆக ஒன்பதின்மர் பாடியவற்றுள் கோயிலுக்குப் 16 பதிகமும், திருவீழிமிழலை; திருவாவடுதுறை திருவிடைக்கழி திருக்களந்தை, திருக்கீழ்க் கோட்டூர் திருமுகத்தலை; திரைலோக்கியம்; கங்கைகொண்டசோழபுரம் திருப்பூவணம்; திருச்சாட்டியக்குடி; தஞ்சை; திருவிடைமருதூர் திருவாரூர் ஆகிய 13 தலங்களுக்கு ஒவ்வொரு தலத்திற்கு ஒவ்வொரு பதிகமாக 13 பதிகங்களும் ஆக 29 பதிகங்கள்.

# முற்சேர்க்கை 5

## திருவிசைப்பாக்களின் பண்களும், அப்பண்கள் எந்தத் தலத்துக்கு உரியன என்பதும், பிறவும்

| பண் வகை. | எந்தத் தலத்திற்கு உரியது. | பதிக எண் |
|---|---|---|
| 1. பஞ்சமம். | 1. கோயில் | 1. |
| | 2 கோயில் | 2. |
| | 3. கோயில் | 3. |
| | 4. கோயில் | 5. |
| | 5. கோயில் | 6. |
| | 6. திருவிடைக்கழி | 7. |
| | 7. கீழ்க்கோட்டூர் | 10. |
| | 8. திருமுகத்தலை | 11. |
| | 9. கங்கை கொண்ட சோளேச்சரம் | 13. |
| | 10. திருப்பூவணம் | 14. |
| | 11. திருச்சாட்டியக்குடி | 15. |
| | 12. தஞ்சை இராச ராசேச்சரம் | 16. |
| | 13. திருவிடை மருதூர் | 17. |
| | 14. திருவாரூர் | 18. |
| | 15. கோயில் | 20. |
| | 16. கோயில் | 22. |
| | 17. கோயில் | 25. |
| | 18. கோயில் | 26. |
| | 19. கோயில் | 27. |
| | 20. கோயில் | 28. |
| | 21. கோயில் | 29. |

| | | |
|---|---|---|
| 2. காந்தாரம் | 1. கோயில் | 4. |
| | 2. திரை லோக்கியம் | 12, |
| 3. புறநீர்மை | 1. கோயில் | 8. |
| | 2. திருக்களந்தை | 9. |
| | 3. கோயில் | 21 |
| 4. சாளரபாணி | 1. கோயில் | 19. |
| 5. நட்ட ராகம் | 1. கோயில் | 23. |
| 6. இந்தளம் | 1. கோயில் | 24. |

ஆக ஒன்பதின்மர் பாடியவற்றுள் பண் பஞ்சமத்தில் 21 பதிகங்களும் பண் காந்தாரத்தில் 2 பதிகங்களும்; பண் புறநீர்மையில் 3 பதிகங்களும்; பண் சாளரபாணியில் 1 பதிகமும்; பண் நட்டராகத்தில் ஒரு பதிகமும்; பண் இந்தளத்தில் 1 பதிகமும் ஆக 29 பதிகங்கள் கோயிலுக்கு (தில்லைக்கு) 18-பதிகம் பண் பஞ்சமத்திலும்; 11 தலங்களுக்கு பஞ்சமம் அல்லாத பிற பண்கள்.

உ

திருச்சிற்றம்பலம்

# திருஇசைப்பா ஒளிநெறி

—:0:—

# க. சிவபிராற் பகுதி

### கணபதி

**கணபதி** **7-5**
**படுமதமும் மிடவயிறும் உடைய களிறு** **21-6**

### கணபதி தம்பி முருகர்

**கணபதி பின்னிளங் கிளையே** **7-5**

### கணபதிக்குத் தந்தை சிவபிரான்

1. குமர விநாயக சனக 1-7
2. படுமதமும் மிடவயிறும் உடைய - களிறுடைய பிரான் 21-6

## 1. சிவபிரான் அட்டமூர்த்தி

**எட்டுரு விரவி** **4-2**
[நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா.]

## 2. சிவபிரான் அட்டவீரச் செயல்

(பிறபொருட் பகுதி "காமன்" தலைப்பு 61 பார்க்க)

### (1) காமனை எரித்தது

**காமநாசா** **1-5**
**காம புராந்தகன்** **6-11**

காமனை..... படக்கடைக் கணித்தவன் 2-11
மறலி, வேள், இவர் மிகை - செகுத்தோன் 5-10

## (2) காலனை அட்டது

(பிறபொருட் பகுதியில் தலைப்பு 63 பார்க்க)

ஆருயிர் காவலிங்(கு) - அருமையாலே, அந்தணர் மதலைநின்
அடிபணியக் கூர்நுனை வேற்படைக் கூற்றஞ் சாயக் குரை
கழல் பணிகொள மலைந்த தென்றல் 26-7
உலந்த மார்க்கண்டிக்காகி அக்காலனை உயிர் செக வுதை
கொண்ட மலர்ந்த பாதங்கள் 23-3
கால காலா! 1-5
காலன்......படக்கடைக் கணித்தவன் 2-11
காலனைக் கோளிழைத்திர் 28-9
திருவடி கொண்(டு) அந்தகன்றன் மூவா உடலவியக்
கொன்றுகந்த முக்கண்ணர் 27-7
புரகால .....அந்தகன் 6-11
மறலி......மிகைசெகுத்தோன் 5-10

## (3) சலந்தரனைத் தடிந்தது

சலந்தரன்.........மிகை செகுத்தோன் 5-10

## (4) தக்கன் வேள்வியை அழித்தது

1. எச்சன்—(யாகத்தலைவர்) 1-9, 2-11, 3-6
எச்சன் தலைகொண்டாய் என்னும் 3-6
எச்சனைத் தலையைக் கொண்டு செண்டடித்து 4-9
எச்சன் படக்கடைக் கணித்தவன் 2-11
எச்சன்......மிகை செகுத்தோன் 5-10
எச்சன் வன்தலையும்.........ஒக்க விண்டுருள ஒண் திருப்புருவம்
நெறித்தருளிய உருத்திரனே! 1-9

2. தக்கன்
தக்கன் 1-9, 2-11, 3-6, 5-10, 6-7
இற்போம் எனத் தக்கன் வேள்வி புக்(கு) எழுந்தோடிக்
கெட்ட அத்தேவர்கள் 6-7
தக்கன் நற்றலையும் ........ஒக்க விண்டுருள ஒண் திருப்புருவம்
நெறித்தருளிய வுருத்திரனே! 1-9
தக்கன்.....மிகை செகுத்தோன் 5-10

## தக்கன் வேள்வியில் தண்டனை அடைந்தோர்

1. தக்கன், வெங்கதிரோன், பிரமன், சந்திரன், இந்திரன், எச்சன், இவர் மிகை செகுத்தோன் 5-10

2 பண்டாய மலரயன் தக்கன் எச்சன் பகலோன் தலைபல் பசுங்கண் கொண்டாய்! என்னும் 3-6

[அயன் (பிரமன்), தக்கன், எச்சன் இவர்களுடைய தலையும் ஒரு சூரியனுடைய (பூடா என்பவனுடைய) பல்லும், பகன் என்னும் சூரியனுடைய கண்ணும் பறிக்கப்பட்டன. சந்திரன் காலால் தேய்க்கப்பட்டான் (குயிலாய) இந்திரன் சிறகு அரியப்பட்டவன்.]

3 நிற்போம் எனத் தக்கன் வேள்விபுக்(கு) எழுந்தோடிக் கெட்ட அத்தேவர்கள் 6-7

[யாகத்திற்கு வந்த தேவர்கள் ஓட்டம் பிடித்தனர்]

## (5) திரிபுரத்தை எரித்தது

1. புரம் எரித்தது

அமரர்கள் அடிபணிந்(து) அரற்ற அந்நாள் பெரும்புரம் எரி செய்த சிலையின் வார்த்தை பேசவும் நையும் என் பேதை நெஞ்சம் 26 5
எயில்கள் மூன்(று) எரித்த ஏறு சேவகன் 13-5
ஒட்டாவகை அவுணர் முப்புரங்கள் ஓரம்பால் பட்டாங்(கு) அழல் விழுங்க எய்துகந்த பண்பினர் 27-3
குறுகலர் புரங்கள் மூன்(று) எரித்த கண்டனே! 13-6
சிலையால் புரமூன்(று) எய்த வில்லி 20-7
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவன் 5-2
செற்று வன்புரந் தீயெழச்சிலை கோலி ஆரழல் ஊட்டினனவன் 22-9
பகைத்தார் புரம் இடியச் செஞ்சிலை கால்வளைத்தீர் 28-7
புகைமிகும் அனலிற்புரம் பொடிபடுத்த பொன்மலை வில்லி 7-8
புரம்......மிகை செகுத்தோன் 5-10
புராந்தகன் 6-11
போந்த மதிலணி முப்புரம் பொடியாட 6-6
மருளார் இடங்கொள் முப்புரம் வெந்தவிய வைதிகத் தேரேறிய ஏறு சேவகனே! 1-10
முனைபடு மதில் மூன்று எரித்த நாயகனே! 11-6
வேந்தன் வளைத்தது மேருவில்.........முப்புரம் பொடியாட 6-6

## 2. புரம்

| | |
|---|---|
| செற்று வன்புரம் | 22-9 |
| புரங்கள் | 5-2 |
| புரங்கள் மூன்று | 13-6 |
| புரம் | 3-1, 7-8, 28-7 |
| புரம் மூன்று | 20 7 |
| பெரும்புரம் | 26-5 |
| மதிலணி முப்புரம் | 6-6 |
| முப்புரங்கள் | 27-3 |
| முப்புரம் | 1-10, 6-6 |
| வன்புரம் | 22-9 |

## 3. மதில்

| | |
|---|---|
| எயில்கள் மூன்று | 13-5 |
| போந்த மதில் | 6-6 |
| மதில் மூன்று | 11-6 |
| மதிலணி முப்புரம் | 6-6 |
| மூனைபடு மதில் மூன்று | 11 6 |

## 4. தேர்

| | |
|---|---|
| வேதப்புரவித்தேர் | 6-6 |
| வைதிகத்தேர் | 1-10 |

## 5. புரவி

| | |
|---|---|
| வேதப்புரவி | 6 6 |

## 6. சாரதி

| | |
|---|---|
| அயன்சாரதி | 6-6 |

## 7. வில்

| | |
|---|---|
| சிலை கோலி ஆரழல் ஊட்டினான் | 22-9 |
| சிறவாதவர் புரஞ்செற்ற கொற்றச்சிலை | 3-1 |
| செருநெடு மேரு வில்லின் முப்புரம் தீ விரித்த சிற்றம்பலக் கூத்த! | 2-9 |
| பெரும்புரம் எரிசெய்த சிலை | 26-5 |
| பெரு வரை [மேரு] வில் | 13-6 |
| பொன் - மலை வில்லி | 7-8 |
| வில்லாண்ட கனகத்திரள் மேரு | 29-4 |
| வேந்தன் வளைத்தது மேரு வில் | 6 6 |

## 8. அம்பு [கணை]

| | |
|---|---|
| முப்புரங்கள் ஓரம்பால் பட்டாங்கு) அழல் விழுங்க எய்துகந்த பண்பினர் | 27 3 |
| வெங்கணை செங்கண்மால் | 6 6 |

## 9. நாண்

| | |
|---|---|
| அரவு நாண் | 6 6 |
| கொண்ட நாண் பாம்பாம் | 13-6 |

## 10. திரிபுராதிகள்

| | |
|---|---|
| அவுணர் முப்புரங்கள் அழல் விழுங்க எய்துகந்த பண்பினர் | 27-3 |
| ஒட்டாவகை அவுணர் | 27-3 |
| குறுகலர் | 13-6 |
| சிறவாதவர் | 3-1 |
| செற்றவர் | 5-2 |
| நிசிசரர் | 13-7 |
| பகைத்தார் | 28-7 |
| மருளார் | 1-10 |

## 11. திரிபுராதிகள் மூவரும் சிவனும் [மூவர்க்கு அருளியது]

நிசிசரர் இருவரோ(டு) ஒருவர் காதலிற்பட்ட கருணையாய் 13-7

[சிவபூசை விடாது செய்துவந்த தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன் மாலி என்னும் மூன்று அசுரர்கள் முப்புரம் எரிபட்டபோது இறைவன் அருளால் எரிபடாது உய்ந்தனர். அம்மூவரில் இருவர் திருக்கோயிலின் வாயில்

காப்பாளராகவும், ஒருவர் கோயிலின் மணி அடிப்பவராகவும் ஆளப்பட்டனர்.]

''மூவாயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்றிருக் கோயில் வாய்தல், காவலாளரென் றேவிய பின்னை யொருவ நீ கரிகாடரங்காக, மானை நோக்கியோர் மாநடம்மிழ மணி முழாமுழக்க அருள் செய்த, தேவதேவ''
சுந்தரர் 55-8

## (6) பிரமன் சிரத்தைக் கொய்தது

பிரமன்......மிகை செகுத்தோன் 5-10

## (7) யானையை அட்டது

ஆனையைக் கொன்று 28-9
எழில்*மால் கரியின் உரிவை நல் உத்தரியம் உகந்தான் உம்பரார் தம்பிரான் 25-4
கரி சுருரித்தெழு போர்வையினீர் 28 3
கரி.. ...மிகை செகுத்தோன் 5-10
கரு*மால் கரி சுருரித்தெழு போர்வையினீர் 28-3
போழ்ந்தியானை தன்னைப் பொருப்பன் மகளுமை அச்சங் கண்டவன் 22-4

## (8) அந்தகாசுரனை அட்டது

(இதுபற்றி ஒன்றும் திருவிசைப்பாவிற் கூறப்படவில்லை)

## 3. சிவபிரானைக் குறிக்கும் அடையாளங்கள்

கரியரே இடந்தான், செய்யரே ஒருபால், கழுத்திலோர் தனி வடஞ்சேர்த்தி முரிவரே முனிவர் தம்மொ(டு) ஆல்நிழற் கீழ் முறைதெரிந்(து) ஒருடம்பினராம், இருவரே முக்கண் நாற்பெருந் தடந்தோள் இறைவரே மறைகளும், தேட அரியரேயாகில் அவரிடங் களந்தை அணிதிகழ் ஆதித் தேச்சரமே 9-3

---

[மால் கரி, மால்-பெரிய, கரி-யானை]

*எழில் மால், கருமால் என்பது திருமாலைக் குறிப்பதாகவும், பொருள் காணலாம். ''வாமன'' அவதாரத்தில் அவருடைய தோலை உரித்துச் சட்டையாகத் தரித்தார் வைரவர். [சீகாழியில்] சட்டைநாதர் எனப் பேர் பெற்ற சந்நிதி உளது.

[சிவபராக்கிரமம் வாமன சர்மபங்கப் பராக்கிரமம் பார்க்க]

குமுதமே திருவாய், குவளையே களமும், குழையதே இருசெவி,
ஒருபால், விமலமே கலையும் உடையரே சடைமேல்
மிளிருமே பொறிவரி நாகம், கமலமே வதனம், கமலமே
நயனம், கனகமே திருவடி நிலைநீர், அமலமே ஆகில் அவர் 9-9

சந்தன களபம் துதைந்தநன் மேனித் தவளவெண் பொடிமுழு
தாடுஞ், செந்தழல் உருவிற் பொலிந்து நோக்குடைய திரு
நுதல் அவர் 9-2

திக்கடா நினைந்து நெஞ்சிடிந்(து) உருகும் திறத்தவர் புறத்
திருந்(து) அலச, மைக்கடா அனைய என்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து, பொய்க்கடா வண்ணங்
காத்தெனக்(கு) அருளே புரியவும் வல்லரே எல்லே,
அக்கடா ஆகில் அவர் 9-7

திருமகன் முருகன் தேவியேல் உமையாள் திருமகள் மருமகன்
தாயாம், மருமகன் மதனன் மாமனேல் இமவான் மலை
யுடை அரையர்தம் பாவை, தருமலி வளனுஞ் சிவபுரன்
தோழன் தனபதி சாட்டியக் குடியார், இருமுகங் கழல்
மூன்(று) ஏழுகைத் தலம் ஏழ் இருக்கையில் இருந்த
ஈசனுக்கே 15-5

தொழுது பின்செல்வ(து) அயன் முதற்கூட்டம் தொடர்வன
மறைகள் நான்கெனினும், கழுதுஞ கரிகா(டு) உறைவிடம்
போர்வை கவந்திகை கரி யுரி திரிந்தூண். தழலுமிழ்
அரவங் கோவணம் பளிங்கு செபவடம் சாட்டியக்
குடியார் இழுது நெய் சொரிந்தோம்(பு) அழலொளி
விளக்(கு) ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே 15-3

நீலமே கண்டம், பவளமே திருவாய் நித்திலம் நிரைத்(து)
இலங்கினவே போலுமே முறுவல், நிறைய ஆனந்தப்
பொழியுமே திருமுகம், ஒருவர் கோலமே அச்சோ
அழகிதே என்று குழைவரே கண்டவர், உண்ட(து)
ஆலமே, ஆகில் அவர் 4-6

பதிக நான்மறை தும்புருவும் நாரதரும், பரிவொடுபாடு
காந்தர்ப்பர், கதியெலாம் அரங்கம் பிணையல் மூவுலகில்
கடியிருள் திருநடம் புரியும், சதியிலார் கதியில் ஒலிசெயும்
கையில் தமருகம் சாட்டியக் குடியார், இதயமாங் கமலம்
கமல வர்த்தனை ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே 15-4

பவளமே மகுடம், பவளமே திருவாய், பவளமே திருவுடம்(பு)
அதனில் தவளமே களபம். தவளமே புரிநூல், தவளமே
முறுவல் ஆடரவம் துவளுமே கலையும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங்(கு) ஒருத்தி அவளுமே ஆகில் அவர் 9-5

பழையராந் தொண்டர்க்(கு) எளியரே, மிண்டர்க்(கு) அரியரே
பாவியேன் செய்யும் பிழையெலாம் பொறுத்(து) என்
பிணி பொறுத்தருளாப் பிச்சரே நச்சரா மிளிரும் குழைய
ராய் வந்(து) என்குடி முழுதாளுங் குழகரே ஒழுகுநீர்க்
கங்கை அழகரே யாகில் அவர் 9-4

பாந்தள் பூணாரம், பரிகலம் கபாலம்,
பட்டவர்த் தனம் எரு(து), அன்பர்,
வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை,
மலைமகள் மகிழ்பெருந் தேவி,
சாந்தமும் திருநீ(று), அருமறை கீதம்,
சடைமுடி, சாட்டியக் குடியார்,
ஏந்தெழில் இதயம் கோயில் மாளிகை ஏழ்,
இருக்கையுள் இருந்த ஈசனுக்கே. 15-2

மெய்யரே மெய்யர்க்(கு) இடுதிருவான,
விளக்கரே, எழுதுகோல் வளையாள்
மையரே, வையம் பலிதிரிந்(து) உறையும்:
மயானரே உளங்கலந் திருந்தும்,
பொய்யரே பொய்யர்க்(கு) அடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி இருள்கிழித் தெழுந்த,
ஐயரே யாகில் அவர் 9-8

விரியுநீர் ஆலக் கருமையும் சாந்தின்
வெண்மையும் செந்நிறத் தொளியும்,
கரியும் நீராடுங் கனலுமொத் தொளிரும்,
கழுத்திலோர் தனிவடங் கட்டி,
முரியுமா றெல்லாம் முரிந்(து) அழகியை 11-7

பெரியவா கருணை இளநிலா எறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப்(பு) அவிழ்ந்து,
சரியுமா சுழியங் குழைமிளிர்ந்(து) இருபால்
தாழ்ந்தவா காதுகள், கண்டம்,
கரியவா தாமுஞ் செய்யவாய் முறுவல்,
காட்டுமா சாட்டியக் குடியார்,
இருகைகூம் பினகண்(டு) அலர்ந்தவா முகம்ஏழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே. 15-1

## 4. சிவபிரான் அணிகலங்கள்

**அக்கு**

அக்கணி (எலும்பு அணி)...சொக்கன் அக்கு - (உருத்திராட்சம்) 1-9

**தோடு**

செம்பொற்றோடு 17-1

**பாம்பு**

1. கணம் விரிகுடுமிச் செம்மணிக் கவைநாக் கறையணற் கட்செவிப் பகுவாய், பணம்விரி துத்திப் பொறிகொள் வெள்ளெயிற்றுப் பாம்பணி பரமர் 8-1
2. திரு உடம்(பு) அதனில்......ஆடரவம் துவளுமே 9-5
3. நல் அரவம் 23-7
4. பன்னகா பரணா ! 11-1

**வடம்-தனிவடம்**

உருமரு(வு) உதரத்தனிவடம் 2-7
ஒற்றை வடமுமாம் இதனை ''ஏகாவலி'' என்பர் 2-7
கழுத்திலோர் தனிவடங்கட்டி 18-1

**வளை**

வான் முத்தின் சரிவளை 18-1

## 5 சிவபிரான் அணிவன

### (1) சிவபிரான் அரையில், வயிற்றில் அணிவன

உடுப்பாய் தோல்......சுரிகை 3-7
உருமரு(வு) உதரத் தனிவடம் தொடர்ந்து கிடந்த(து) என் உணர்வுணர்ந்(து) உணர்ந்தே 2-7
ஐந்தலை நாகம் மேகலை அரையா அகந்தொறும் பலிதிரி அடிகள் 17-2
கூத்தன்மேல் திகழ் உதரபந்தனம் என்னுள்ளத்(து) உள்ளிடங் கொண்டனவே 22-6
சுரிகை 3-7
சூழ்ந்தபாய் புலித்தோல் 22-4
தாழ்ந்த கச்சதன்றே தமியேனைத் தளர்வித்ததே 22-4

திருமருவு உதரத்தார் 2-7
துணியுமிழ் ஆடை அரையி லோராடை சுடர் உமிழ்தர அதன் அருகே மணியுமிழ் நாகம் மணியுமிழ்ந்(து) இமைப்ப 17-4
பொறையணி நிதம்பப் புலியதள் ஆடைக்கச்சு நூல் புகுந்த தென்புகலே 2-5

## (2) கரத்தில் அணிவன, ஏந்துவன முதலிய

1. அபயம் [அளிக்கும் செங்கை] 2-8
2. அனல் கை ஏந்தி 24-6
3. இளமான் 10-8
4. கவணுங்கைக் கொண்டு 3-7
5. தமருகம் (1) கரைகடல் ஒலியில் தமருகத்(து) அரையில், கையினிற் கட்டிய கயிற்றால், இருதலை ஒருநாவியங்க வந்(து) ஒருநாள் இருந்திடாய் எங்கள் கண் முகப்பே 14-3
[தாருகவனத்து முனிவர் தாம்செய்த அபிசார வேள்வியி னின்றும் உடுக்கையைத் தோற்றுவித்துச் சிவபெருமான் மீது ஏவ அதனை அவர்தம் கையில் ஏந்தி ஒலிக்கச் செய்தார்.]
(2) சதியிலார் கதியில் ஒலிசெயும் கையில் தமருகம் 15-4
தமருகம் 10-8
6. துடி [உடுக்கை] 2-8
7. பரிகலம் கபாலம் 15-2
8. பாம்பு விடவாய்க் கங்கணம் செங்கை 2-8
9. மழு கணியெரி விசிறி கரம் 2-8
10. மறி-மான்
ஏர்வங்கை மான் மறியன் 25-8
கலையார் மறி பொற்கையினன் 20 7
மான்மறியேந்திய தடங்கையன் 22-1
11. யாழ் (1) நின் கையில் யாழ் நரம்பாலும் உயிர் ஈர்ந்தாய் 12-8
(2) மழலையாழ் வீணை, கெழுவு கம்பலை 10-8
12. வளை வான்முத்தின் சரிவளை பெய்து 18-1
13. வீணை கெழுவு கம்பலை 10-8
14. வெண்டலை ஏந்தும் குழகனை 14-10

## (3) கழுத்தில் அணிவது



## (4) காதில் அணிவன

தோடு



குழை



மாத்திரை



## (5) காலில் அணிவன

[மழலைச் சிலம்பு என்று தஞ்சைப் பெரிய கோயிலில் ஒரு தேவதாசியின் பெயர் என்பது ஒரு கல்வெட்டால் தெரிகின்றது.]

மழலைச் சிலம்பு ஆர்க்க　24·5
மழலையஞ் சிலம்பு　13·2

5. செருப்பு

செருப்பு　3·7

6. பாதுகை　10·9

## (6) சிவபிரான் சடையில், சென்னியிற் சூடுவன

1. கங்கை

அரும்புனல் அலமருஞ் சடை　26·4, 5
அவிர்சடை முடிமேல் கங்கை கொண்டிருந்த கடவுளே!　13·10
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா　1·6
இன்னகை மழலை கங்கை　10·8
ஒழுகுநீர் கங்கை அழகரே　9·4
கங்கை　10·8
கங்கைநீர் நனைக்கும் நலங்கிளர் கொன்றை　6·3
கங்கையோடு அணியும் கடவுள்　13·11
சடைமேல் தரங்கம்　13·4
சடை விரித்து அலையெறி கங்கைத் தெளிரொளி மணிநீர்த் திவலை　10·1
செஞ்சடைக் கங்கை　6·3
திரளும் நீள்மணிக் கங்கையைத் திருச்சடைச் சேர்த்தி　23.4
திருநீறு அழிபொசி வனப்பில் புனல் துளும்(பு) அவிர் சடை மொழுப்பர்　16·9
நிலைநீர் அமலமே　9·9
நீர்கொள் செஞ்சடை　2·10
பாயிருங்கங்கை.........படர்சடை　5·8
புனல் துளும்(பு) அவிர்சடை　16·9
வளங்கிளர் நதியும் சூடி　5·11

2. திங்கள் [மதி]

அந்தியிற் பிறைசேர் அழகிய சடை　10·10
அவிர்சடை மேல் நிரம்பாத பிறை தூவும் நெருப்பு　12·8
இளநிலா எறிக்கும் பிறைதவழ் சடை மொழுப்பு அவிழ்ந்து சரியும்　15·1

| | |
|---|---|
| இளம் பிறை | 10·8 |
| ஐம்மதியும் சூடி | 27·2 |
| சசி கண்ட சிகண்டா | 1·3 |
| சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய | 16·3 |
| செஞ்சடை வாழ்மதி | 2·10 |
| சென்னி மேலோர் அம்புலி சூடுமரன் | 20·4 |
| தருணேந்து சேகரன் | 6·4 |
| தீ மெய்ச்சடைமேல் திங்கள் சூடி | 24·5 |
| துண்டவெண்பிறை படர்சடை மொழுப்பு | 10·2 |
| தேய் மதியஞ்சூடிய தில்லைச் சிற்றம்பலவர் | 27·6 |
| நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கை நிலாமதி | 6·3 |
| பனிநிலா கரந்த படர்சடை | 5·8 |
| பனிமதிச் சடையான் | 26·2 |
| பிறைக்கொள் சென்னி | 22·10 |
| பிறைதவழ் சடை மொழுப்பு | 15·1 |
| பிறைதவழ் மொழுப்பு | 8·9 |
| மதியமும் சூடி | 5·11 |
| முளைவெண் மதிசூடிக் கொத்தார் சடைகள் | 24·7 |
| முளையா மதிசூடி | 19 5 |
| வளர் இளம் திங்களை முடிமேல் கங்கையோ(டு) அணியும் கடவுள் | 13·11 |
| வளை இளம்பிறை | 7·6 |

**3.** பாம்பு

| | |
|---|---|
| ஆடிவருங் காரரவும், ஐம்மதியும், பைங்கொன்றை சூடி | 27 2 |
| சடைமேல் மிளிரும் பொறிவரி நாகம் | 9·9 |

**4.** மலர்; மொட்டு

| | |
|---|---|
| அகத்தி மொட்டு முகிழ்த்த அவ்வகத்தி மொட்டு | 22·10 |
| [அகத்தி மொட்டு இறைவனுக்கு உரியதாகக் கூறியது புதுமை] | |
| இதழி (கொன்றை) | 10·8 |
| கங்கை நீர் நனைக்கும் நலங்கிளர் கொன்றை | 6·3 |
| குவளை மாமலர் கண்ணி கொன்றை துன்று பொற்குழல் திருச்சடை | 23·1 |
| கொக்கிறகு (கொக்கு மந்தாரை) | 2·10 |
| கொன்றை கங்கைநீர் நனைந்தமை நலங்கிளர் கொன்றை | 6·3 |
| கொன்றை (இதழி) | 2·10, 10·8 |
| பைங்கொன்றை சூடி | 21·2 |
| கோங்கு | 10·8 |

சடைமேல் புரிதரு மலரின் தாது 10-3
தழை (வில்வம்) தழை தவழ் மொழுப்பு 10-7
[வில்வம், கிளுவை, விளா, நொச்சி, மாவிலங்கை என்பன பஞ்ச வில்வமாகும்]
புதுமத்தம் 2-10
மத்தம் 22-10

## (7) புயத்தில் அணிவன

1. புலித்தோல்
புலித்தோல் பியற்கிட்டு (பியல்-புயம்) 24-2
பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல் 2 7

## (8) மார்பிலும் நெற்றியிலும் (முண்டத்திலும்) அணிவன

பூண்
ஏன மாமணிப் பூணணி மார்பனே 23-9
தடமார்பினிற் பூண்கள் 22 7

பூண்நூல் (புரிநூல்)
திருவுடம்(பு) அதனில்......தவளமே புரிநூல் 9-5
புலித்தோல் மிசைத்தொடுத்து வீக்கும் பொன்னூல் 22-4
பூண்நூல் அகலம் 2-7
வெண்புரி நூல் கட்டியர் 16-10

பொட்டு
ஐய பொட்டிட்ட அழகு வாணுதல் 13-4

## (9) திருநீறு

அழிவழகிய திருநீற்று.........அண்ட வானவர் கோன் 17-1
சந்தன களபம் துதைந்த நன்மேனித் தவள வெண்பொடி முழுதாடும் 9-2
சாந்தின் வெண்மையும் 11-7
தவள நீற்று ஒளி 10 7
திரு உடம்பு அதனில் தவளமே களபம் 9-5
திருநீறு 10-8
திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டு 3-10
தெள்ளுநீறவன் நீறு) என்னுடல் விரும்பும் 10-4
பவளமால் வரையைப் பனிபடர்ந்ததோர் படரொளி தரு திருநீறு 23-1
பனிபடர்ந் தனையதோர் படரொளி தருதிரு நீறு 23-1
பொங்கெழில் திருநீ(று) 16-9
பொடி 2-7
வெண் நீறு 10-10, 13-4

## 6. சிவனிடம் உள்ளவை

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை, தமருகம், திருவடி திருநீ(று) இன்னகை மழலை கங்கை கோங்(கு) இதழி, இளம்பிறை குழைவளர் இளமான் 10-8

[சிலம்பு, சதங்கை, தமருகம், திருநீறு, கங்கை கோங்(கு), இதழி, பிறை, குழை, மான்]

## 7. சிவபிரான் அபிடேகப் பொருள்

1. அன்பர் வார்ந்த கண் அருவி மஞ்சன சாலை 15-2
2. ஆரழலாடுவான் 22-1
3. ஆனைஞ்சாடும் சென்னி......அரன் 20-4
4. பால் நெய் ஐந்துடன் ஆடிய படர்சடைப் பால்வண்ணன் 23-9
5. பாலாடு முடிச்சடைகள் 24 9

## 8. அர்த்தநாரீசுரர்

அச்செய்யாளுக்கு உருவம் பாகமும் ஈந்து 23-4
அரிவையோர் கூறுகந்தான் 25-4
எழுதுகோல் வளையாள் மையரே 9-8
ஒருபால் விமல மேகலையும் உடையரே 9-9
ஒருவனும் இருவா 13-1
ஒருடம் பிலராம் இருவரே 9-3
கரியரே இடந்தான் செய்யரே ஒருபால் 9-3
காதினின் மாத்திரைகளோடு ஐயதோடு மன்றே அடியேனை யாட்கொண்டனவே 22-8
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்று பொற் குழல் திருச்சடையும் 23-1
கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து கழுத்திலோர் தனி வடங் கட்டி முக்கண் நாயகராய்ப் பவனி போந்(து) 18-1
தன்பெருஞ் சோதி மங்கையோர் பாகத்(து)......அருமருந்து 5-7
திரு உடம்(பு) அதனில் கலையும் துகிலுமே ஒருபால் துடியிடை இடமருங்(கு) ஒருத்தி அவள் 9-5
மங்கையோர் பாகத்(து) என் அருமருந்(து) 5-7
மங்கை பங்கன் 20-6
மருங்கில் கொங்கை கொண்(டு) அனுங்கும் கொடியிடை 13-10
மாதொரு கூறன் 22-1

## 9. அறம் உரைத்தது



## 10. சிவபிரான் ஆடை, உடை, போர்வை

### 1. ஆடை, உடை



### 2. கோவணம்

3. போர்வை



## 11. சிவபிரான் இருவர்க்கு அரியர்



## 12. சிவபிரான் உலாவும் (பவனியும்)



---

* (மால்) வாமனருடைய தோலை உரித்துச் சட்டையாக அணிந்தார் பைரவர்.

## 13. சிவபிரான் உறைவிடம்

## 14. சிவபிரான் குடை



## 15. சிவபிரான் கொடி

(பிறபொருட் பகுதி தலைப்பு 70 பார்க்க)



## 16. சிவபிரான் சடை

## 17. சிவபிரான் தன்மை முதலியன

### (1) அண்டர்-அணு

அண்டமோ ரணுவாம்-பெருமை கொண்(டு) அணுவோர், அண்டமாம் சிறுமை கொண்டு 13-6

அணுவே 15-7

### (2) அமுது

அக உயிர்க்கு அமுது 13-5

அட்ட ஆர் அமிர்தர் 16-10

அருளை வாய் மடுத்துப் பருகு தோ(று) அமுதம் ஒத்து 18-2

அன்பரானவர்கள் பருகும் ஆரமுதே ! 15-7

ஆரா அமுதமாய் 24-1

இன்னமுதை 25-1

இனிய (பாலுமாய்) அமுது 11-10

என் ஆரமுதை 20-1

திருவாவடுதுறை அமுதே 6-1

தெளிவாரமுதே ! 20-5

பாலும் அமுதமும் 6-11

வேடலங்காரக் கோலத்தின் அமுது 5-12

### (3) அரசு (வேந்தன்)

அண்ணல் அம்பலவன் கொற்ற அரசன் 4-10

அம்பலத்தரசே ! 1-6

அருந்தவர்க்கரசு 1-8

இமையவர்க்கு அரசு 5-1

எங்கள் கோவை 20-1

கொற்ற அரசன் 4-10

சாந்தையர் வேந்தன் 6-5

சுந்தரத்(து) அரசு இது 7-7

தில்லை வேந்தன் 4-2

நாதாந்தத்(து) அரையா 3-7

வேந்தன் (வளைத்தது) மேருவில் 6-6

### (4) அருவும் உருவும்

அருவாய் உருவாய் 24-1

அருவுரு என்(று) அறிதற்கரிதாயவனை 25-2

திருச்சிற்றம்பலம் :—(1) இது கோயிலின் பெயர். வடமொழியில் சிதம்பரம் (சிற்றம்பலம்)—சித் அம்பலம்—சித் –ஞானம் —அம்பரம் - வெட்டவெளி : ஞானாகாசம்.

இத்தலம் சிற்றம்பலம்; பொன்னம்பலம்; (பொற்சபை); தில்லை வனம்; பூலோக கயிலாயம்; பெரும்பற்றப் புலியூர்; புலியூர்; சிதம்பரம் என்னும் பெயர்களைக் கொண்டு விளங்கும். அர்த்தசாம பூசையில் இவர் (கூத்தர்) 1000 சிவ கலைகளுடன் விளங்குவதால் அர்த்தசாம தரிசனம் இத் தலத்தில் விசேடம்.

மற்ற எல்லாத் தலங்களிலுள்ள சிவ கலைகள் அனைத்தும் அர்த்த சாமத்தில் தன்னிடத்தில் வந்து சேரப்பெற்ற ஒப்புயர் வில்லாத தலம்.

பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இருடிகளுக்காகப் பெருமான் கனக சபையில் எக்காலமும் ஆனந்த தாண்டவம் புரியும்பதி.

"தில்லை வாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்," என்று கூத்தப் பிரானாலேயே புகழப்பெற்ற பெருமையாளர் களாகிய தில்லை மூவாயிரர் பூசிக்குந் திவ்ய சேத்திரம்.

மேலும் இத்தலம் பிரபஞ்ச வடிவமான சுராட் புருஷனது இருதயஸ்தானத்திலே "தண்டளிர்ச் சோலைத் தில்லைத் தபனிய மன்றிலென்றுந் தொண்டையங்கனிவாய் மாது தொழச் சுராட் புருடனுள்ளத் தண்டருமதிக்கலாற்று அற்புதத் தனிக்கூத் தாடல் கண்டனன் கசிவாலுள்ளங் களிப்புற வணங்கிப் போனான்" கந்தபுராணம்—வழி நடைப் படலம் 15

## 1. கோயில் [தில்லை]

பதிகஎண் - [1-4,8,19-29]

தலைப்புக்கள்

1. அம்பலம்
2. கூத்தன்
3. சிற்றம்பலம்
4. திருச்சிற்றம்பலம்
5. தில்லை
6. தில்லையம்பலம்
7. தில்லைச் சிற்றம்பலம்
8. புலியூர்
9. பெரும் பற்றப் புலியூர்
10. பொன்னம்பலம்
11. மூவாயிரவர் (தில்லை)
12. தில்லையும் திருமாலும்

(1) அம்பலம்

| | |
|---|---|
| அம்பலக் கூத்தனே | 23·4 |
| அம்பலக் கூத்து | 1·2 |
| அம்பலத்தமர சேகரன் | 1·7 |
| அம்பலத் தமிர்தே | 4·6 |
| அம்பலத்தமுதே | 1·4 |
| அம்பலத்தரசே | 1·6; 10 |
| அம்பலத் தருள்நடம் ஆடவே | 26·3 |
| அம்பலத் தருள்நடம் ஆடுவான் | 26·11 |
| அம்பலத் தருள்நடம் ஆடுவானே | 26·2 |
| அம்பலத்தாடுகின்ற...எம்மான் | 4·3 |
| அம்பலத்துள் நிறைதரு கருணா நிலயம் | 1·11 |
| அம்பலம் | 1; 4·9.11 |
| அம்பலம் ஆடரங்கு | 1·1 |
| அம்பலம் செம்பொற் கோயில் | 1·5 |
| அம்பலம் நின் ஆடரங்கே | 19·5 |
| அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே | 19·4 |
| அம்பலவர் | 4·8 |
| அம்பலவா | 1·8 |
| அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச் செம்பொன் செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே | 19·4 |

(2) கூத்தன்



(3) சிற்றம்பலம்

(4) திருச்சிற்றம்பலம்



(5) தில்லை

| | |
|---|---|
| [illegible] | 25 |
| [illegible] | 28-3 |
| [illegible] பொம்பணூர் | 22-6 |
| [illegible] அம்பலத்(து) அரன் ஆடல் வாய்ந்த மாமலர்ப் [illegible] | 23-6 |
| [illegible] | 26-7 |
| [illegible] செம்பொனின் அம்பலத்துக்கோனை | 20-4 |
| [illegible] செம்பொனின் அம்பலத்துள் ஒளிவான் சுடரே ! | 20 5 |
| [illegible] | 4-2 |
| [illegible] சூழ்தரு தில்லை | 23-1 |
| [illegible] தில்லை | 21-10 |
| [illegible] | 19-3 |
| [illegible] பொழில் சூழ்தரு தில்லையுள் திருநடம்புரிகின்ற [illegible] பூணணி மார்பனே ! | 23 9 |
| [illegible] பொழில் சூழ் தில்லை | 24-7-11 |
| [illegible] தொழ ஆடிய தில்லைக் கூத்தன் | 22 11 |
| [illegible] உயர்ந்த [illegible] தில்லை. (நிவா - வட [illegible] சிதம்பரத்திற்கு வடக்கில் உள்ளது) | 24-4 |
| [illegible] மதில் சூழ்தரு தில்லையுள் பூசுரர்பலர் [illegible] | • 23-10 |
| [illegible] சீர் தில்லை | 4-1 |
| [illegible] | 29 1 |
| [illegible] கள் [illegible] நீர்த்தில்லை | 22-9 |
| [illegible] சக்கரம் அன்று அருள் செய்தவன் மன்னிய தில்லை | 29-9 |
| [illegible] தில்லையாய் | 28 3 |
| [illegible] பணிய மன்றேறார் ஏத்த மன்னி நடமாடும் தென்றோர் [illegible] பொழில் சூழ் தில்லை | 24-11 |
| [illegible] மாளிகை சூழப் பொன்றேர் குன்றம் ஒன்று [illegible] நின்றது போலும்.....தென் தில்லை | 20-1 |

(6) [illegible]

| | |
|---|---|
| அந்[illegible] [illegible]யார் பாடியாடும் அணிதில்லை அம்பலம் | 20-8 |
| அணி தில்லை அம்பலம் | 20-8 9 |
| அணியார் தில்லை அம்பலம் | 22-5 |
| அந்தணர் வணங்கும் அணியார் தில்லை அம்பலம் | 22-5 |
| அந்தணர் தில்லை அம்பலத்துள் ஏத்த நின்றாடுகின்ற எம்பிரான் | 25-7 |
| [illegible] மணிதிகழ் மாடம் ஓங்கு தில்லையம்பலத்தெங்கள் செல்வன் வாரான் | 26-1 |
| தில்லை அம்பலத்துள் என்றுமுதை எங்கள் கோவை | 20-1 |
| தில்லை அம்பலத்தெங்கள் செல்வன் வாரான் | 26-1 |

(7) தில்லைச்சிற்றம்பலம்

(8) புலியூர்



(9) பெரும்பற்றப் புலியூர்

---

*மூர்த்திதலம் இவையுடன் தீர்த்த விசேடமும் கொண்டது தில்லை. தீர்த்தம்-சிவகங்கை. "தீர்த்தம் என்பது சிவகங்கையே, ஏத்தருந்தலம் எழிற்புலியூரே, மூர்த்தி அம்பலக் கூத்தனை துருவே"

—சிதம்பரச் செய்யுட் கோவை-45

(10) பொன்னம்பலம்

அணிதில்லைச் செம்பொன் செய் அம்பலம் 19-4
அம்பொன் செய் அம்பலத்தே 1-6
சீரான் மல்கு தில்லைச் செம்பொன் அம்பலத்தாடி 20-10
சீரான் மல்கு தில்லைச் செம்பொன் அம்பலம் 20-6
செம்பியன் செம்பொன் அணிந்த......அணிதில்லை அம்பலம் 20-8
செம்பொன் அம்பலம் 4-4, 11; 20-6
செப்பொனின் அம்பலம் 20-4, 5, 7
தில்லைச் செப்பொன் அம்பலம் 4-11
பாரோர் முழுதும் வந்திறைஞ்சப் பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்
தான் [தில்லைச் செப்பொன் அம்பலத்து] 20-6
பொன்னம் பலத்தரசே 1-10
பொன் அம்பலத்தாடி 1-3
பொன் அம்பலம் 1-3, 5, 6, 9
பொன்னின் செய் மண்டபம் 29-1
[பொன்னால் செய்யப்பட்ட தகடு வேய்ந்த மண்டபம்
பொற்சபை — சிற்றம்பலம்]

(11) மூவாயிரவர் (தில்லை)

மூவாயிரவர் தங்களோடு முன்னரங் கேறி நின்ற; கோவே! 20-2
மூவாயிரவரொடும் அனையா விளையாடும் அம்பலம் நின்
ஆடரங்கே 19-5
மூவாயிரவரொடும் குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக்
கூத்தாடினையே! 19-2

(12) தில்லையும் திருமாலும்

### தில்லையில் திருமால் வரங்கிடத்தல்

இது தில்லைச் சிற்றம்பலத்துத் திருவாயில் முன்றிலில்
கோவிந்தராசப் பெருமாள் எழுந்தருளி யிருப்பதைக்
குறிக்கும் 20-5

## 2. ஆமூர்

* [திரு ஆமூர் வைப்புத்தலம்]

அல்லியம் பூம்பழனத்து ஆமூர் நாவுக்கரசு 19-3

---

* திரு ஆமூர் தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டிக்கு மேற்கே 5 மைல்.

## 3. திருஆரூர் [18]

இத்தலம் தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. புகைவண்டி நிலையம் நாகப்பட்டினத்திற்கு மேற்கில் உள்ளது. மூவர் தேவாரம் பெற்றது பஞ்ச பூதத் தலங்களில் இது பிருதிவித்தலம். சப்த விடங்கத் தலங்களுள் முதன்மையானது. இத் தலத்துத் தியாகேசர் முசுகுந்த சக்கரவர்த்தியால் தாபிக்கப்பட்டவர். வீதிவிடங்கன் எனப்பெயர் பெற்றவர். பிறக்க முத்தி அளிக்கும் பெரும் பதி. கோயில், குளம், செங்கழு நீரோடை. இவை ஒவ்வொன்றும் ஐந்து வேலிக ளென்பர். 'அஞ்சணை வேலியாரூர் ஆதரித்திடங் கொண் டாரே' என்பது தேவாரம். 4-53-7

இன்னும் பல விசேடங்களைக் கொண்ட தலம். அவைதமை, சிவஸ்தலமஞ்சரியிலும் திருப்பனந்தாள், திருவிசைப்பா, பதிப்பு, தெளிவுரையிலும், [பக்கம் 232-234 பார்க்கவும்]

உலகதன் மேல் மிக்க சீராரூர் ஆதியாய் வீதி விடங்கராய் நடம் குலாவினரே 18-1

குழலொலி, யாழொலி, கூத்தொலி, ஏத்தொலி எங்குங் குழாம் பெருகி விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி மிகு திரு ஆரூர் 29-11

சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனிமுழு முதலு மாய் அதற்கோர், வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதிவிடங் கராய் நடம் குலாவினரே 18-2

## 4. திரு ஆவடுதுறை [6]

இத்தலம் மாயூரத்துக்கு அடுத்த நரசிங்கன் பேட்டை புகை வண்டி நிலையத்துக்குக் கிழக்கில் $1\frac{1}{2}$ மைலில் உள்ளது.

சாந்தை :—[ஊரின் பெயர் சாத்தனூர், இதன் மரூஉப்பெயர் சாந்தை, சாந்தையூர் என்பதாகும். கோயிலின் பெயர் ஆவடுதுறை]

பசுவடிவுடன் உமாதேவியார் பூசித்த காரணத்தால் 'ஆவடுதுறை என்ற பெயர் வந்தது.

அணி ஆவடுதுறை 6-2, 9, 10
அலம்பு புனற் பொன்னி அணி ஆவடுதுறை 6-9, 10.
அழிவொன்றிலாச் செல்வச் சாந்தையூர் அணி ஆவடுதுறை 6-8
ஆந்தண் திரு ஆவடுதுறை 6-6
ஆவடு தண்துறைத் தருணேந்து சேகரன் 6-3
காவிரிக் கரை மேய ஐயா ! திரு ஆவடுதுறை அமுதே ! 6-1
சாந்தை 6-6

## 5. திரு இடைக்கழி [7]

இத்தலம் அட்டவீரத் தலங்களுள் ஒன்றாகிய திருக் கடவூருக்கு 4 மைல் தூரத்தில் உள்ளது. அருணகிரி நாதரால் பாடப் பெற்ற பிரபலமான சுப்பிரமணிய தலம்.



* சுப்பிரமண்ணியன் என்னும் வடமொழிப் பெயர் தமிழ் நூல் களில் முதன்முதலாக இங்குத்தான் வந்துளது போலும்.

# 6. திருஇடை மருதூர் [17]

இத்தலம் கும்பகோணத்திற்கு வடகிழக்கில் 5 மைல்; புகைவண்டி நிலையம். மூவர் தேவாரம் பெற்றது. இத் தலத்தைப் பற்றிய பிற விசேடங்கள் 'சிவஸ்தல மஞ்சரி' யிலும், ''திருப்பனந்தாள்'', 'திரு இசைப்பா', பதிப்பு [தெளிவுரை]யிலும் பக்கம் 218-221 பார்க்கவும்.

விட மிடற்(று) அடிகள், துணியுமிழ் ஆடை அரையிலோ ராடை, சுடர் உமிழ் தர அதன் அருகே, மணியுமிழ் நாகம் மணி யுமிழ்ந்(து) இமைப்ப, மருவிடம் திருவிடை மருதே 17-4

வீங்குல(கு) ஒழிவற நிறைந்து, துனிபடு கலவிமலை மகளுட னுய்த், தூங்கிருள் நடுநல் யாமத்தென், மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன், மருவிடம் திருவிடை மருதே 17-3

## 7. கங்கை கொண்ட சோளேச்சரம் [13]

திரிசிராப்பள்ளி அரியலூர் வழியாக ஜெயங்கொண்ட சோழ புரத்திற்குக் கிழக்கே சுமார் 4 மைலில் உள்ளது. கங்கை கொண்ட சோழபுரம் என இவ் ஊர் வழங்கும். இத் தலத்தில் உள்ள சிவாலயம் கங்கை கொண்ட சோளேச் சரம் என்பதாம்.

இத்தலத்தைப் பற்றிய பிற விஷயங்களை "திரு இசைப்பா, திருப்பல்லாண்டு" தெளிவுரை என்னும் திருப்பனந்தாள் பதிப்பு (20-12-1964) நூலிற் காணலாகும்.]

கங்கை கொண்ட சோளேச்சரத்தானே 13

## 8. கயிலை [வைப்புத்தலம் 2]

கயிலை மலை - பொன் நெடுங் குன்று 16-11
"பொன் நொடித்தான் மலை" - சுந்தரர் 7-100-10

## 9. திருக்களந்தை ஆதித் தேச்சரம் [9]

இத்தலம் திருத்தருப்பூண்டிக்கு மேற்கே நல்ல வழியில் 9 மைலிலும், கொடி வழியில் 5 மைலிலும் உள்ள திருக் களர் என்ற தலத்திற்குத் தென் மேற்கில் சுமார் 2 மைலில் முள்ளியாற்றின் தென் கரையில் "களப்பாள்" (களந்தை) என்னும் ஊரிலுள்ள சிவாலயமே, "ஆதித் தேச்சரம்" இத்தலத்தைப் பற்றிய பிற விவரங்களைத் திருப்பனந்தாள் பதிப்பில் காணலாம். இது கூற்றுவ நாயனர் தலம்.

அடுத்த வான்டளிங்கின் பொருள் வழி இருள் கிழித் தெழுந்த ஐயரேயாகில் அவரிடங் களந்தை அணிதிகழ் ஆதித்தேச் சரமே 9-8

இந்தன விலங்கல் எறிபுனந் தீப்பட்(டு) எரிவதொத்(து) எழு
நிலை மாடம் அந்தணர் அழலோம்(பு) அலைபுனற்
களந்தை அணிதிகழ் ஆதித்தேச் சரமே 9-2
உண்ட(து) ஆலமே ஆகில் அவரிடங் களந்தை அணிதிகழ் ஆதித்
தேச்சரமே 9-6
என்னையாள் விரும்பி.........காத்தெனக்(கு) அருளே புரியவும்
வல்லரே எல்லே அக்கடா ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே 9-7
ஒழுகுநீர்க் கங்கை அழகரே யாகில் அவரிடங் களந்தை அணி
திகழ் ஆதித் தேச் சரமே 9-4
கலையும் துகிலுமே ஒருபால் துடியிடை இடைமருங்(கு),
ஒருத்தி அவளுமே ஆகில் அவரிடங் களந்தை, அணிதிகழ்
ஆதித்தேச் சரமே 9-5
நிலைநீர் அமலமே ஆகில் அவரிடங் களந்தை அணிதிகழ் ஆதித்
தேச்சரமே 9-9
நீரணங்(கு) அசும்பு கழனிசூழ் களந்தை நிறைபுகழ் ஆதித்
தேச்சரம் 9-10
மறைகளும் தேட, அரியரே யாகில் அவரிடங் களந்தை அணி
திகழ் ஆதித் தேச்சரமே 9-3.
முக்கணான் உறைவிடம் போலும் மலை குடைந் தனைய நெடு
நிலை மாட, மருங்கெலாம் மறையவர் மறையோத்(து)
அலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை அணிதிகழ்
ஆதித் தேச்சரமே 9-1

## 10. காழி (சீகாழி) [வைப்புத்தலம் 3]

சம்பந்தன் காழியர் கோன் தன்னையும் ஆட்கொண்டருளி 19-4

## 11. திருக்கீழ்க் கோட்டூர் [10]

மணி அம்பலம் *

கோட்டூர்:—இத்தலம் திருத்தருப் பூண்டி புகைவண்டி நிலை
யத்துக்கு வடமேற்கு9 மைலிலும் மன்னார்குடி புகைவண்டி
நிலையத்துக்குத் தென் கிழக்கில் 10 மைலிலும் உள்ளது.
திருக் கோட்டூரில் மேற்கே உள்ள திருக்கோயில் தேவாரம்
பெற்றது; கிழக்கே உள்ள திருக்கோயில் 'திருஇசைப்பா''
பெற்றது. இதுதான் கீழ்க்கோட்டூர் மணி அம்பலம்.

* இப்பதிகம் தலைவனிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

சாட்டியக்குடியார் இதயமாங் கமலங்கமல வர்த்தனே ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே 15-4
சாட்டியக்குடியார் இருகை கூம்பின கண்(டு) அலர்ந்தவா முகம் ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே 15-1
சாட்டியக்குடியார் *இருமுகங் கழல் மூன்(று) ஏழுகைத் தலம், ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே 15-5
சாட்டியக்குடி இருந்தருளும் எங்கள் நாயகனே போற்றி 15-8
சாட்டியக்குடியார் இழுதுநெய் சொரிந்தோங்(கு) அழலொளி விளக்(கு) ஏழ் இருக்கையில் இருந்த ஈசனுக்கே 15-3
சாட்டியக்குடியார்க்(கு) இன்பனே! எங்கும் ஒழிவற நிறைந்(து) ஏழ் இருக்கையில் இருந்தவா(று) இயம்பே 15-7
சாட்டியக் குடியார்க்(கு) இனிய தீங்கனியாய் ஒழிவற நிறைந்(து) ஏழ் இருக்கையில் இருந்தவா(று) இயம்பே 15-6
சாட்டியக்குடியார் ஈட்டிய பொருளாய் இருக்கும் ஏழ் இருக்கை இருந்தவன் 15-10
சாட்டியக்குடியார் ஏந்தெழில் இதயம் கோயில் மாளிகை ஏழ், இருக்கையுள் இருந்த ஈசனுக்கே 15-2
சாட்டியக்குடியார் ஏழ் இருக்கை முத்தனே 15-9
தங்கள் நான் மறை நூல் சகலமுங் கற்றோர் சாட்டியக்குடி 15-8
தங்கள் நான்மறை நூல் சகலமுங் கற்றோர், சாட்டியக்குடி யிருந்தருளும் எங்கள் நாயகனே போற்றி 15-8
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல், சாட்டியக்குடியுள் ஏழ் இருக்கை முத்தனே அருளாய்; முதல்வனே; அருளாய் முன்னவா துயர் கெடுத்(து) எனக்கே 15-9
தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த் தண்டலைச் சாட்டியக்குடியார், ஈட்டிய பொருளாய் இருக்கும் ஏழ் இருக்கை, இருந்தவன் 15-10

## 13. சிவபுரம் [வைப்புத்தலம் 4]

இத்தலம் கைலாயம்; அல்லது சிவபுரம் என்னும் தேவாரம் பெற்ற தலம். இது கும்பகோணத்திற்கு 3 மைல் தூரத்தில் உள்ளது.

---

* இருமுகங் கழல் மூன்று ஏழுகை. இஃது அக்கினி தேவனின் திருவுருவாகும். இங்குச் சிவபெருமானை அக்கினி தேவன் பூசித்தமையால், அவன் வடிவமாக இருந்து வழிபடும் அன்பர்களுக்கு ஈசன் அருள் செய்கின்றார் என்பர். திருப்பனந்தாள் தெளிவுரை. 1964 - பக்கம் 199 அக்கினி பகவானுக்கு இரண்டு முகம், நீண்ட ஏழு நாக்குகள், நான்கு கொம்புகள், மூன்று பாதம். [அபிதான சிந்தாமணி]

சிவபுர நகருள் வீற்றிருந்த அங்கணு 15-8
சிவபுரம் [சிவபுரன்] 15-5

## 14. செப்புறை [வைப்புத்தலம் 5]

இது சேந்தனாரின் ஊர் என்பர்.

செப்புறைச் சேந்தன் 7-11
சிவன் சீர் அடியார் அடிநாய் செப்புறை சேந்தன் அப்பர் 29-13

## 15. தஞ்சை இராசராசேச்சரம் [16]

இத்தலம் தஞ்சாவூர்; சோழ நாட்டுத் தலைநகர். முதலாம் இராசராச சோழன் [கி. பி. 985-1014] கட்டிய சிவாலயமே "தஞ்சை இராசராசேச்சரம்" எனப் பெயர் பெறும். ஏனைய விளக்கங்களுக்குத் திருப்பனந்தாள் தெளிவுரை 1964 பக்கம் 205 பார்க்கவும்

அரணம் பலகுலாம் படைசெய் நெடுநிலைமாடம், பருவரை ஞாங்கர் வெண்டிங்கள் இலைகுலாம் பதணத்(து) இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சரத்(து) இவர்க்கே 16-1
இஞ்சிசூழ் தஞ்சை இராசராசேச்சரம் 16
உவரிமா கடலின் ஒலிசெய் மாமறுகில் உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம் இவருமால் வரை செய் இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சரத்திவர்க்கே 16-5
உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம் இவரும்......தஞ்சை 16-5
எங்களுக்(கு) இனியர்; இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சரத்திவர் 16-9
காழகில் கமழும் மாளிகை மகளிர் யாழொலி சிலம்பும்...... தஞ்சை 16-4
கோங்கினை அனைய, குடைகெழு நிருபர் முடியொடு முடி தேய்ந்(து) உக்கசெஞ்சுடர்ப் படுகுவை யோங்(கு) இடை கெழு மாடத்(து) இஞ்சி சூழ் தஞ்சை 16-3
சரளமந்தார சண்பகவகுள, சந்தன நந்தனவனத்தின் இருள் விரி மொழுப்பின் இஞ்சி சூழ் தஞ்சை 16-11
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச், சூழல் மாளிகை சுடர்வீசும். எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை 16-7
தரளவான் குன்றில் தண் நிலாஒளியும், தருகுவால் பெருகு வான் தெருவில் இருளொலாங் கிழியும் இஞ்சி சூழ் தஞ்சை 16-6
பொய்யிலா மெய்யர்க்(கு) இனியர் எத்தனையும் இஞ்சி சூழ் தஞ்சை இராச ராசேச்சரத்திவர் 16-10

* மதில்நிரை வடவாற்றிடு புனல் மதகில் வாழ் முதலை, எற்று
 * நீர்க்கிடங்கில் இஞ்சி சூழ் தஞ்சை 16-2
மால்வரைசெய் இஞ்சி சூழ் தஞ்சை 16-5
மாளிகை மகளிர் கங்குல் வாய் அங்குலி கெழும யாழொலி
 சிலம்பும்......தஞ்சை 16-4
மின்னொடும் புருவத்(து) இளமயில் அனையார் விலங்கல் செய்
 நாடகசாலை, இன்நடம் பயிலும் இஞ்சி சூழ் தஞ்சை 16-8
வாழியம் போதத்(து) அருகுபாய் விடையம், வரிசையின்
 விளக்கலின் அடுத்த, சூழலம் பளிங்கின் பாசலர் ஆதிச்
 சுடர் விடு மண்டலம் பொலியக், காழகில் கமழும்
 மாளிகை மகளிர், கங்குல் வாய் அங்குலி கெழும
 யாழொலி சிலம்பும் இஞ்சி சூழ் தஞ்சை, இராசராசேச்
 சரத்து இவர்க்கே 16-4

## 16. திருப்பூவணம் [14]

இத்தலம் மதுரைக்குக் கிழக்கே 12 மைல் தூரத்தில் வைகை ஆற்றங் கரையில் உள்ளது. புகைவண்டி நிலையம். மூவர் தேவாரம் பெற்றது. பிற விசேடங்கள் "சிவஸ்தல மஞ்சரி" என்னும் நூலிற் பார்க்க.

"அம் மனங்குளிர் நாட் பலிக் கெழுந்தருள" அரிவையர்
 அவிழ்குழற் சுரும்பு, பொம்மென முரலும் ஆவணவீதிப்
 பூவணம் 14-6
ஆவண வீதிப் பூவணங் கோயில் கொண்டாயே 14
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத், தெளிதருதேறல்
 பாய்ந்(து) ஒழுகும், பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
 பூவணம் 14-2
நெடுநிலை மாடத்(து) இரவிருள் கிழிக்க நிலை விளக்(கு) அலகில்
 சாலேகம், புடைகிடந்(து) இலங்கும் ஆவண வீதிப்,
 பூவணம் 14-5
புண்ணிய மகளிர் ஆவண வீதிப் பூவணம் 14-4
பூவணம் கோயில் கொண்டாயே 14-10
மண்ணியன் மரபில் தங்கிருள் மொழுப்பின், வண்டினம் பாட
 நின்றாடும், புண்ணிய மகளிர் ஆவண வீதிப் பூவணம் 14-4
மின்னவில் கனக மாளிகை வாய்தல், விளங்கிளம பிறைதவழ்
 மாடம் பொன்னவில் புரிசை ஆவணவீதிப், பூவணம் 14-7

---

* வடவாறு தஞ்சை மாநகரின் வடபாகத்தில் ஓடுகின்றது.
 . [இராசாகோர்சியின் அண்மையில்]

விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல், வேட்கையின் வீழ்ந்தபோ(து) அவிழ்ந்த புரிசடை துகுக்கும் ஆவண வீதிப் பூவணம் 14·3
வைகைப் பொருதிரை மருங்கோங்(கு) ஆவணவீதிப் பூவணங் கோயில் கொண்டாயே 14·1

## 17. திருமுகத்தலை [11]

இத்தலம் திருத்தருப் பூண்டிக்கு வடகிழக்கில் 4 மைல் தூரத்தில் உள்ள "பன்னதரு" என்னும் கிராமம். சுவாமி பெயர் "பன்னகா பரமேசுரர், தேவியார் "சுகுந்த குந்தளாம்பா." "சாந்த நாயகி", கோயில் சிறிது "முகத்தலை நாதர்" என்ற லிங்கம் பிராகாரத்திலிருக்கிறது. கருவூரர் பாடிய "திருஇசைப்பா" பெற்றது.

செழுநீர் முகத்தலை அகத்தமர்ந்(து) உறையும் பன்னகா பரனே 11-8
முகத்தலை அகத்தமர்ந்து 11
முகத்தலை மூதூர்த் தவளமா மணிப் பூங்கோயிலும் அமர்ந்தாய் 11-1
முகத்தலை மூதூர் நீடினுமெனினும் உள்புகுந் தடியேன் நெஞ்செலாம் நிறைந்து நின்றாயே 11-4
முழங்கு தீம்புனல் பாய்ந்(து இளவரால் உகளும் முகத்தலை அகத்தமர்ந்து 11-2
முழுதுலகு இறைஞ்ச முகத்தலை அகத்தமர்ந்(து) 11-5
மூதறிவாளர் முகத்தலை அகத்தமர்ந்(து) 11-9
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து, மிகத்திகழ் முகத்தலை மூதூர் 11-4
மெசய்ம்பராய் நலஞ்சொல் மூதறிவாளர் முகத்தலை அகத்தமர்ந்து 11-9

## 18. திரை லோக்கிய சுந்தரம் [12]

* "திரைலோக்கி" என்னும் இத்தலம் திருப்பனந்தாளுக்குத் தென் கிழக்கில் 3 மைல் தூரத்தில் உள்ளது. ஆடுதுறையிலிருந்து வடக்கே திருப்பனந்தாள் செல்லும் வழியில் 3 மைல் வந்து, அதன்பின் 3 மைல் கிழக்கே சென்றாலும்

---

*இத் தலத்தைப் பற்றிய ஏனைய விவரங்களை "திரு இசைப்பா" "திருப்பல்லாண்டு", தெளிவுரை என்னும் (திருப்பனந்தாள் பதிப்பில் 1964) காணலாகும். இத்தலத்தைப் பற்றிய முழுக் குறிப்பு "சித்தாந்தம்" மே 1970 இதழிற் காணலாகும்.

இத் தலத்தை: அடையலாம் திரைலோக்கிக்குத் தெற்கில் 2 மைலில் [துயிலிக்] கோட்டூர் என்ற கிராமம் உள்ளது. கோட்டூர் கோடை என்றும் மருவியது. கோட்டூரும் (கோடையும்) திரைலோக்கியும் கருவூரார் காலத்தில் ஒன்றாக இருந்தது போலும்.

அணி கோடைத் திரைலோக்கிய சுந்தரனே ! 12-10
[கோடை - துயிலிக்கோட்டூர்]
கோடைத்திரை லோக்கிய சுந்தரனே 12
சீரணைத்த பொழிற் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே 12-11
சீரோங்கும் பொழிற் கோடைத் * திரைலோக்கியே சுந்தரனே! 12 1
செஞ்சாலி வயற் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே ! 12-7
செழுமதில் சூழ் பொழிற் கோடை 12-6
திருந்து விழ(வு) அணி கோடைத் திரை லோக்கிய சுந்தரனே ! 12-10
தென்பொழிற் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே 12-9
நளிர் புரிசைக் குளிர் வனம் பாதிரம் போது சொரி கோடை 12-8
பாதிரம் போது சொரி கோடை 12-8
பொழிற் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே 12
போற்றிசைப்பார் காந்தாரம் சீரணைத்த பொழிற் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே! 12-11
மூரிந்த நடை மடந்தையர் தம் முழங்கொலியும், வழங்கொலியும் திருந்து விழ(வு) அணிகோடை 12-10
வயற்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே 12-7

## 19. பிடவூர் [வைப்புத்தலம் 6]

இவ்வூர் திருவிடைக் கழியின் அருகே வடக்கில் உள்ள "கடலாழி" ஆற்றின் வடகரையில் உள்ளது. பிடையூர் என வழங்குகிறது.

சுந்தரர் தேவாரவைப்புத்தலம், பிடவூர். இது "திருப்பதட்டூர்" என வழங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூருக்குக் கிழக்கில் 12 மைல் தூரம்

இவ்விரண்டிடங்களிலும் "ஐயனார்" ஆலயம் உளது.

மருண்டுறை கோயில் மல்கு நன்குன்றப் பொழில் வளர் மகிழ் திருப்பிடவூர் 7-1(

---

* இத்தலத்து இறைவன் பெயர் 'சுந்தரம்' ["சுந்தரேசுரர்"]

## 20. மகேந்திரம் [வைப்புத்தலம் 7]

இது பொதிய மலைக்குத் தெற்கே உள்ள மலை. பல ஊழிகளி லும் நீரில் அழுந்தி மூழ்காத மலை.

மகேந்திர மலை 3
* அழுந்தா மகேந்திரத்(து) அந்தரப்புட்(கு) அரசுக் கரசே! 3·5

## 21. மயிலை [வைப்புத்தலம் 8]

இது திருமயிலாடுதுறை; மாயூரம்.

அறைசெந்நெல் வான் கரும்பின் அணி ஆலைகள் சூழ் மயிலை 25·10
வரைசெய் மாமதில் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி 23·10

## 22. திருவீழிமிழலை [5]

இத்தலம் மாயூரத்துக்கு அடுத்த குற்றாலத்திற்கு 6 மைலில் உள்ளது. பூந்தோட்ட புகைவண்டி நிலையத்திற்கு மேற்கில் ஒரு மைல்.

திருமால் சக்கரம் பெறும் பொருட்டு ஆயிரம் பூக்கொண்டு சிவபிரானைப் பூசிக்க, ஒரு நாள் ஒரு பூக்குறையத் தனது கண்ணையே பறித்து மலராகப் பூசித்த தலம் ஆதலால் இறைவன் பெயர் ' நேர்த்தி ராார்ப்பணேசுரர்''

''மாப்பிள்ளைச் சாமி'' என வழங்கும் கலியாண கோலமாக உள்ள மூர்த்தி உளர்.

இறைவன் எழுந்தருளி யிருக்கும் விமானத்திற்கு ''விண்ணிழி விமானம்'' என்று பெயர்.

இவ்விமானம் திருமால் விண்ணுலகத்திலிருந்து கொண்டு வந்து இறக்கியதாகும்.

உமை மணவாளன் விரும்பிய மிழலை 5·8
எண்ணில் பல்கோடி குணத்தர் ஏர்வீழி 5·9
எண்திசைகெலாங் குலவும் புகழ்த்திருவீழிமிழலை 5·6
ஏர் வீழி 5·9
† ஐந்நூ(ற்று) அந்தணர் ஏத்தும் (எண்ணில் பல் கோடி குணத்தர்) ஏர் வீழி 5·9

---

* ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகளுக்கு அரசனாகிய கருடன். இவன் அருள் பெற்றதை வரலாறு என்ற தலைப்பில் பார்க்க.

† தில்லை மூவாயிரம் அந்தணரைத் தீட்சிதர்; திருவீழிமிழலை ஐந்நூறு அந்தணர் வீழிப் பிராமணர் எனப் படுவர்.

ஆகத் திருவிசைப்பாப் பதிகம் பெற்ற தலங்கள் தில்லை உட்பட பதினன்கு வைப்புத் தலங்கள் எட்டு (8)

———

# ௩. அகப்பொருட் பகுதி

| பதிக எண் | ஆசிரியர் | தலம் |
|---|---|---|
| 3. | திருமாளிகைத்தேவர் | கோயில். |
| 6. | சேந்தனர் | திரு ஆவடுதுறை |
| 7. | ,, ,, | திருஇடைக்கழி |
| 10. | கருவூர்த்தேவர் | திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம் |
| 12. | ,, ,, | திரைலோக்கிய சுந்தரம் |
| 16-6. | ,, ,, | தஞ்சை இராச ராசேச்சரம் |
| 23. | திருவாலியமுதனர் | கோயில். |
| 25. | ,, ,, | ,, |
| 26. | புருடோத்தமநம்பி | ,, |
| 27. | ,, ,, | ,, |
| 28. | சேதிராயர் | ,, |

பதிகஎண் : 3

கோயில் - உறவாகிய யோகம்.

ஆசிரியர் = திருமாளிகைத்தேவர்

இத்திருப்பதிகம் தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் செய்கையையும், நிலையையும் [செவிலித்]தாய் கூறுவதாக அமைந்துள்ளது

தலைவனை [தில்லைக் கூத்தனை] நினைந்து தலைவி என்ன என்ன கூறினள் என்று தாய் கூறினது

என் பொன் குலாத்தில்லை அம்பலக் கூத்த

1. உறவாகிய யோகமும் போகமுமாய் உயிரொளி என்னும் 3-1
2. சிறவாதவர் புரஞ் செற்ற கொற்றச் சிலை கொண்டு பன்றிப் பின் சென்று நின்ற மறவா என்னும் 3-1
3. மணி நீர் அருவி மகேந்திர மாமலை மேல் உறையும் குறவா! என்னும் 3-1
4. குணக்குன்றே என்னும் 3-1

5. விண்ணோர் மடந்தை குலாத்தில்லை அம்பலக் கூத்தனைக் காடாடு பல்கணஞ் சூழக் கேழற் கடும்பின் நெடும் பகற் கான் நடந்த வேடா! மகேந்திர வெற்பா! என்னும் 3-2
6. விண்பால் வருவும், சேடா! என்னும் 3-2
7. செக்கர் மூவாயிரஞ் செழுஞ்சோதி அந்தணர் செங்கை தொழும் கோடா என்னும் 3-2
8. குணக்குன்றே என்னும் 3-2
9. கானவ வரும்) முரண் ஏனம் எய்த களியார் புளின நற் காளாய் என்னும் 3-3
10. வானே தடவும் நெடுங் குடுமி மகேந்திர மாமலை மேலிருந்த தேனே! என்னும் 3-3
11. தெய்வ வாய் மொழியார் திருவாளர் மூவாயிரவர் தெய்வக் கோனே! என்னும் 3-3
12. குணக்குன்றே! என்னும் 3-3
13. வெறியேறு பன்றிப் பின் சென்று ஒரு நாள் விசயற்(கு) அருள் செய்த வேந்தே! என்னும் 3-4
14. மறியேறு சாரல் மகேந்திர மாமலை மேல் இருந்த மருந்தே என்னும் 3-4
15. நெறியே என்னும் 3-4
16. நெறிநின்றவர்கள் நினைக்கின்ற நீதி வேதாந்த நிலைக்குறியே! என்னும் 3-4
17. குணக்குன்றே என்னும் 3-4
18. செழுந்தென்றல் அன்றில் இத்திங்கள் கங்குல் திரைவீரை நீங்குழல் சேவின் மணி எழுந்தின்(று) என்மேல் பகையாட வாடும் எனை நீ நலிவதென்னே ! என்னும் 3-5
19. அழுந்தா மகேந்திரத்(து) அந்தரப்புட்(கு) அரசுக்கரசே அமரர் தனிக்கொழுந்தே என்னும் 3-5
20. குணக்குன்றே என்னும் 3-5
21. வண்டார் குழலுமை நங்கை முன்னே மகேந்திரச் சாரல் வராகத்தின் பின் கண்டார் கவல வில்லாடி வேடர் கடிநாயுடன் கைவளைந்தாய் என்னும் 3-6
22. பண்டாய மலரயன் தக்கன் எச்சன், பகலோன் கலைபல் பசுங் கண் கொண்டாய் என்னும் 3-6
23. குணக்குன்றே என்னும் 3-6
24. கடுப்பாய்ப் பறை கறங்கக் கடுவெஞ்சிலையுங் கணையுங் கவணுங் கைக் கொண்டு உடுப்பாய் தோல் செருப்புச் சுரிகைவராக முன்னோடி விளியுளைப்ப, நடப்பாய் மகேந்திரநாத என்னும் 3-7
25. நாத நாதாந்தத்(து) அரையா என்பர்க்கு நாதாந்த பதம் கொடுப்பாய் என்னும் 3-7

26. குணக்குன்றே என்னும் 3-7

27. சேவேந்து வெல் கொடியானே என்னும் 3-8

28. சிவனே! என் சேமத்துணையே என்னும் 3-8

29. மாவேந்து சாரல் மகேந்திரத்தில் வளர்நாயகா! இங்கே வாராய் என்னும் 3-8

30. பூ வேந்தி மூவாயிரவர் தொழப் புகழேந்து மன்று பொலிய நின்ற கோவே என்னும் 3-8

31. குணக்குன்றே என்னும் 3-8

32. தரவார் புனம் சுனைதாழ் அருவித்தடம் கல்லுறையும் மடங்கல் அமர்மரவார் பொழில் எழில் வேங்கை எங்கும் மழை சூழ் மகேந்திர மாமலை மேல் சுரவா! என்னும் 3-9

33. சுடர்நீள் முடிமால், அயன், இந்திரன் முதல் தேவர்க்கு எல்லாம் குரவா என்னும் 3-9

34. குணக்குன்றே என்னும் 3-9

35. திரு நீறிடா வுருத்தீண்டேன் என்னும் 3-10

36. திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டுப் பெரு நீலகண்டன் திறங்கொண்(டு) இவள் பிதற்றிப் பெருந்தெருவே திரியும் என்னும் 3-10

37. வருநீர் அருவி மகேந்திரப் பொன் மலையின் மலை மகளுக் கருளுங் குருநீ என்னும் 3-10

38. குணக்குன்றே என்னும் 3-10

39. உற்றாய் என்னும் 3-11

40. உன்னையன்றி மற்றொன்(று) உணரேன் என்னும் 3-11

41. உணர்வுகள் கலக்கப் பெற்றாய ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணி தீர வெண்ணீறிடப் பெற்றேன் எனனும் 3-11

42. சுற்றாய சோதி மகேந்திரம் சூழ மனத்திருள் வாங்கிச் சூழாத நெஞ்சிற் சுற்றாய் எனனும் 3-11

43. குணக்குன்றே என்னும் 3-11

44. வேறாக உள்ளத்(து) உவகை விளைத்(து) அவனிச் சிவலோக வேதவென்றி மாறாத மூவாயிரவரையும் எனையும் மகிழ்ந்தாள வல்லாய் என்னும் 3-12

45. ஆறார் சிகர மகேந்திரத்(து) உன் அடியார் பிழை பொறுப் பாய்! மாதோர் கூறாய் என்னும் 3-12

46. குணக்குன்றே என்னும் 3-12

பதிக எண் 6

திருவாவடுதுறை - பொய்யாத

ஆசிரியர் : சேந்தனார்

இப்பதிகம் தலைவன்பால் அன்பு கொண்ட தலைவியின் துயரங் கண்டு தாய் இரங்கிக் கூறியுள்ளது.

ஐயா! திரு ஆவடுதுறை அமுதே! என்றுன்னை அழைத்தக் கால் மையார் தடங்கண் மடந்தைக்(கு) ஒன்(று) அருளா(து) ஒழிவது மாதிமையே　　6-1

ஆவடுதுறை நம்பி நின்ற நீதி அறிகிலன் பொன் நெடும் திண்டோள் புணர நினைக்குமே　　6-2

நினைக்கும் நிரந்தரனே என்னும்　　6-3

நிலாக் கோலச் செஞ்சடைக் கங்கைநீர் நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல் நயம் பேசும்　　6-3

நன்னுதல் நங்கை மீர்! மனக்கின்ப வெள்ளம்......என்னுமே　　6-3

மலைமகள் * மணவாள நம்பி.........என்னுமே　　6-3

வண் சாந்தையூர் தனக்கின்பன்......என்னுமே　　6-3

ஆவடு தண்டுறைத் தருணேந்து சேகரன் என்னுமே　　6-3

தருணேந்து சேகரன் என்னுமே　　6-3, 4

திருவாவடுதுறையான் ஆண்டகை யம்மானே! தெருள் நேர்ந்த சித்தம் வலியவா திலக நுதலி திறத்திலே　　6-4

திலக நுதல் உமை நங்கைக்கும், திருவாவடுதுறை நம்பிக்கும் குலக அடியவர்க் கு) என்னை ஆட் கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல் அலதொன்று அறிகின்றிலேம் எனும்　　6-5

அணியும் வெண்ணீ(று) அஞ்செழுத்தலால்வல தொன்றிலள் (இதற்கு) என் செய்கேன்? வயலந்தண் சாந்தையர் வேந்தனே!　　6-5

சாந்தை முதல்!......கதியருள் என்னும் இத்தையலை ஆந்தண் திருவாவடுதுறையான் செய்கை யாரறிகிற்பாரே?　　6-6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்(கு), எழுந்தோடிக் கெட்ட அத்தேவர்கள் சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள், என், சொல்லிச் சொல்லும் இத்தூமொழி. கற்போல் மனம் கனிவித்த எங்கருணலயா! வந்திடாய் என்றாய் பொற்போ? பெருந்திரு ஆவடுதுறையாளி! பேசா(து) ஒழிவதே　　6-7

---

* திருவீழி மிழலையில் "மாப்பிள்ளைச் சாமி" என வழங்கும் கல்யாண கோலமாயுள்ள மூர்த்தியின் ஞாபகம் சேந்தனருக்கு வந்தது போலும்.

ஒழிவொன்றிலா வுண்மை வண்ணமும் உவப்பிலன் ஊறின்ப
 வெள்ளமும் மொழிவொன்றிலாப் பொன்னித் தீர்த்த
 மும் முனிகோடி கோடியா மூர்த்தியும், அழிவொன்
 றிலாச் செல்வச் சாந்தையூர் அணி ஆவடுதுறை ஆடினான்
 இழிவொன்றிலா வகை எய்தி நின்(று) இறுமாக்கும்
 என்னிள மானனே 6-8

மானேர் கலைகளையுங் கவர்ந் துளங் கொள்ளை கொள்ள
 வழக்கு உண்டே ? தேனே ! அமுதே ! என் சித்தமே
 சிவலோக நாயகச் செல்வமே ! ஆனே ! அலம்பு புனற்
 பொன்னி அணியாவடுதுறை அன்பர் தம் கோனே !
 நின்மெய் யடியார் மனக்கருத்தை முடித்திடுங் குன்றமே 6-9

குன்றேர்ந்தி கோகனதத்(து) அவன் அறியா நெறி என்னைக்
 கூட்டினாய் என்றேங்கி, ஏங்கி அழைக்கின்றாள் இள
 வல்லி எல்லை கடந்தனள்......ஆவடுதுறை ஆடினான்
 நன்றே இவள் நம் பரமல்லள் நவலோக நாயகன்
 பாலளே 6-10

பாலும், அமுதமும், தேனுமாய் ஆனந்தம் தந்துள்ளே
 பாலிப்பான், போலும் என் ஆருயிர்ப் போகமாம்,
 புரகால காம புராந்தகன் சேலுங்கய லுந்திளைக்கு
 நீர்த், திருவாவடுதுறை வேந்தனோ(டு) ஆலுமதற்கே
 முதலுமாம் அறிந்தோம் அரிவை பொய்யாததே 6-11

பதிக எண் 7.

திரு இடைக்கழி - மாலுலா.

ஆசிரியர் : சேந்தனார்.

இப்பதிகம் தலைவன்பால் அன்புகொண்ட ஒருதலைவியின்
 துயரங்கண்ட நற்றாய் இரங்கிக் கூறியது

மாலுலா மனம் தந்(து) என்கையிற் சங்கம் வவ்வினான்; மலை
 மகள் மதலை......திரு இடைக்கழியில்......திருக்குரா
 நீழற்கீழ் நின்ற வேலுலாந் தடக்கை வேந்தன் என்
 சேந்தன் என்னும் என மெல்லியள் இவளே 7-1

இவளை வாரிளமென் கொங்கை பீர் பொங்க எழில் கவர்ந்
 தான்; இளங்காளை......கனகக்குன்றென் வருங்கள்வன்
 ......திரு விடைக் கழியில்.........நங்கை யானைக்கும்
 குழகன் நல் அழகன் நங்கோவே 7-2

கோவினைப் பவளக் குழமணக் கோலக் குழாங்கள் சூழ் கோழி
 வெல் கொடியோன் காவல் நற்சேனை யென்னக் காப்
 பவன் என் பொன்னை மேகலை கவர்வானோ ?......மாமயி
 லூரும் சுப்பிரமணியன் தானே ! 7-3

திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற கோணமர் கூத்தன் குலவிளங்களிறென் கொடிக்கிடர் பயப்பதுங் குணமே ? 7-4

குணமணிக் குருளைக் கொவ்வை வாய் மடந்தை படுமிடர் குறிக்கொளா(து) அழகோ?.........கங்கை தன் சிறுவன் கணபதி பின்னிளங் கிளையே 7-5

திருவிடைக் கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற, முளையிளங் களி(று) என் மொய் குழற் சிறுமிக்(கு) அருளுங் கொல் முருகவேள் பரிந்தே 7-6

பரிந்த செஞ்சுடரோ? பரிதியோ? மின்னோ? பவளத்தின் குழவியோ? பசும் பொன் சொரிந்த செந்தூரமோ? தூமணித்திரளோ? சுந்தரத்(து) அரசிது என்னத்...... திரு விடைக் கழியில்......வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல் மையல் கொண்(டு) ஐயுறும் வகையே 7-7

திருவிடைக் கழியில்......தொகை மிகு நாமத்தவன் திருவடிக்கு என் துடியிடை மடல் தொடங்கினளே 7-8

தொடங்கினள் மடலென்(று) அணிமுடித் தொங்கல் புறவிதழ் ஆகிலும் அருளான் இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன் மறத்தொழில் வார்த்தையும் உடையன்......திருவிடைக்கழியில் திருக்குரா நீழற்கீழ் நின்ற மடங்கலை மலரும் பன்னிரு நயனத்(து) அறுமுகத்(து) அமுதினை மருண்டே 7-9

மருண்டுறை கோயில் மல்கு நன்குன்றப் பொழில்வளர் மகிழ் திருப்பிடவூர் வெருண்ட மான் விழியார்க்கு அருள்செயா விடுமே? விடலையே...திருவிடைக் கழியில் ......குருண்ட பூங்குஞ்சிப் பிறைசடை முடிமுக் கண்ணுடைக் கோமளக் கொழுந்தே 7-10

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத் தாய்மொழி அமரர் கோமகனைச் செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன் வாய்ந்த சொல் இவை சுவாமியையே...... திருவிடைக்கழியில் திருக்குராநீழற்கீழ் நின்ற, எழுங் கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார் இடர் கெடும்; மாலுலா மனமே 7-11

பதிக எண் 10.

திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம் - தனிரொளி

ஆசிரியர் : கருவூர்த்தேவர்.

இப்பதிகம் தலைவனிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

சடைவிரித்து...கங்கைத் தெளிரொளி மணிநீர்த் திவலை முத்(து) அரும்பித் திருமுகம் மலர்ந்து சொட்(டு) அட்ட... கீழ்க் கோட்டூர் வளரொளி மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன் என் மனங்கலந்தானே 10-1

கீழ்க்கோட்டூர் மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன் என் மனங் கலந்தானே 10-2

துண்ட வெண்பிறையும், படர்சடை மொழுப்பும், சுழியமும், சூலமும் நீலகண்டமுங், குழையும், பவளவாய் இதழும், கண்ணுதல் திலகமுங் காட்டி......கீழ்க் கோட்டூர்......மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன் என் மனங் கலந்தானே ! 10-2

வண்டு விடுதூது :—

திருநுதல் விழியும், பவளவாய் இதழும், திலகமும் உடையவள் சடைமேல், புர் தருமலரின் தாது நின்(று) ஊதப் போய்வருந் தும்பிகாள் ! இங்கே, கிரிதவழ் முகிலின் கீழ்த் தவழ் மாடம் செழுவுசும்பலை செய்கீழ்க் கோட்டூர் வருதிறல் மணியம்பலவனைக் கண்(டு) என் மனத்தையுங் கொண்டு போதுமினே 10-3

அங்க மாலைப் பாட்டு

தெள்ளு நீறவன் நீ(று) என்னுடல் விரும்பும்; செவியவன் அறிவு நூல் கேட்கும் மெள்ளவே அவன் பேர் விளம்பும் வாய்; கண்கள் விமானமே நோக்கி வெவ்வுயிர்க்கும்;... கீழ்க் கோட்டூர் வள்ளலே! மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தனே ! என்னும் என்மனனே ! 10-4

தோழி! யாம் செய்த தொழில் என் ? எம்பெருமான், துணை மலர்ச் சேவடி காண்பான், ஊழி தோறூழி உணர்ந்(து) உளங்கசிந்(து), நெக்கு நைந்(து) உளங்கரைந்து உருகும், கேழலும் புள்ளும் ஆகிநின்றிருவர் செழுவு கப்பலை செய்கீழ்க் கோட்டூர் வாழி மணியம்பலவனைக் காண்பான் மயங்கவும் மாவொழியோமே 10-5

[இது தோழியிடம் தலைவி கூறுவது]

தோழி யாம் செய்த தொழில் என் ?......மணியம்பலவனைக்
காண்பான் மயங்கவும் மாலொழியோமே 10-5
என்செய்கோம் தோழி !: தோழி ! நீ துணையாய் இரவு
போம்; பகல் வருமாகில், அஞ்சலோ என்றான்; ஆழியும்
திரையும் அலமருமாறு கண்(டு) அயர்வன்;......கீழ்க்
கோட்டூர் மஞ்சணி மணியம் பலவவோ ! என்று மயங்கு
வன்மாலையம பொழுதே 10-6

[இது தலைவி தோழியிடம் தன் நிலையைக் கூறித் தளர்வது]

இது "பொழுதுகண்டு இரங்கல் என்னும் துறை"
தழைதவழ் மொழுப்பும், தவள நீற்(று) ஒளியும், சங்கமும்
சகடையின் முழக்கும், குழைதவழ் செவியுஞ் குளிர்
சடைத் தெண்டும் குண்டையும்......கீழ்க்கோட்டூர்
மழைதவழ் மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தர் தம்
வாழ்வு போன்றனவே 10-7
தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை, தமருகம் திருவடி
திருநீறு, இன்னகை மழலை கங்கை சோங்(கு) இதழி
இளம் பிறை குழை வளர் இளமான், [ஆகிய இவற்றை]
கீழ்க்கோட்டூர் மன்னவன் மணியம்பலத்துள் நின்றாடும்
மைந்தன் என் மனத்துள் வைத்தனனே 10-8
யாது நீ நினைவ(து) ? எவரை யாம் உடையது ? எவர்களும்
யாவையுந் தானாய், பாதுகை மழலைச் சிலம்பொடு
புகுந்(து) என், பனி மலர்க்கண்ணுள் நின்றகலான்......
மாதவன் மணியம்பலத்துள் நின்றாடும் மைந்தன் என்
மனம் புகுந்தானே ! 10-9

[இது தலைவி தோழியிடம் உரைத்தது]

அந்திபோல் உருவும் அந்தியிற் பிறை சேர், அழகிய சடை
யும் வெண்ணீறும் சிந்தையால் நினையிற் சிந்தையுங்
காணேன்; செய்வ(து) என் ?......கீழ்க்கோட்டூர், வந்த
நாள் மணியம்பலத்துள் நின்றாடும், மைந்தனை அறியும்
என் மனமே 10-10

[இதுவும் தலைவி தோழியிடம் உரைத்தது]

மணியம்பலத்துள் நின்றாடும். மைந்தன் ஆரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடுமாலை பெரியவர்க்(கு)
அகலிரு விசும்பில், முத்தியாம் என்றே உலகவர் ஏத்து
வரேல், முகமலர்ந்(து) எதிர்கொளும் திருவே ! 10-11

---

பதிக எண் 12.

திரைலோக்கிய சுந்தரம். நீரோங்கி.

ஆசிரியர் : கருவூர்த்தேவர்.

### தலைவி கூற்று 1, 2

நீரோங்கி வளர்கமல நீர்பொருந்தாத் தன்மையன்றே, ஆரோங்கி முகமலர்ந்தாங்(கு) அருவினையேன் திறம்மறந் தின்(று), ஊரோங்கும் பழிபாரா(து) உன்பாலே விழுந் தொழிந்தேன்...கோடைத் திரைலோக்கிய சுந்தரனே! 12-1

நையாத மனத்தினனை, நைவிப்பான் இத்தெருவே, ஐயா நீ! உலாப் போந்த அன்று முதல் இன்று வரை, கையாரத்தொழு(து) அருவி, கண்ணூரச் சொரிந்தாலும், செய்யாயோ? அருள்கோடைத் திரைலோக்கிய சுந்தரனே! 12-2

### தோழி தலைவனிடம் கூறும் கூற்று 3-10

அம்பளிங்கு பகலோன்பால், அடைப்பற்றாய் இவள் மனத் தில், முன் பளிந்த காதலும் நின் முகந் தோன்ற விளங் கிற்றால்......செம்பளிங்கே பொழிற் கோடைத்திரை லோக்கிய சுந்தரனே! 12-3

மைஞ்ஞின்ற குழலாள் தன், மனந்தரவும் வளைதாரா(து) இஞ்ஞின்ற கோவணவன் இவன்செய்ததியார் செய் தார? மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம் மெய்ஞ்ஞிற்கும் பண்பினறு, செய்ஞ்ஞன்றியிலன் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே! 12-4

குழலாள் தன் மனந்தரவும் வளைதாரா(து) இஞ்ஞின்ற கோவணவன்......செய்ஞ்ஞன்றியிலன் 12-4

மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம் மெய்ஞ்ஞிற்கும் பண்பினறு செய்ஞ்ஞன்றியிலன் 12-4

நீ வாரா(து) ஒழிந்தாலும், நின்பாலே விழுந்தேழை, கோவாத மணிமுத்தும் குவளைமலர் சொரிந்தனவால், ஆவா! என்(று) அருள் புரியாய்; அமரர் கணம் தொழு தேத்தும், தேவா! தென் பொழிற் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே! 12-5

முழுவதும் நீ ஆயினும் இம் மொய் குழலாள் மெய்ம் முழுதும் பழுதெனவே நினைந்தோராள் பயில்வதும் நின் ஒரு நாமம் அழுவதும் நின் திறம் நினைந்தே, அதுவன்றே, பெறும் பேறு; செழுமதில் சூழ் பொழிற்கோடைத் திரை லோக்கிய சுந்தரனே! 12-6

தன்சோதி யெழு மேனித் தபனியப் பூஞ்சாய்க் காட்டாய்
உன்சோதி எழில் காண்பான் ஒலிடவும் உருக் காட்டாய்
துஞ்சா கண் இவளுடைய, துயர் தீருமாறுரையாய்,
செஞ்சாலி வயற் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே ! 12·7
அரும் பேதைக்கு அருள்புரியா(து) ஒழிந்தாய், நின் அவிர்
சடைமேல் நிரம்பாத பிறைதூவும் நெருப்பொடும் நின்
கையிலியாழ் நரம்பாலும் உயிர் ஈர்ந்தாய்......திரை
லோக்கிய சுந்தரனே 12·8
ஆருத பேரன்பினவருள்ளங் குடிகொண்டு, வேருகப்பலர்
சூழ வீற்றிருத்தி அது கொண்டு, வீருடி இவள் உன்னைப்,
பொதுநீப்பால் விரைந்தின்னம்,தேருள்,தென்பொழிற்
கோடைத் திரைலோக்கிய சுந்தரனே ! 12·9
சரிந்த துகில், தளர்ந்த இடை அவிழ்ந்தகுழல், இளந்
தெரிவை, இருந்தபரி(சு) ஒருநாள் கண்(டு) இரங்காய்
எம்பெருமானே !......திரைலோக்கிய சுந்தரனே ! 12·10
ஆரணத் தேன் பருகி அருந்தமிழ் மாலை......கருவூரன்
தமிழ் மாலை......ஈரைந்தும் போற்றிசைப்பார் காந்
தாரம்......திரைலோக்கிய சுந்தரனே ! 12·11

பதிக எண் 16.

தஞ்சை இராசராசேச்சரம்.

ஆசிரியர் : கருவூர்த்தேவர்.

நற்றாய் இரங்கல் துறை.

அருளுமாறருளி ஆறுமாருள அடிகள்தம் அழகிய விழியும்,
குருளும் வார் காதும் காட்டி யான்பெற்ற குயிலினை
மயல் செய்வ(து) அழகோ ? 16·6

பதிக எண் 23.

2. கோயில் - பவளமால் வரை.

ஆசிரியர் : திருவாலியமுதனர்.

தலைவி கூற்று

பவளமால் வரையைப் பனிபடர்ந்தனையதோர் படரொளி
தருநீறும் குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்னு பொற்குழல் திருச்சடையும்......தில்லையுள் திரு
நடம் புரிகின்ற தவள வண்ணனை நினைதொறும் என்
மனம் தழல் மெழு(கு) ஒக்கின்றதே 23·1
தில்லையுள் திருநடம் புரிகின்ற தவள வண்ணனை நினை
தொறும் என் மனம் தழல் மெழு(கு) ஒக்கின்றதே. 23·1

ஒக்க ஒட்டந்த அந்தியும், மதியமும் அலைகடல் ஒலியோடு,
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப் பாய்தலும் நிறையழிந்(து)
இருப்பேனை......தில்லையுள் திருநடம் வகையாலே
பக்கமோட் டந்த மன்மதன் மலர்க்கணை படுந்தொறும்
அலர்ந்தேனே. 23-2

அலந்து போயினேன்......மலர்ந்த பாதங்கள் வனமுலை
மேலொற்ற வந்தருள் செய்யாயே. 23-3

மருள் செய்(து) என்றனை வனமுலை பொன்பயப்பிப்பது
வழக்காமோ?......கங்கையைத் திருச்சடைச் சேர்த்தி
அச் செய்யாளுக்(கு) உருவப் பாகமும் ஈந்து நல்லந்
தியை ஒன்னு தல் வைத்தோனே! 23-4

தில்லையம்பலத்தானைப் பத்தியாற் சென்று கண்டிட என்
மனம் பதைபதைப் பொழியாதே 23-5

தேய்ந்து மெய் வெளுத்(து) அகம் வேவந்(து), அரவினை
அஞ்சித்தான் இருந்தேயும், காய்ந்து வந்து வந்(து)
என்றனை வலிசெய்து கதிர் நிலா எரிதூவும் ஆய்ந்த
நான்மறை அந்தணர் தில்லையுள் அம்பலத்(து) அரன்
ஆடல் வாய்ந்த மாமலர்ப் பாதங்கள் காண்பதோர்
மனத்தினை உடையேற்கே 23-6

உடையும் பாய் புலித்தோலும் நல்அரவமும். உண்பதும்
பலி தேர்ந்து, விடைய(து) ஊர்வது மேவிடங்கொடு
வரை ஆகிலும் என்நெஞ்சம்......தில்லை அம்பலத்து
அலவாடும் உடைய கோவினை அன்றி மற்(று) ஆரையும்
உள்ளுவ(து) அறியேனே 23-7

அறிவும் மிக்கநல் நாணமும் நிறைமையும் ஆசையும்
இங்குள்ள, உறவும்பெற்ற நற்றாயொடு தந்தையும்,
உடன்பிறந்தவரோடும், பிரிய விட்டுனை அடைந்தனன்,
என்று கொள் பெரும்பற்றப் புலியூரின் மறைகள்
நான்குங் கொண்டந்தணர் ஏத்த நன்மா நடம் மகிழ்
வானே! 23-8

'வான நாடுடை மைந்தனே'! ஓ என்பன்; 'வந்தருளாய்'
என்பன். 'பால் நெய் ஐந்துடன் ஆடியபடர் சடைப்
பால் வண்ணனே! என்பன்; தேனமர் பொழில் சூழ்
தரு தில்லையுந் திருநடம் புரிகின்ற ஏன மாமணிப்
பூணணி மார்பனே! எனக் கருள் புரியாயே! 23-9

தில்லையுள் பூசுரர் பலர்போற்ற எரியதாடும் எம் ஈசனைக்
காதலித்(து)* இனையவள் மொழியாக......திருவாலி
பரவல் பத்திவை வல்லவர் பரமன(து) அடியினை
பணிவாரே 23-10

* இளம் பெண்ணாகிய தலைவி.

பதிக எண் 25.

## 4. கோயில் கோலமலர்.

ஆசிரியர் : திருவாலியமுதனார்.

### தலைவியின் கூற்று

கோலமலர் நெடுங்கட் கொவ்வை வாய்க்கொடி ஏரிடை யீர்! பாலனை இன்னமுதைப் பரமாய பரஞ்சுடரை; தில்லை மாநகர்ச் சிற்றம்பலத்(து) ஏலவுடை எம் மிறையை என்று கொல் காண்பதுவே? 25-1

காண்பதியான் என்று நொல்; சதிர் மாமணியைக்கனலை ஆண் பெண் அருவுரு என்று அறிதற்கரி தாயவனை; தில்லை மாநகர்ச் சிற்றம்பலம், மாண்புடை மாநடஞ் செய் மறையோன் மலர்ப் பாதங்களே 25-2

அயனெடுமால் பணிய ஒள்ளெரியின் நடுவே உருவாய்ப் பரந்தோங்கிய சீர்ச் (சிற்றம்பலத்துள்ளெரியாடுகின்ற) ஒருவனை யுணர்வரிதே 25-3

அரிவையோர் கூறுகந்தான்; அழகன்; மால்கரியின் உரிவைநல் உத்தரியம் உகந்தான், உம்பரார் தம்பி ரான். புரிபவர்க் கின்னருள் செய் புலியூர்த் திருச் சிற்றம்பலத்(து) எரிமகிழ்ந்தாடுகின்ற எம்பிரான் என் இறையவனே. 25-4

இறைவனை என்கதியை என்னுள்ளே உயிர்ப்பாகி நின்ற மறைவனை வான்சுடராய் மலிந்த தில்லை மாநகர்ச் சிற்றம்பலம் நிறையணியாம் இறையை நினைத்தேன் இனிப்போக்குவனே! 25-5

நினைத்தேன் இனிப் போக்குவேனோ? நிமலத்திரளை நினைப் பார் மனத்தினுளேயிருந்த மணியை மணி மாணிக் கத்தை தில்லை மாநகர்க் கூத்தனையே. 25-6

கூத்தனை, வானவர்தம் கொழுந்தைக், கொழுந்தா யெழுந்த மூத்தனை, மூவுருவின் முதலை; அந்தணர் தில்லை அம்பலத்துள் ஏத்த நின்றாடுகின்ற எம்பிரானடி சேர்வன் கொலோ? 25-7

சேர்வன் கொலோ? அன்னைமீர்! திகழும் மலர்ப் பாதங் களை ஆர்வங் கொளத் தழுவி அணிநீ(று) என்முலைக் கணிய தில்லை மாநகர்ச் சிற்றம்பலத்(து) ஏர்வங்கை மான் மறியன் எம்பிரான் என்பால் நேசனையே. 25-8

**இது தலைவி யிரங்கல் [அன்னையரே என்பது நற்றாயையும், செவிலித்தாயையுங் குறிப்பது]**

தேசமுடையவர்கள் நெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால் விடையூர் கண்ணுதலைக் காமரு சீர்த்
தேசமிகு புகழோர் தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஈசனை, எவ்வுயிர்க்கும் எம்மிறைவன் என்(று) ஏத்துவனே. 25-9
இறைவனை ஏத்துகின்ற இளையாள் மொழிந்(த) இன்
தமிழால் மறைவல நாவலர்கள் மகிழ்ந்தேத்து சிற்றம்
பலத்தை அறை.........அணியாலைகள் சூழ்மயிலை மறை
வல ஆலி சொல்லை மகிழ்ந்தேத்துக வாளெளிதே. 25-10

பதிக எண் 26

கோயில் வாரணி.

ஆசிரியர்: புருடோத்தம நம்பி.

வாரணி நறுமலர் வண்டு கெண்டு, பஞ்சமம் செண்பக
மாலை, வாரணி வனமுலை மெலியும் வண்ணம் வந்து
வந்திவை நம்மை மயக்குமாலோ; சீரணி மணிதிகழ்
மாடம் ஓங்குதில்லை அம்பலத் தெங்கள் செல்வன்
வாரான்; ஆறெனை அருள் புரிந்(து) அஞ்சல் என்பார்?
ஆவியின் பரமென்றன் ஆதரவே. 26-1
ஆவியின் பரம் என்றன் ஆதரவும், அருவினையேனை விட்(டு)
அம்ம! அம்ம! பாவி! வன்மன மிது பையவே போய்ப்
பனி மதிச்சடையான் பாலதாலோ? நீவியும் நெகிழ்ச்சி
யும், நிறையழிவும் நெஞ்சமும் தஞ்சமிலாமையாலே!
ஆவியின் வருத்தம் இதாரறிவார்? அம்பலத்து அருள்
நடம் ஆடுவானே! 26-2
அம்பலத்தருள் நடம் ஆடவேயும் யாது கொல் விளைவ
தென்று அஞ்சி நெஞ்சும், உம்பர்கள் வன்பழியாளர்
முன்னே ஊட்டினர் நஞ்சை என்றேயும் உய்யேன்......
வன்பல படை யுடைப்பூதஞ் சூழ்வானவர் கணங்களை
மாற்றியாங்கே, என் பெரும் படலைமை தீரும் வண்ணம்
எழுந்தருளாய் எங்கள் வீதியூடே. 26-3
எழுந்தருளாய் எங்கள் வீதியூடே ஏதமில்முனிவரோ(டு)
எழுந்த ஞானக், கொழுந்ததுவாகிய கூத்தனே! நின்
குழையணி காதினில் மாத்திரையும், செழுந்தட மலர்
புரைகண்கள் மூன்றும் செங்கனிவாயும், என் சிந்தை
வெளவ, அழுந்தும் என் ஆருயிர்க்(கு) என் என் செய்
கேனோ? அரும்புனல் அலமருஞ்சடையினானே! 26-4
அரும்புனல் அலமருஞ்சடையினானை அமரர்கள் அடி
பணிந்(து) அரற்ற அந்நாள் பெரும்புரம் எரி செய்த
சிலையின் வார்த்தை பேசவும், நையும் என் பேதை

நெஞ்சம்.........வண்டார் காரிகையார் முன்(பு) என்
பெண்மை தோற்றேன் திருந்திய மலரடி நசை யினூலே. 26-5
என்னுயிர்காவல் கொண்டிருந்த எந்தாய் !.........பாத
மென்மலரடி நோவ நீ போய் அல்லினில் அருநடம்
ஆடில் எங்கள் ஆருயிர் காவலிங்(கு) அரிது தானே ! 26-6
அமரர்கள் குறைவிலாதார் அவரவர் படுதுயர் களைய
நின்ற, சீருவரே ! எங்கள் தில்லை வாணு ! சேயிழை
யார்க்(கு) இனி வாழ்வரிதே. 26-7
சேயிழை யார்க்கினி வாழ்வரிது; திருச்சிற்றம்பலத்(து)
எங்கள் செல்வனே ! நீ தாயினும் மிக நல்லை என்
றடைந்தேன்; தனிமையை நினைகிலை சங்கரா ! உன்
பாயிரும் புலியதளின் உடையும் பைய மேலெடுத்த
பொற்பாதமுங் கண்(டு) ஏயிவள் இழந்தது சங்கம்
ஆவா ! எங்களை ஆளுடை ஈசனேயோ ! 26-8

இது தலைவி காதலால் இரங்கிக் கூறியது.

எங்களை ஆளுடை ஈசனேயோ இளமுலை முகம் நெக
முயங்கி நின்பொற் பங்கயம் புரைமுகம் நோக்கி
நோக்கிப் பனிமதி நிலவதென் மேற் படரச் செங்கயல்
புரை கண்ணிமார்கள் முன்னே திருச்சிற்றம்பலமுடனே
புகுந்து, அங்குள பணிபல செய்து நாளும் அருள்
பெறின் அகலிடத் திருக்கலாமே. 26-9
எங்கள் கூத்தை மருள்படும் மழலை மென்மொழி......உமை
யாள் கணவனை வல்வினை யாட்டியேனுன் அருள்பெற
அலமரும் நெஞ்சம் ஆவா ! ஆசையை அளவறுத்தார்
இங்காரே ? கொண்டேத்தவல்லார் மலைமகள் கணவனை
அணைவர்தாமே. 26-10
அம்பலத்(து) அருநடம் ஆடுவானை வாசநன் மலரணி
குழல் மடவார் வைகலுங் கலந்தெழு மாலைப்பூசல்......
...வண்புருடோத்தமன் கண்டுரைத்த வாசக மலர்கள். 26-11

பதிக எண் 27.

2. கோயில் வானவர்கள்.

ஆசிரியர் : புருடோத்தம நம்பி.

வானவர்கள் வேண்ட வளர் நஞ்சை உண்டார் தாம்
ஊனமிலா என் கை ஒளி வளைகள் கொள்வாரோ......
தில்லைச்சிற்றம்பலவர் நாணமரோ என்னுதே நாடகமே
ஆடுவரே. 27-1
ஆடிவருங் காரரவும், ஐம்மதியும், பைங்கொன்றை சூடி
வருமா கண்டேன்; தோள் வளைகள் தோற்றுலும் தேடி

யிமையோர் பரவும் தில்லைச்சிற்றம்பலவர் ஆடிவரும் போதருகே நிற்கவுமே ஒட்டாரே. 27-2

தில்லைச் சிற்றம் பலவர் கொட்டா நடமாடக் கோல் வளைகள் கொள்வாரே. 27-3

ஆரே இவை படுவார்? ஐயங்கொள வந்து, போரேடி என்று புருவம் இடுகின்றார்; தேரார் விழவோவாத் தில்லைச் சிற்றம்பலவர், தீரா நோய் செய்வாரை ஒக்கின்றார்; காணீரே. 27-4

காணீரே என்னுடைய கைவளைகள் கொண்டார் தாம் சேணார் மணிமாடத் தில்லைச்சிற்றம் பலவர், பூணார்வன முலைமேல் பூ அம்பால் காமவேள், ஆணுடுகின்றவா கண்டும் அருளாரே. 27-5

ஏயிவரே வானவர்க்கும் வானவரே என்பாரால், தாயிவரே எல்லார்க்குந் தந்தையுமாம் என்பாரால், தேய் மதியஞ் சூடிய தில்லைச் சிற்றம்பலவர், வாயினைக் கேட்டறிவார் வையகத்தார் ஆவாரே. 27-6

ஆவா! திருவடி கொண்டு அந்தகன்றன்.........உடலவி யக்கொன்றுகந்த முக்கண்ணர்.........தில்லைச் சிற்றம் பலவர் கோவா இனவளைகள் கொள்வாரோ என்னையே. 27-7

தில்லைச்சிற்றம் பலவர் முன்னம் தான் கண்டறிவார் ஒவ்வார் இம்முத்தரே. 27-8

முத்தர் முது பகலேவந் தென்றன் இல்புகுந்து பத்தர் பலியிடுக என்றெங்கும் பார்க்கின்றார். தில்லைச் சிற்றம் பலவர் கைத்தலங்கள் வீசி நின்றாடுங்கால் நோக்காரே. 27-9

நோக்காத தன்மையால் நோக்கிலோம் யாமென்று .........சிற்றம்பலவர் ஊர்க்கே வந்(து) என்வளைகள் கொள்வாரோ? ஒண்ணுதலீர்! 27-10

ஒண்ணுதலி காரணமா உம்பர் தொழுதேத்தும் கண்ணுதலான் தன்னைப் புருடோத்தமன் சொன்ன பண்ணுதலைப் பத்தும் பயின்றாடிப் பாடினார், எண்ணுதலைப்பட்(டு) அங்(கு) இனிதா இருப்பாரே. 27-11

பதிக எண் 28.

9. கோயில் சேவலாம்.

ஆசிரியர் : சேதிராயர்.

இப்பதிகம் சிவபெருமானிடத்துக் காதல் கொண்ட பெண்ணின் நற்றாய் கூறின மொழிகளாக அமைந்தது; அந்தாதித் தொடையது.

[illegible] வயல் தில்லையுளீர்! உமைச், சால நாள் அயன்
[illegible]ரால் இவள், வேலையார் விடம் உண்டு உகந்தீர்
[illegible]மாலதாகும் என் வாணுதலே. 28-1

[illegible] கொடி மலதுவாய் மிக நாணம் அற்றனள்
[illegible] அறியேன் இனிச்சேணுதற் பொலி தில்லையுளீர்!
[illegible]ணில் எய்ப்பிலள் காரிகையே! 28-2

[illegible] அருளீர்: கருமால்கரி ஈருரித்தெழு, போர்வை
[illegible] மிகு, சீரிய தில்லையாய்! சிவனே! என்று வேசி
[illegible] இவள் வி[illegible]மே. 28-3

[illegible] வெய்துயிர்த்(து) ஆளெனு, உம்மையே
[illegible](கு) ஏத்துமொல(று)ம் ஆகிலள், செம்மலோர்
[illegible] தில்லையுளீர்! எங்கள் அ[illegible]மல் ஓதி அயர்வுறுமே. 28-4

[illegible](று) அஞ்சலி கூப்பி அந்தோ! எனை, உயவுன்
கொன்றையந்தார் அருளாய் எனும் செயலுற்றார் மதில்
தில்லையுளீர்! இவண் மயலுற்றாள் என்றன் மாதிவளே 28-5

[illegible] கூறன் வண்டார் கொன்றை மார்பன் [illegible](று)
[illegible]றில் உய்வன் ஒண்பைங்கிளியே! எனும் சேதித்தீர்!
[illegible] நான்முகனைத் தில்லை, வாதித்தீர் என் மடக்
கொடியையே. 28-6

[illegible]க் கோமளச் சாதியைக் கொம்பிளம் பிடியை
[illegible] செய்திட்டீர்? பலகத்தார் புரம், இடியச் செஞ்
[illegible]கால் வளைத்தீர்! என்று, முடியும் நீர்செய்த
[illegible]ர்ச்சறவே. 28-7

அறவனே! அன்று பன்றிப் பின்னேகிய மறவனே! எனை
[illegible]தை செயயேல் எனும்; சிறைவண்டார் பொழில்
தில்லையுளீர்! எனும், பிறைகுலாம் நுதற்பெய் வளையே! 28-8

[illegible]முருக்கனைப் பல்லிறுத்(து) ஆனையைக், கொன்று
காலனைக் கோளிழைத்தீர் எனும்; தென்றலார்
பொழில் தில்லையுளீர்! இவள், ஒன்றும் ஆகிலள் உம்
பொருட்டே. 28-9

வையுமாறெழிற் சேதிபர்கோன் தில்லை, நாயனாரை நயந்
துரை செய்தன, தூய வாறுரைப்பார் துறக்கத்திடை
ஆய இன்பம் எய்தி இருப்பரே. 28-10

## குறிப்பு

### 7 எண்ணுள்ளவை தவிர ஏனைய எண்களில் சிவபிரான் தலைவன் ஆவார் தலைவனைக் குறிக்கும் சொற்கள்

[7-எண்ணுள்ளவை முருகவேளாம் தலைவனைக் குறிக்கும்]

## தலைவன் வர்ணனை



## தலைவனை விளித்தல் [இறைவன்]



## தலைவியின் ஆடை அணிகலன்

## தலைவி தன்னைக் குறிப்பது



## தலைவியைக் குறிக்கும் சொற்கள்



## தலைவி பிறமாதர் அவயவ வர்ணனை



*இளமான் - அன்னவர்: அனே - அ(ன்)னே

## தலைவி பிறமாதர் வர்ணனை



## தலைவியின் வேண்டுகோள்



## நற்றாயைக் குறிக்குஞ்சொல்



## செவிலித்தாய் தலைவியைக் குறிக்கும் சொற்கள்



## காமத்தை வளர்ப்பன

யாழ் இசை

தின்கையில் யாழ் நரம்பாலும் உயிர் ஈர்ந்தாய் 12-8

மடல்

மடல் பனை மடலால் செய்த குதிரை

மடலேறுதல்

இஃது அகப்பொருள் துறையில் ஒன்று. ஆடவர்க்கே உரியதாயினும் கடவுள் சம்பந்தமாய்ப் பெண்களுக்கும் கொள்ளப்படும். "மடன் மாப்பெண்டிர் ஏறூர்; ஏறுவர் கடவுளர் தலைவராய் வருங்காலே"

[பன்னிரு பாட்டியல் சூத்திரம் 147]

எந்தை உடைப்பெயர்க்கெதுகை சாற்றி,
அந்தமில் இன்பம் பொருளா ஏத்திப்,
பொருளும் அறனும், வீடும் பழித்து,
மடல்மா ஏறுதல் மாதர்க் குரித்தே,
—பன்னிரு பாட்டியல் மேற்கோள் 103

விரகதாபந்திற்படும் தலைவியை வாட்டுவன

1. அன்றில் 3-5
2. கங்குல் 3-5
3. கடல் - திரைவீரை 3-5
4. குழல் - தீங்குழல் 3-5
5. சேவின் மணி 3-5
6. திங்கள் 3-5
7. தென்றல் - செழுந்தென்றல் 3-5

செழுந்தென்றல் அன்றில் இத்திங்கள், கங்குல் திரைவீரை, தீங்குழல், சேவின் மணி எழுந்தின்(று) என்மேல் கையாட வாழும் எனை. 15-5

# சு. (1) பாடினேர் பகுதி

## பாடினேர் வரலாறும் அவரவர் தம்மைப் பற்றி நூல் அகத்துள் கூறியவையும்

திருஇசைப்பா பாடினவர் ஒன்பதின்மர். அவர் தம்முள்.

## 1. திருமாளிகைத் தேவர்

**வரலாறு:**

இவர் சைவ சமயத்தை நன்கு வளர்த்துப் போற்றினவர்* பல வகைய சித்திகளைப் பெற்றவர். சைவசித்தாந்த நூல்களை ஆய்ந்து உணர்ந்த பெரியார். திருஆவடுதுறை ஆதீன மடாலயத்துள் இவருக்குத் தனிக்கோயில் இருக்கின்றது. இவர் தில்லைக் கூத்தப் பெருமானை வழிபட்டுப் பாடியனவாக திரு இசைப்பாப் பதிகங்கள் நான்கு உள்ளன. இவர் சிவனைப் போற்றுதவரையும் திருநீற்றைப் போற்றுதவரையும் வாயார வைகின்றார். இவரைப் பற்றிய வேறு பல விவரங்களை திருப்பனந்தாள் திரு இசைப்பாப் பதிப்பிற் (1964) காணலாகும்.

### இவர் தம்மைப்பற்றி நூலகத்திற் கூறியவையும் வேண்டுகோள்களும்

**பதிகம் 1. கோயில்**

இப்பதிகத்தில் அம்பலத்து அரசை விளித்துத் தாம் செய்யும் வேண்டுகோள்களைப் பின் வருமாறு தெரிவிக்கின்றார்.

ஒளிவளர் விளக்கே! அம்பலம் ஆடரங்காக வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே. *1·1*

அம்பலக் கூத்தா! அயனொடு மாலறியாமைப் படரொளி, பரப்பிப் பரந்து நின்றாயைத் தொண்டனேன் பணியுமா பணியே. *1·2*

---

* இப்பகுதியின் அநுபந்தம் பார்க்க.

அம்பலத்தாடி! கற்பமாய் உலகாய் அலையானுயைத் தொண்டனேன் கருதுமா கருதே 1-3
அம்பலத்தமுதே! ஒருமையிற் பலபுக் குருவிநின்றுயைத் தொண்டனேன் உரைக்குமாறுரையே 1-4
அம்பலஞ்செம்பொற் கோயில் கொண்டாட வல்லானே! ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத் தொண்டனேன் நணுகுமா நணுகே 1-5
அம்பலத்தரசே! ஏறணி கொடியேயம் மீசனே! உன்னைத் தொண்டனேன் இசையுமா றிசையே 1-6
அம்பலத்தமரசேகரனே உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன் நுகருமா நுகரே 1-7
அம்பலவா! புறஞ்சமண் புத்தர் பொய்கள் கண்டாயைத் தொண்டனேன் புணருமா புணரே 1-8
அம்பலத்தாடும் சொக்கனே! எவர்க்குந் தொடர்வரியாயைத் தொண்டனேன் தொடருமா தொடரே 1-9
அம்பலத்தரசே! விடங்கொள் கண்டத்தெம் விடங்கனே உன்னைத் தொண்டனேன் விரும்புமா விரும்பே 1-10
அம்பலத்துள் நிறை தரு கருணை நிலயமே! உன்னைத் தொண்டனேன் நினையுமா நினையே 1-11

## திருமாளிகைத் தேவரும் சிவனும்

பதிகம் 1-2-4.

அண்டவாணு, நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை என்னுடை நாவினல் நவில்வான், அற்பனென் னுள்ளத்தளவிலா வுன்னைத் தந்த பொன்னம்பலத்தாடி 1-3
இடர் கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள் இருட்பிழம்பற வெறிந் தெழுந்த......தூய நற்சோதியுட் சோதி 1-2
எங்கள் காலகாம நாசா. 1-5
சித்தத்துள் தித்திக்கும் தேனே. 1-1
தமியேன் நற்றவத் தாய் 1-5
திறப்பிய பிறவிச் சில தெய்வ நெறிக்கே திகைக்கின்றேன் றனைத் திகையாமே நிறம் பொன்னும் மின்னும் நிறைந்த சேவடிக்கீழ் நிகழ்வித்த நிகரிலா மணியே 1-8
பெருமையிற் சிறுமை பெண்ணொடாணாய் என் பிறப்பிறப் பறுத்த பேரொளியே! 1-4
மறைகளும் அமரர்கூட்டமும் மாட்டாது) அயன் திருமாலொடு மயங்கி முறைமுறை முறையிட்(டு) ஓர்வரியாயை மூர்க்கனேன் மொழிந்த புன்மொழிகள் 1-11

காமனைக் காலன் தக்கன் மிக்கெச்சன் படக் கடைக் கனித்தவன் அல்லாப் பேய் மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர் தொண்டனேன். 2·11
ஈசன் நேசத்(து) இருந்த சித்தத்தினேன் 4·1
எட்டுரு விரவி யென்னை ஆண்டவன். 4·2
உருக்கி என் உள்ளத்துள்ளே ஊறலந்தேறல் மாறாத் திருக் குறிப்(பு) அருளும் தில்லைச் செல்வன். 4·7

பதிகம் 2

பெருமானுடைய திருவடிமுதல் திருமுடிவரையில் சிறப் பித்துக் கூறுவதால் இது பாதாதிகேசப் பதிகம் [22 - ஆம் பதிகமும் இவ்வாறே]

## திருமாளிகைத் தேவர் கோயில்

### பாதாதி கேசம் :—

மயர்வறும் அமரர் மகுடந் தோய் மலர்ச் சேவடிகளென் மனத்து வைத்தருளே. 2·1
சிற்றம்பலக் கூத்தா; உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும் உன்னடிக் கீழ(து) என்னுயிரே 2·2
சிற்றம்பலக் கூத்தா! நிரந்தரம் முனிவர் நினை திருக் கணைக்கால் நினைந்து நின்றொழிந்ததென் நெஞ்சே 2·3
சிற்றம்பலக் கூத்தா! வாரமலி முலையாள் வருடிய திரண் மாமணிக்குறங் கடைந்ததென் மதியே 2·4
சிற்றம்பலக்கூத்த! பொறையணி நிதம்பப் புலியதளாடைக் கச்சு நூலி புகுந்ததென் புகலே 2·5
சிற்றம்பலக்கூத்த! மதுமதி வெள்ளத் திருவயிற்றுந்தி வளைப் புண்டென்னுள் மகிழ்ந்தது நேவ 2·6
சிற்றம்பலக் கூத்த! உருமரு(வு) உதரத் தனிவடந் தொடர்ந்து கிடந்த(து) என் உணர்வுணர்ந்(து) உணர்ந்தே 2·7
சிற்றம்பலக் கூத்த! அணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய சோதியுள் அடங்கிற்(று) என் அறிவே 2·8
சிற்றம்பலக் கூத்த! கருவடி குழைக் கா(து) அமலச் செங்கமல மலர் முகங் கலந்த(து) என் கருத்தே 2·9
சீர்கொள்கொக்கிறகும் கொன்றையும் துன்று சென்னிச் சிற்றம்பலக் கூத்த! நீர் கொள் செஞ் சடை வாழ் மதி புது மத்தம் திகழ்ந்த என் சிந்தையுள் நின்றந்தே. 2·10

## திருமாளிகைத் தேவரும் பூதகணங்களும்

[சிவ கணங்கள்]

சிற்றம்பலக் கூத்த! பூமலர் அடிக்கீழ்ப் புராண பூதங்கள் பொறுப்பர் என்புன் சொலின் பொருளே　2-11

குறிப்பு:—புராண பூதங்கள் *உருத்திர பல்கணத்தார் ''என் புழிப் போல [சிவனடியார்கள்]

பதிகம் 3

## திருமாளிகைத்தேவர் - கோயில்

இது அகப்பொருட் பதிகம்; இதுபற்றி அகப்பொருட் பகுதியிற் காண்க.

பதிகம் 4

## சிவனடியார்களையும், திருநீறு இடாதவர்களையும் வைதல்

கீழ்க்குறித்தவர்களைக் காணு கண், வாய் பேசாது அப் பேய்களோடே என்கின்றார்

தில்லை வாணன் மணவடியார்கள் வண்மைக் குணங்களைக் கூறுவீறில் கோறைவாய்ப் பீறற் பிண்டப் பிணங்களைக் காணு கண் வாய் பேசா(து) அப் பேய்களோடே　4-1

தில்லை வேந்தனைச் சேர்ந்திலாத துட்டரைத் தூர்த்த வார்த்தைத் தொழும்பரைப் பிழம்பு பேசும் பிட்டரைக் காணு கண் வாய் பேசா(து) அப் பேய்களோடே　4-2

அம்பலத்தாடுகின்ற......எம்மான் இன்பருக்(கு) அன்பு செய்யா அரட்டரை அரட்டுப் பேசும் அழுக்கரைக் கழுக்களாய பிரட்டரைக் காணு கண் வாய் பேசா(து) அப்பேய்களோடே　4-3

அம்பலத்தாடிக் கல்லாச் சிறுக்கரைச் செத்தற் கொத்தைச் சிதம்பரைச் சித்தை ஊத்தைப் பிணுக்கரைக் காணுகண் வாய் பேசா து) அப்பேய்களோடே　4-4

தில்லைக்கூத்(து) உகந்து தீய நசிக்க வெண்ணீற(து) ஆடும் நமர்களை நணுகா நாய்கள் அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதரைப் பேதவாதப் பிசுக்கரைக் காணு கண் வாய் பேசா(து) அப்பேய்களோடே　4-5

* சம்பந்தர் - திருமயிலைப் பதிகம் 1　2-47-1

அம்பலத்(து) அமிர்தே! என்னும் சேடர் சேவடிகள் சூடத் திருவிலா உருவிலாரைச் சாடரைச் சாட்கை மோடச் சழக்கரைப் பிழக்கப் பிட்கப் பேடரைக் காணா கண் வாய் பேசா(து) அப்பேய்களோடே 4-6

தில்லைச் செல்வன் பாற் செல்லும் செல்வில் அருக்கரை அள்ளல் வாய கள்ளரை அவியாப் பாவப் பெருக் கரைக் காணா கண் வாய் பேசா து) அப்பேய்களோடே 4-7

தில்லைச் சொக்கர் அம்பலவர் என்னும் சுருதியைக் கருத மாட்டா எக்கரைக் குண்ட மிண்ட எத்தரைப் புத்தராதிப் பொக்கரைக் காணா கண் வாய்பேசா(து) அப்பேய்களோடே 4 8

அம்பலவற் கல்லாக் கச்சரைக் கல்லாப்பொல்லாக் கயவரைப் பசுநூல் கற்கும் பிச்சரைக் காணா கண் வாய் பேசா(து) அப்பேய்களோடே 4-9

அம்பலவன் கொற்ற அரசனுக்(கு) ஆசை இல்லாத் தெருளா உள்ளத் து) இருளரைத் திட்டை முட்டைப் பெண்ணரைக் காணா கண் வாய் பேசா(து) அப்பேய்க ளோடே 4-10

தில்லைச் செம்பொன் அம்பலவற்(கு) ஆளாம் உறைப்புடை யடியார்க்கீழ்க்கீழ் உறைப்பர் சேவடிநீ(று) ஆடார் இறப்பொடு பிறப்பினுக்கு இனியராய் மீண்டும் மீண்டும் பிறப்பரைக் காணா கண் வாய் பேசா(து) அப் பேய்களோடே 4-11

## திருமாளிகைத்தேவர் தம்மைக் குறிக்கும் சொற்கள்

பதிகம் 1-4

| | |
|---|---|
| அற்பன் | 1-8 |
| தமியேன் | 1-5 |
| தவப்பெருந் தொண்டர் தொண்டனேன் | 2-11 |
| தொண்டர் தொண்டனேன் | 2-11 |
| தொண்டனேன் | 1 |
| மூர்க்கனேன் | 1-11 |

# 2. சேந்தனார்

1. வரலாறு

திருஇசைப்பா 29 பதிகங்களுள் "சேந்தனார்" பாடியுள்ளது 4 பதிகங்கள்

1. திரு வீழிமிழலை பதிக எண் 5

2. திரு ஆவடுதுறை பதிக எண் 6
3. திருஇடைச்கழி பதிக எண் 7
4. கோயில் [திருப்பல்லாண்டு] பதிக எண் 29

இவர் தம்மை "செப்புறைச் சேந்தன்" எனக் கூறியுள்ளார்
"செப்புறைச் சேந்தன் வாய்ந்த சொல் இவை சுவாமியையே
எனவும் திரு இடைக்கழி 7-11

"சிவன்சீர் அடியார் அடிநாய் செப்புறை அந்தமில் ஆனந்தச்
சேந்தன்" 29-13
என்றும் தம்மைக் குறித்துள்ளார்

இவரை 'வீழிச் சேந்தனார்' என்றும் கூறுவர். இவரும் பட்டினத்தடிகளிடம் கணக்கராக இருந்த சேந்தனாரும் ஒன்றோ வேறோ என்பது ஆராயும் நிலையிலுள்ளது

